உ
ஓம் தத் ஸத்
ஸ்ரீ பரப்பிரஹ்மணே நம.

ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமிகளின்

அருள் மொழி திரட்டு

இஃது
கோவிலூர் மடம்

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளின்
பாத சேகரர்

ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமிகள்
அவர்களால் எழுதப்பெற்று

★

ஸ்ரீ அம்பிகா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

★

இப்புத்தகம் கிடைக்குமிடம் :

ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமிகள் சஜ்ஜன பண்டு சங்கம்
ராமாஸ்ரமம், குகை, சேலம்-6

சாதாரண ஆண்டு
1970

உ

ஓம் தத் ஸத்

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"


மதிப்புரை

"மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்னும் பொய்யா மொழிக்கிணங்க மக்களுக்கு சத்துவகுணம் மேலோங்கி நிற்கும்போது, அமிர்தவடிவமான எண்ணங்களையே எண்ணுகின்றனர். அதுசமயம் அவர்களுடைய சொல்லும், செயலும் சிறப்புடையதாய் அமைகின்றது. விவேகி புருஷர்கள் ரஜோ, தமோ குணங்களுக்கு ஆதரவு தாராமல், சத்துவ குணமே மேலோங்கச் செய்துகொண்டு புனிதமும் புகழும் பெற்று மேலோர் ஆகிவிடுகின்றனர். அவ்விவேகி புருஷர்களது பொன்மொழிகள், மக்கள் உள்ளத்தில் பதிந்து சாதாரண மக்களையும் உயர்நிலைக்கு கொண்டு செல்கின்றன. ஆகவே சத்துவகுண சீலர்களாக வாழும் விவேகி புருடர்களிலும் நைட்டிக பிரம்மசரியத்தோடு குருமுகமாக, அகண்டார்த்தத்தைக் கேட்டறிந்து குணாதீதனாக நிலைத்திருக்க அப்யாசத்தில் முயலும் முமுக்ஷுகள், பல்லாயிரம் மடங்கு உள்ளத்தை உயர்த்திக்கொண்டவர்கள் ஆகின்றனர். மேலும் மக்களால் போற்றப்படும் நிலை பெறுகின்றனர். அப்படிப்பட்டவர்களுடைய உள்ளமும், உரையும், செயலும் அமிர்தவடிவமாகவே அமைகின்றன. மெய்ப்பொருளில் நிலைத்த மனமுடையவர்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்து வெளிவரும் வசனங்கள், அமிர்தமொழிகளாக விளங்குவதால் கேட்போர்களுடைய உள்ளத்தை விரைவில் புனிதப்படுத்துகின்றன.

இவ்வித மகாத்மாக்களின் தரிசனமே பாப விமோசன மாதம். "சாதுதரிசனம் பாப விமோசனம்" என்பது மறைமொழி. ஆகவே, நைட்டிக பிரம்மசரியத்துடன் குருமுகமாக சாஸ்திரார்த்தங்களை நன்கு கேட்டறிந்து, பிறருக்கு போதித்து மக்களை திருத்தி அமைத்தவர், சேலம் ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமிகள் என்னும் நம்குருநாதர் ஆவார். சுரோத்திரிய பிரம்ம நிஷ்டா பண்டிதரான நம் சுவாமிகள், சேலம் ஸ்தலமலை அத்வைதாஸ்ரமத்தில் தியானத்தில் இருக்கும்போது, அகண்டைகரச சொருபத்தில் நிலைத்த மனமுடையவராய் இருந்து, சித்தம் பகிர்முகம் படும்பொழுது, உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை தினம் ஒன்றாக 1938, 1939, 1940 ஆகிய மூன்று வருடங்களின் காட்குறிப்பில் எழுதியுள்ள "அருள் மொழிகளை" அருள் மொழி திரட்டு என்ற பெயரால் புத்தக வடிவத்தில் "ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமிகள் சஜ்ஜன பண்டு சங்கத்தாரால்" வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தை அதிகாரிகளும், சாதாரண மக்களும், தாய்மார்களும் ஆதரவுடன் வாங்கிப் படித்து அனுபவத்திற்கு கொண்டுவர முயல்பவர்கள் மெய்ஞ்ஞானிகள் ஆவார்கள் என்பது சர்வ நிச்சயம்.

நெரூர்,
1—6—70.

சதாசிவாநந்த.



ஸ்ரீலஸ்ரீ. ராமசாமி ஞானதேசிக சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ ராமசாமி சுவாமிகளின்

அருள்மொழிகள்

1. ஆனந்தமே திருமேனியாக எழுந்தருளி, யாண்டும் ஞானவெள்ளம் பொழிந்தருள் நின் திருவருளைக்கண்டு களிக்குமாறு செய்க. நான் அகண்டைகரச மௌனனென நின்ற வண்ணம் நிலைபெறுத்துக. நினைக்க நினைக்கப் புதிய இன்பந் தருவது ஆன்மா ஒன்றே. மற்றவை, பரிணமியாதலின், துக்க சொரூப முடையவாகலின், அவைகளின் நினைவு துன்பமே தரும். இது நிச்சயம்.

2. அனைவருள்ளும் அந்தரியாமியாயிருந்து அனைத்தும் நீயே செய்வதானல், யாரை நேசிப்பது யாரை துவேஷிப்பது. யாண்டும் நீயேயெனக் கண்டு களிப்பதே, என் உள்ளக்கிடக்கை. தேகமுதல் சகலமும் மாயிகமென நிதர்சனமாக வறிகின்றேன். அதனல் பயனற்ற உலக காரியங்களில் விருப்பமில்லை. சரீரம் புழுவடிவமாதலால், அறிவுடையார் மற்றொரு சரீரத்தைத் தேட இச்சியார்.

3. பசுக்கள் நாநு நிறமுடையனவாயினும், பால் ஒரே நிறமாகவேயிருக்கும். அதுபோல் உலகப்பொருள் நாநு வகையாகக் காக்ஷிதரினும், அவைகளின் ஆதாரமான இறைவன் ஒரே சச்சிதானந்தனேயாவன். தன்னையறியாதவன் செய்யும் காரியங்கள் யாவும், தடையுடையனவேயாகும். தன்னையறிந்தவன் செய்யும் காரியம் தளராத தன்மையுடையதாகும்.

4. இன்று கோவிலூர் ஸ்ரீ நாராயண ஸ்வாமிகள் விதேக கைவல்லியமடைந்தது. வச்சிரம் போன்ற உனது ஆணையால், சூரிய சந்திராதி சகல பிரம்மாண்டங்களும், தனது நியமந்தவராது வேலை செய்து வருவதே, நான் யதார்த்தமாகக் காண்கிறேனாதலால், உனது ஆணைக்கு இவ்வற்பனும் அறிவீனனுமாகிய ஜீவன் நடப்பது மிக்க நலமன்றோ. மனம் பொன்போல் விவேகத் தீயால் காய்ச்சக் காய்ச்ச, மிக்க சக்தியும் தளரா உறுதியும் பெற்று ஒளி விடுகின்றது.

5. நமக்கு வரும் நன்மையுந் தீமையும், நமது நன்மைக்கே. இன்று தொப்பையா முதலியாரிடமிருந்து வந்த கடிதமுந் தந்தியும், நாராயணஸ்வாமிகளது திருமேனியின் அசௌக்யத்தைப் பற்றி வந்தது. எறிந்த கல் கீழேவிழும்; பிறந்தவர் அவசியம் இறப்பர். பெரியோர்களின் ஜீவனம், பருத்துப்பழுத்து நிழலைத் தரும் விருக்ஷத்தினும் ஆயிரம் மடங்கு அதிகம் உலகோபகாரமானது.

6. மனத்தை உலகவிஷயங்களில் அதிகமாகப் பழக்கி சஞ்சலமடையப்பழக்கிவைத்தால், சாறுபிழிந்த கரும்பு சக்கை போல் வலுவற்று விடுகிறது. ஆன்மாகாரமாக்கி நிலைக்கச் செய்தால், மரக்கரிபொடி வைரமாதல்போல் விலைமதிக்கவொண்ணாதகுதியும் திண்மையும் பெறுகிறது. சாறுபிழிந்த சக்கை குப்பைக்குத்தான் உதவும். விஷய பழக்கமனம் பெரியோர்களால் விலக்கித் தள்ளத்தான் தகுதியுடையதாம்.

7. பிரம்மச்சரியம் நிலைத்த மனிதனது வாழ்க்கை எத்துறையிலும் உயர்த்தப்படுகிறது. அஃதில்லாத வாழ்க்கை எத்துறையிலும் தாழ்த்தப்படுகிறது. மரணதிசை வந்தபோது யாருடைய முகம் விருந்தினரைக் கண்டது போல்

சோபிக்கிறதோ, அவர்களுக்கு எங்கும் ஆனந்தமே. துன்பந்தரும் பொருள் யாண்டும் அவருக்கில்லை. பொருத்தாரைப் பொன்னேபோல் உலகம் பொருந்தும்.

8. பூரண நிராசையுடைய தீரனுக்குமுன், சர்வ உலகங்களையும் ஆளும் சக்ரவர்த்தியும் அவன் செல்வபோகமும் திரணமேயாம். நிராசையினும் உயர்ந்த பொருள் எவ்வுலகத்துமில்லை. ஆசையைப் பார்க்கினும் தாழ்ந்த பொருள் யாதுமின்று. யாருக்கும் சாஸ்திரப்பயிற்சி ஆரம்பத்தில் கஷ்டமாகவே யிருக்கும். சில நூறு செய்யுள்கள் மனனஞ்செய்து பாடங்கேட்டுவிட்டால், பின்னர் யாவும் சுலபமாகும். ஞான சாத்திரமும் அவ்வாறேயாகும்.

9. ஒரு மழைத்துளி பூமியில் விழுந்தால் சுவறிவிடும். தாமரையிலையில் விழுந்தால் அப்படியே யிருக்கும். முத்துச் சிப்பியின் கருப்பத்தில் விழுந்தால் விலையுயர்ந்த முத்தாகும். ஒரே மனம், வீணே உண்டுறங்கி நாட்களைக் கழித்தால் வியர்த்தமாகும். வெறும் ஆசார சீலமாக வாழ்ந்தால் மனிதனாகவே வந்து கொண்டிருக்கும். ஆத்மானுபவம், ஈஸ்வர. குருவழிபாடு, பிரம்மச்சரியம், இவைகளைக் கொண்டால் உயர்ந்த பேரின்பம் பெறும்.

10. இன்று காலை 7 மணிக்கு திருக்களரில் இருந்து, ஸ்ரீ பொன்னம்பலஸ்வாமிகளால், ஸ்ரீ நாராயணஸ்வாமிகள், செவ்வாய்க்கிழமை 21-ம் உ விதேக கைவல்லியமடைந்ததாகவும், ஷ மாதம் 30-உ வியாழக்கிழமை மோக்ஷதீபம் நடப்பதாகவும், கடிதம் கிடைத்தது. ஓ! மனமே! நீ பொன்னே போல் போற்றி வந்த பெரியோரின் சரீரம் நீங்கியது. ஆனால், நீ முன்னினும் தீவிரமாக வைராக்கிய தியானாதிகளைச் செய்துவந்து பரமசாந்தியையடைய முயலுதி. இதுவே பெரியாரின் உயர்ந்த பூஜையாகும்.

11. ஒருவனுக்குச் சுகம் வரும்போது அதில் அனேகர் பங்கெடுத்துக்கொள்ளுவர். துக்கம் வந்தால் அதில் ஒருவரும் கிஞ்சித்தும் எடுத்துக்கொள்ளார். தனது அகங்காரத்தை வென்றவனே சுத்த வீரன். அவனே ஆனந்த வடிவ ஆன்மாவைப் பெற்றவனுவான்.

12. கடவுளை யறிவதற்கு மனத்தூய்மையே வேண்டப்படுகிறது மற்றையயாகிய ஆடம்பரங்கள் யாதொன்றும் அன்பார்ந்த பரனை யறிய பயன்படாது.

13. வினு. தருக்கம்
வரத:கிராஹ்யம்
(267) தியானம் ஞானசாதனம்
ஜீவன் முக்திப் பிரயோசனம் 5ல்
இரண்டுசத்தை ஞானியின் திருஷ்டி:
சகல அவித்தை ஈஸ்வர உபாதி என்பது.

ஒருவனது நல்லொழுக்கமே உற்ற துணையாகும், தீயாழுக்கமே சத்துருவாகும்.

திருக்களரில் ஸ்ரீ நாராயணஸ்வாமிகளுக்கு 10ங் கிரியை நடந்தது.

14. மனிதன் பிறந்தது மிருக போகங்களுக்கல்ல. நித்ய பேரின்பவீடு அடைவதற்கேயாகும். வீட்டையடைய சாத்தியமில்லையாயினும், அதற்குறிய அங்கங்களையாவது தேடிவைத்தல் வேண்டும்.

15. வாங்க வேண்டியவை:—

அத்வைத போததீபிகை, சர்வ தரிசன சங்கிரகம், ராகத் துவேடப் பிரகரணம், வேதாந்த பரிச்சீதம், 15வது அத்தியாயம் கீதை, பகவத் கீதை, (நாகரி) பதவுரை, திருவாசகம், சுபானுபவத் திருவாக்கு, ஔவை குறள்,

திருவோடு. தளிர்த்த மரத்தில் கழுகடைவதில்லை. மொட்டை மரத்தில்தான் வந்துட்காரும். அதுபோன்று, எவ்வனத்தில் ஆசைகளை அனுபவிப்பதற்கேற்ப, வாசனைகள் வயோதிகத்தில் வந்தடைகின்றன.

16. அனேக கோணல்களையுடைய வீணையில், அதிக ரசமான இனிய இசை அடங்கியுள்ளது. நானு விகாரமுடைய இவ்வுலகத்தில் ஆனந்த வடிவ ஆன்மா மறைந்துள்ளது.

17. நிராசையுள்ளவனல் செய்யப்படும் சுப காரியங்கள் யாவும், பூரண முடிவையடையும். ஆசையுள்ளவனல் செய்யப்படும் எக்காரியமும் பூரண முடிவையடையா.

18. தன்னை வென்றவனல் உலகுமுழுவதும் வெல்ல முடியும். தன்னை வெல்லாதவன் ஒரு சிறு விலங்கையும் அடக்க வல்லவனுகான்.

19. சாந்த மனத்தில், முடிந்த விவேகமே உண்டாகின்றது. கோர மனத்தில், பிரதிபந்தமும், பலனற்றதுமான விவேகமே உண்டாகின்றது.

20. எம்மதத்தினரும், எவ்வருணத்தவரும், எவ்வாஸ்ரமத்தவரும், சத்தியத்தினின்றும் வழுவ சம்மதிப்பதில்லை. ஆதலால், சத்தியம் சகலருக்கும் பொது தர்மம். சத்தியத்தால் எல்லா நன்மையும் பெறலாம். இது ஓர் உயரிய ஆயுதமாகும்.

21. கங்கை நீர், எவ்வித துர்நாற்றபதார்த்தம் தன்னிடத்து வந்தாலும், தான் கெடுவதில்லை. அதுபோல, பெரியோர்

எத்துணை தீயோரால் துன்புறுத்தப்பெறினும், தாம் துன் புறுர். ஆனந்தராகவே வீற்றிருப்பர்.

22. ஸ்வாமி விவேகானந்தர் ஜனனக்கொண்டாட்டம் இத்திரு நாளன்ருகும். (ஜனிவரி மீ 22-உ) ஸ்வாமி விவேகானந்தரின் ஜனனத்தால், இந்தியாவின் வைதீக அத்வைத சிறப்பு பன்மடங்கதிகமாயிற்று. இப்பெரியாரைப் போல் நல்ல குருபக்தியுள்ளவர் இவ்வுலகில் சிலரேயாவர்.

23. கிளி போன்ற பக்ஷிகள் மனிதர் கூட்டுறவால் தன் இனிய இனத்தை யிழந்து மனிதரது ஆக்ஞைக்குட்பட்டு, பசுமையான இலைவிருக்ஷங்களையும், பழம் அருந்துந் தன்மையையும் விட்டுக் கூட்டில் அடைபட்டு பலநாளாக இத்துன்ப வாழ்க்கையைப் பழக்கத்தால் நலமெனவெண்ணி சிறுவரோடு கத்தி ஆயுளை வீணே ஒழிக்கின்றன. மனிதனும் ஆனந்த வடிவத் தன்னியல்பை மறந்து விட்டொழித்து சரீரவடிவக் கூட்டில் அகப்பட்டவன் போலாகி இத்துன்ப வாழ்க்கையையே சுகமெனப் பிரமையாலெண்ணுகின்ருன்.

24. சமைப்பதெல்லாம் உண்பதற்கே ; படிப்பதெல்லாம் ஆனந்த நிலையைக் காணும் சமாதியின் பொருட்டே. புரண்டு வேகமாகச் செல்லும் ஆற்றொழுக்கில் மீன் எதிர்த்துச் செல்லுகின்றது. உலக விவகாரம் வேகமாகப் பலதுறையிலும் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றது. நாம் பரநிலையை நாடித்தளராது உற்சாகத்தோடு மேலே செல்லுவோம்.

25. பார்ப்பதெல்லாம் பரமான்மாவெனக்கண்டால் காமாதி துர்க்குணங்கள் உண்டாகா. மனத்திற்கு ஒரு

நல்ல காரியத்தைச் செய்யப் பழக்காவிட்டால், துர் வினியோகக் காரியங்களைப்பழகி அதனால் துன்பமடையும். ஆதலால், புத்திமான், கடவுளன்பு, குருபத்தி, தத்துவ விசாரம், ஆன்ம நாட்டம், மனத்தை நிலைக்கச் செய்யும் பிரயத்தனங்கள், இவைகளால் நலமாக்க வேண்டும்.

26. சிலர், வேதாந்த வடிவ ஆன்மாவைச் செவ்வையாக அநுஷ்டிக்காத குற்றத்தால், பராக்குடையராய்த் துக்கிகளாகின்றனர். சிலர், மருந்துண்போன், பத்தியமிருந்தல் போல மனவடக்கம், இந்திரிய நிக்கிரகம், இவை முதலிய சதாசாரத்தால் நாளுக்குநாள் உன்னத நிலைபெற்று, ஆனந்த வடிவமேயாகி வாழ்கின்றனர். முதலவர் முயற்சியற்றவர். பின்னவர் முயற்சியுற்றவர்.

27. தூலசரீர இந்திரியங்களின் அடக்கம்; அவைகளின் அடக்கத்தால் மனவமைதி; அதனால் ஆனந்தானுபவம்.

28. கனிந்த பழத்தில் ரசமுண்டு, சுத்தசத்துவமனத்தில் ஆனந்தமுண்டு.

29 குழந்தைகளின் சொல்கேட்க இனிமைதரும், முதிர்ந்தோர் செய்காரியம் நன்றாயிருக்கும். ஞானிகளின் சொல், செய்கை இரண்டும் நல்ல பயனையும், இனிமையையுந்தரும். சமுத்திர ஜலத்தால், தாகசாந்தியாகாது. ஊற்றுஜலத்தால், தாகசாந்தியாகும். சஞ்சலமான பெரிய வியாபாரங்களால், மனோசாந்தி உண்டாகாது. திருத்தமும் உபகாரமுமான சிறியசெய்கையால் சாந்தியுண்டாம்.

30. மலத்தில் உழலும் புழுவைப்போன்றது மூட அஞ்ஞானியின் சுபாவம். சாணியிலும் மண்குழியிலும் உழலுவது போன்றது சுவல்ப விவேகியின் சுபாவம். தேனீ

போன்றது ஞானியின் சுபாவம். கல்லைப்போன்றவன் கருமி. ஜலத்தைப் போன்றவன் பக்தன். ஆகாயம் போன்றவன் ஞானி.

31. இன்று மஹோதய புண்யகாலம். புண்ணியத்தின் பலன் சுகம். ஒருவனுக்குத் தன் குரு, தன் உபாசன மூர்த்தி அல்லது தன் சொரூப அகண்டைகரச ஆன்மா, இவைகளின் அநுசந்தானத்தால் உண்டாகும் ஆனந்தமே உயர்ந்தது. மற்றைய தீர்த்தஸ்னானதிகளின் பலன் பரோக்ஷம். அது சாதாரண ஜனங்களுக்குரியது. ஆன்மாவில் மூழ்குவதே மஹாமஹோதயஸ்னானம். சுகம் பிரத்தியக்ஷம்.

32. எண்ணைபடிந்த கடிதத்தில் எழுதும் எழுத்து சம்பந்தியாது. வெறும் கடிதத்தில் எழுத்துக்கள் சம்பந்திக்கும். ஆன்மானந்தம்பெற்ற மனத்தில் உலகவியவகாரம் சம்பந்தியாது. (வாசனையாகத் தொடராது). அஞ்ஞானியின் மனத்தில் உலகவியவகாரம் படியும்.

33 நங்கூரம் கப்பலின்மேல் இருந்தால் கப்பல் போகலாம். நங்கூரம் கீழேதொங்கவிடப்பட்டால், கப்பல் அசையாது நின்றுவிடும். மனம் சரீர ஆகாரமானல், பல வியாபாரங்களில் ஈடுபடும். மனம் ஆழ்ந்த ஆன்மாவில் நிலைத்துவிட்டால், சகல தத்துவமும் அசைவற்று நின்றுவிடும்.

34. கள்வன், தன்னைக்கள்வன் என்று தெரிந்தவடரிம் களவு செய்யமுடியாது. நல்லவனென்று ஏமாற்றமடைந்தவரிடம் களவு செய்யமுடியும். மாயை, தன்னை மாயை, பொய்சடம், எனத்தெரிந்தவரிடத்துத் தனது நடனம் பலியாது. தன்னைத்தெரியாது அவிவேகத்தால் சத்தியம்

என்று எண்ணுபவரிடம் தனது நாடகங்களையெல்லாம் நடித்துக்காட்டும்.

35. சமுத்திரத்தின் அலை நீங்கியபின் ஸ்னானஞ்செய்ய நினைப்பாரில்லை. அநுகூலப்பிரதிகூல பதார்த்தங்கள் என்றும் தரிசனம் தந்தேதீரும். ஆனால், விவேகி அவைகளைப் பொருட்படுத்தாது ஆனந்தவடிவ பரமான்மாவில் மூழ்கிவிடுகிறான்.

36. கற்பகதருநிழலில் சென்றாலும், புண்ணியத்துக்கேற்ற சம்பத்தே உண்டாகும். சுரோத்திரிய பிரஹ்மநிஷ்ட உத்கிருஷ்ட பெரியாரை ஒருவன் அடைந்தாலும், சிஷ்யனது பக்குவத்திற்கேற்ற பலனே உண்டாகும்.

37. குயில் கருப்பானாலும் அதன் ஓசை இனிமையைத் தருகிறது. சரீரம் துர்நாற்றம் முதலிய தீய சாமான்களால் சேர்க்கப்பட்டதேயாயினும், இதனுள் **ஆன்மா** பரமானந்தமாக நிறைந்துள்ளது

38. தசரதன் ஸ்ரீராமனுக்குப் பட்டங்கட்ட வேண்டுமென்றும், மிக்க ஆசை கொண்டனர். அவ்வாசையான மென்றும், கைகேயி பரதனுக்குப் பட்டங்கட்ட வேண்டுமென்றும் மிக்க ஆசைகொண்டனர். அவவாசையான தோஷத்தால், இருவருக்கு அல்லது ஒருவருக்காவது பட்டாபிஷேகம் செய்ய முடியவில்லை. பாதுகைக்குத்தான் கிடைத்தது. **நிராசையால்** இராமன், பரதன் இருவரும் சுகமடைந்தனர்.

39. இராக மோகங்களால் துன்பமுண்டென்பதற்கும், நிராசையால் சுகமுண்டென்பதற்கும், தசரதனும், கைகேயியும், இராமனும், பரதனும் உதாரணமாவர்.

40. **நிறைகோல்** (தராசு) ஜீவர்கள், தம்தம் வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு (சுகதுக்கம்) வருங்காலத்தில் நிறைகோல் போல நிற்கவேண்டும்.

41. பசு, தன் கழுத்திலிடப்பட்ட பூமாலையை, அவிவேகத்தால் வாசனையுள்ளபோதும், கெட்டு நாற்றமெடுத்த போதும், வைத்துக் கொண்டிருக்கும். கழற்றி எறிய அறியாது. சிறுவர், அதனை வாசனையுள்ளபோது வைத்திருந்து, நாற்றமெடுத்தால் கெட்டதென்றெடுத்து எறிவர். **விரக்தர்** இரண்டு போதும் தீண்டார். மூடர், செல்வமுள்ள போதும், கெட்டபோதும் வாசனையோடு கட்டுண்டு சாவர். **விவேகியர்**, செல்வம் கெட்டால் அதனை விட்டுப் பரனை நாடி நிற்பர். **ஞானியர்**, செல்வமே நாடார். பரமானந்தான்மாவையே அனுபவிப்பவராய் இருப்பர்.

42. மாமரம், தன் பிஞ்சு, காய், பழங்களுக்கு, ஒரே மாதிரிதான் ரசத்தைத் தருகிறது. ஒரே மரத்தின் ரசத்தை ஏற்ற பிஞ்சு, துவர்ப்பாகவும், காய் புளிப்பாகவும் பழம் இனிய ரசமாகவும் செய்து கொள்ளுகின்றன. **கடவுள்கிருபை** யாண்டும் ஒரேமாதிரியாக யாவருக்கும் பொழிந்துவருகின்றது. ஆனால், அவரவர் மனப் பக்குவத்திற்கேற்றவாறு அக்கிருபை பலன் தருகிறது.

43. பிரமசரியமற்ற சரீரம் சிற்றின்ப சாக்கடையாகும். பிரமசரியமுள்ள சரீரம் பேரின்ப நிலையமாகும். எவ்வகையிலும், உவமையற்றவன் இறைவனொருவனேயாகும்.

44. ஒருமணி நேரமாவது, மனித சரீரத்தில் ஜீவன் குடிகொண்டிருப்பதற்கு, முன் எத்தனையோ தவஞ்செய் திருத்தல் வேண்டும் என்பதை ஒருவன் நன்கு உணர்ந்தால் ஒரு நிமிஷமும் வீணுக்கத் துணியான்

45. ஓர் அன்னையின் ஐந்து புத்திரர்களில் சிலர், தின்பண்டம் வேண்டுமென்று அன்னையை வருந்தினர். அதற்கிணங்கி, தின்பண்டங்களை வகுத்துக்கொடுத்து வந்தாள். அச்சிறுவரில் ஒருவன் தனக்கு வேண்டா மென்று கூறினன். அதைக்கேட்ட அன்னை, அவனிடத்து அதிக அன்பும் இரக்கமும் உடையவளானுள். பரமேஸ்வரியின் அல்பஐஸ்வரியங்களில் யார் மனமின்றி வைராக்கியம் அடை கின்றனரோ, அவர்கள் இறைவனது திருக்கருணைக்குப் பாத்திரராவர்.

46. மரத்தின் அடிபாகத்துள் மேல்பட்டையைப் பிரித்து விட்டால், மூலவேர் தானே நாசமடையும். அகங்காரத்தை ஆனந்தவடிவ ஆன்மாவினின்று நன்ருகப் பிரித்துவிட்டால் அஞ்ஞானம் தானே நாசமாய்விடும்.

47. மனிதன் ஒரு பொருளை ஒருவனுக்குக் கொடுக்க நேர்ந்தபோது வருத்தமும், ஒருவரிடம் வாங்க நேர்ந்தபோது சந்தோஷமும், அடைகிருன். இவ்வெண்ணத்தால், மனிதன் தாழ்ந்தநிலையை யடைகிருன். ஒருவனுக்குத் தன் பொருளைக் கொடுக்கும்போது சந்தோஷமும், ஒருவரிடம் இலவசமாகப் பொருளை வாங்க நேர்ந்தபோது வருத்தமும், பெறுபவன், உயரிய நிலையையெய்துவான்.

48. தீபமும் எண்ணெயும் அழுக்கெண்ணெயால் எறியுந் தீபம் நன்ருக சொலிக்காது. தாமச ஆகாரத்தால் வளர்ந்த மனம் நல்ல விவேகமுடையதாகாது.

49. கண்ணுடி சுத்தமாயிருந்தால் படத்தின் உருவம் நன்ருகத் தெரியும். **சித்தம்** நன்ருகத் தெளிந்து விட்டால் சிவம் நன்ருக விளங்கும்.

50. ரஸமுள்ள பண்டங்களில் கிடந்து பிறருக்கும் பங்கிடவும் உதவும் அகப்பை, பண்டங்களின் இனிய ரஸத்தையறியாது. பரமானந்தப் பரமான்மப் பிரதிபாதக மான நூல்களின் ஆராய்ச்சியிலேயே புகுந்த மனம், ஆனந்த வடிவ ஆன்மரஸம் பெறுவது துர்லபம்.

51. பருவமல்லாத காலத்தில் விதைவிதைத்தால் பலன் தராது. பக்குவமற்ற மனத்திற்கு, உபதேசத்தை எவ்வளவு சிரமப்பட்டு செய்தாலும், மோக்ஷமாகிய பயன் உண்டாக மாட்டாது.

52. நங்கூரம் கப்பலில் இருந்தால், அப்போது கப்பல் ஓடும். நங்கூரத்தைக் கப்பலிலிருந்து சமுத்திர ஜலத்தில் மூழ்க விட்டுவிட்டால், கப்பல் நின்றுவிடும். மனம் சரீரத் தைப்பற்றி நின்ருல், அங்குமிங்கும் அலையும். மனம் சரீராபிமானத்தை விட்டுப் பரமானந்தான்மாவில் மூழ்கி விட்டால் அதற்கேற்ற வியாபாரம் சாந்தமாம்.

53. மின்சார சக்தி, கம்பி எங்குமிருந்தாலும், நன்ருக விளங்குவதில்லை. பல்பு மாட்டின இடத்தில் நன்ருக விளங்கும். பரமான்மா எங்குமிருந்தாலும், விளங்குவதில்லை. அந்தக்கரணமுள்ள இடத்தில் விசேஷமாக விளங்கும்.

54. ஓர் குறங்கு மரத்தின்மேலிருந்துகொண்டு தன் சாயையைப் பூமியில்கண்டு அதனைத் தானென்றபிமானித்துச் சில சாகஸங்களைச் செய்தது. அதனை அங்கிருந்து பார்த்து வந்த புலி உபாயத்தால் அதனைத் தின்னவேண்டி குறங்கின் சாயையின்மேல் பாய்ந்தது. குறங்கு, தன்மேல் விழுந்ததாகப் பயந்து, கீழே விழுந்தது. உடனே புலி, குறங்கைச் சுலபமாகப் பிடித்துத் தின்றது. மனிதன், தூல தேகத்தை அபிமானிப்பதும் எமனுக்காளாவதும் இது போன்றதேயாம்.

55. ஏணியின் குச்சிகளில் கால்வைத்து ஏறுபவன், அக்குச்சிகளைக் கோர்த்திருக்கும் பக்கமரங்களைப் பிடித்தே ஏறவேண்டும். தியானம் செய்பவர் மனம் உன்னதக் காக்ஷியால் சூக்ஷுமமான அவஸ்தைகளைக் கிரமமாகக்கடந்து செல்லும்போது சகல அவஸ்தைகளின் ஆதாரமானப் பரம்பொருளையே பற்றிச்செல்லவேண்டும்.

56. கரும்புச் சத்திலிருந்துண்டான பாகமெல்லாம் நல்ல சுவையுடையனவே. வேம்பின் மரத்திலிருந்துண்டாகும் சகலமும் கசப்பானவையேயாகும். நற்கருமத்திலிருந்து விளையும் பலனெல்லாம் சுபமாகவேயிருக்கும். தீயகருமங்களிலிருந்து விளையும் பலனெல்லாம் துக்கமாகவேயிருக்கும். ஆதலால் நாம் நற்கருமங்களையே செய்தல்வேண்டும்.

57. பக்தன், பக்தியை இடைவிடாது செய்து வரும் போது பரமேஸ்வரனது திவ்யத் திருவருளை அவசியம் மனமாற ஓர்போது அனுபவித்தே தீருகிறுன். அதன்பின் அவன்எச்செய்கையிலும் திருவருள் நோக்கப்பேரின்பவாரி நிறைந்திருப்பதை சதா அநுபவித்தவண்ணமாக ஆனந்த கரஞகை வாழ்வான்.

59. தன் மனத்தை ஜெயிப்பவன்தான் சுத்த வீரனுவன். "இன்றிரவு சிவன் ராத்திரி விரத நாள்."

60. மோர்வார்தசத்து இராஜஸ்திரீகள், தங்கள் சாதி யின் இயல்பான வீரத்தாலும், கற்பின்சிறப்பாலும், தங்கள் ராஜ்ஜியம் நிலை குலையும்படியாயும், தங்கள் கணவன்மார் உயிர்விடும்படியாயும் நேர்ந்தபோது, வீரத்தோடு சிலர் ஆயுதம்தாங்கி யுத்தகளத்திலும் அக்கினியிலும் இறந்து சந்தோஷித்தார்கள். உத்தம அதிகாரியும் அவர்களைப் போன்று அஞ்சாதநெஞ்சுடையராய், விஷயவாசனு சத்துருக்களோடு போர் புரிந்து இறக்கவேண்டும்; அல்லது சிவாஜியைப் போல வெற்றி பெற்று **அகண்டானந்தஆன்ம** பூமிக்குரிய அரசனுக வேண்டும்.

61. ஸ்ரீ சத்குரு மஹாதேவரின் குளிர்ந்த சாந்தமும், அரிய அடக்கமும், உறுதி ஓர்ந்துரைக்கும் தகைமையும், எங்குங்காணும் **சர்வான்மதிருஷ்டியும்**, அடிமையைப் போன்ற சிலரது மனத்தைக் கவர்ந்துவிட்டது.

62. சிவாஜி, தான் செய்யும் சகலகாரியங்களையும், தேவி பவானியம்மையின் திருவருளின் வலிமையால் நடத்துவதாக கருதினுன். அதனுல், அம்மையின் அருளால் எல்லாவகை

58. **அகங்காரம்** வீழந்தால் ஆனந்தம் வெளியாம். பொன் வளையல் வாங்கும் கடைக்காரன், பொன்னின்மாற்றைக் குறிப்பால் கவனிப்பானேயொழிய, கோணல்முதலியவை களைக் கவனியான். சடப்பிரபஞ்சக் கோணல்களை உபேக்ஷித்து, **சச்சிதானந்த** பரதத்துவத்தையே **மனம்** நாடி நிற்றல் வேண்டும்.

யிலும் வெற்றியைப் பெற்றுன். அதிகாரியும் பரமேஸ்வர னின் திவ்விய **கிருபாகடாக்ஷம்** பெற்றுலன்றி பூரண ஞான வானுகமுடியாது.

63. திருத்தமாகவும் ஒழுங்காகவும் செய்பவனுக்கு, அக் காரியங்களிலிருந்தே சாந்தியும் கடவுள் கிருபையும் கிடைக்கிறது.

64. பொறுமை யுடையவன், சகல சிறப்பும் எய்துகிருன பொருமையும், துவேஷமுமுடையவன், சிறுமை யெய்து கிருன், முன்னவன் **தவம்** உடையவன், பின்னவன் **அவம்** உடையவன்.

65. ஓர் அன்னை இரு குழந்தைகளுக்கு முன் வாழைப் பழத்தின் சுளையை எடுத்து மறைத்துக்கொண்டு தோலை எரிந்தாள். விவேகமுள்ளவன் ரசமற்ற தோலை எடுத்து வீசியெறிந்துவிட்டுத், தாயை அணுகி பழச்சுளையைத் தரும்படி மன்ருடி வாங்கி உண்கிருன். மற்றவன், அவிவே கத்தால் தோலையேயெடுத்து மெல்லுகிருன். ஆனல், அதை அன்னை சகியாது வேண்டாமென்று தட்டுகிருள். அதை அவன் விடுகிருனில்லை. பின்னர், தாய் தன் கருணை யால் பிடுங்கி எறிந்துவிடுகிருள். அதற்கவன் அழுகிருன். இதுபோன்று, பரமேஸ்வரன் ஆனந்தரசவடிவ ஆன்மாவை மறைத்துக், கருமானுசாரம் அனித்திய ரசமற்ற உலக விஷயங்களைச் சீவர்களுக்குச் சமர்ப்பிக்கின்ருர். **விவேகியர்**, அதை விட்டெறிந்து பரமேஸ்வர கிருபையை பிரத்தியக்ஷ மாகக் கண்டு, அவரருளால் அகண்டைகரச ஆன்மானுபவம் பெறுகின்றனர். **அவிவேகியர்** ஈஸ்வர ஆக்ஞை வடிவ வேதத்தால் நன்ருக போதிக்கப்பட்டும், ரசமற்ற விஷய போகங்களையே யிச்சிக்கின்றனர்.

66. மாயாகாரிய ஜகத்து சொப்பனமென்ற அனுபவம் வந்துவிட்டால், அதிகமாக விசிராந்தியுண்டாகிறது.

67. மனத்தின் சொரூபத்தை நன்கு விசாரித்தாலும், அல்லது ஒரே வத்துவில் நிலைக்கச் செய்தாலும், மனத்தின் வடிவம் காணமுடியாது, அப்போது ஆனந்தானுபவம் உண்டாவதை விவேகி காணலாம்.

68. **முத்தன்** ஜீவித்திருக்கும்போதே தன் சரீரத்தைப் பிணமாகக் கண்டு, மிகுந்த சந்தோஷமடைகிறான். அவனுக்கு மரணமும் சரீரநீக்கமும் ஓர் விருந்தளிப்பதை விட, அனேக பங்கு குதூகலம் உண்டாகின்றது.

69. பாண்டவர்கள் தங்கள் நல்லொழுக்கத்தாலேயே ஸ்ரீபாண்டுரெங்கனது சகாயம் பெற்று, சகல நன்மையும் பெற்றனர். சகலரும், ஒழுக்கத்தால் கடவுள் கிருபையையும் பரமசிரேயசுவடிவமோக்ஷத்தையும், அவசியம் பெறத்தக்கவரேயாவர்.

70. சமுத்திரத்தின் அடிமட்டத்தில் பெரியதிமிங்கலங்கள் வாழும். மேல்மட்டத்தில் சிறிய மீன்கள் வாசம் செய்யும். நுண்ணறிவுடைய ஞானிகள், ஆழ்ந்த மனத்துடையராய்ச் சர்வாதிஷ்டான வடிவ **ஆன்மாவில்** நிலைத்திருப்பர். தூல மதியுடைய அஞ்ஞானி ஜீவர்கள், அனித்திய, சஞ்சல முடைய உலகில் வாழ்வர்.

71. பசுமையும் தளிரும் காயும் கொப்பும் நிறைந்த நீண்ட சிறிய கிளைகளை, வளைப்பது சுலபம். காய்ந்த மொட்டை யான கிளைகளை வளைப்பது, யார்க்கும் கூடாது. சிரத்தை, பக்தி, தியானம், வைராக்கியாதி சத்குணம் நிறைந்த

நுண்ணிய மனம், தியானத்தில் அதிசீக்கிரம் வசப்படும். தீயவாசையால் உலர்த்தப்பட்ட கெட்ட அகங்கார தடிப்புள்ள மனம், அடங்குவது கடினம்.

72. உடல் வலிமையுள்ளவரால் இரண்டொருவரையே ஜெயிக்கமுடியும். **மனவலிமையுள்ளவர்,** அனேகங்கோடி ஜனங்களேயும் மிருகங்களேயும் கூட ஜெயிக்கலாம்.

73. **அகங்காரத்தை** ஆனந்த வடிவ ஆன்மாவினின்றும் நன்ருகப் பிரிக்கப்பட்டுவிட்டால், தோலுரிந்த மரம்போல வாடி, தானே சாந்தியடையும்.

74. கடமுண்டாகும் போதே அதனுள், ஆகாயம் நிரம்பி நிற்கின்றது. அது பிரயத்தனத்தாலானதல்ல, சுபாவ சித்தமாம். ஆனல், அக்கடத்தில் ஜலம், அரிசி, முதலியவை நிரப்பியபோது ஆகாயம் இல்லாததுபோல அவிவேகிக்குத் தோன்றுகிறது. அவைகளே முயற்சியால் எடுக்கப்படின் சேஷித்திருப்பது நின்மலஆகாயம். சித்தமுள்ள இடமெல்லாம் சுபாவ சித்தமாக சிதானந்த ஆன்மா நிறைந்துள்ளது. அச்சித்தத்தில் ராகத்துவேஷாதி அனன்ம சாமான்களின் சமஸ்கார வடிவ குப்பையாகிய சாமான்கள் நிறைந்துள்ளபோது, ஆன்மா ஆனந்தவடிவமாக இருந்தும், அவிவேகிகளுக்கு இல்லாததுபோல் தோன்றுகிறது. அப்பியாசவலியால் களேந்தெரிந்தபோது சுபாவமாக சித்தத்துள் **ஆனந்தவடிவஆன்மா** உள்ள அப்போது அனுபவமாகின்றது.

75. தியானிகளுக்கு அவசியம் ஈஸ்வரக்கிருபையால் சுகல வாசனேயின்றிய **ஆனந்தான்மானுபவம்** வெளிப்படுகிறது. சிட்டுக்குருவி தன்முட்டைகளே சமுத்திர அலேயால்

ஜலத்தில் மூழ்கியபோது, தனது மூக்கினுல் சமுத்திர ஜலத்தை இறைக்க ஆரம்பித்தது. அது, தன் இனப்பக்ஷி யால் விலக்கப்பட்டும், தன் பிரயத்தனத்தை விடாது, மாருகத் தன் இனத்தையும் சேர்த்துக்கொண்டது. அவ் விந்தையைக்கண்ட நாரதபகவான், பக்ஷிராஜனை கருடனுக் கறிவிக்க, அவர் வருகையைக்கண்ட சமுத்திரம், அலை களால் முட்டையை வெளியில் கொண்டுவந்து தள்ளியது. குருவிகளும் சாந்தியடைந்தன. தியானிபுருஷன் கடவுட் கிருபையை நாடி ஞானமடையப் பிரயத்தனத்தை விடாது செய்துவரின், எவ்வாருவது அவசியம் கடவுள் கிருபையால் மனம் அடங்கப்பெற்று பரமானந்தவடிவ மோக்ஷம் அடையப் பெறுகிருன்.

76. புஷ்பத்தின் மணம் தோஷமின்றிய நாசிகைக்கு ஸ்பஷ்டமாக விளங்கும். பரிசுத்த மனத்திற்கு ஆன்மானந்தம் அபரோக்ஷமாம்.

77. சிறுபெண்கள் விளையாடும்போது ஒருவருக்கொருவர் அழுகிற விளையாட்டும் வந்துவிடும். அப்போது, இரண் டொரு சிறுவர் நன்ருக அழுவதுபோல நடிப்பர். ஆனல், அவர்களின் தாய் வரக்கண்டவுடன், மிகக்களிப்போடு பொய்யழுகையைவிட்டு பெரிய சிரிப்போடு களிப்பர். ஞானிகள் உலக வியவகாரங்களில் மற்றயரைப்போல ராகத்துவேஷங்களுடையவர்போல் நடிப்பர். ஆனல், ஆனந்தான்மானுபவ மிகுதியில் இடையிடையே வெளியி லும் சந்தோஷக்குறி காணப்படும். உள்ளில் கொஞ்சமும் திடமான துக்கம் உண்டாகாது.

78 பச்சை மரத்தில் தீ தானகப்பிடிக்காது. பக்கமிருந்து வரும் சுவாலையால் சிறிது கருகும். அதனல் அம்மரத்தின் குளிர்ச்சி கெட்டுவிடாது. காய்ந்த மரத்தில் தீப்பிடித்தால், அம்மரம் முழுமையும் தீயின் சுவாலே, பற்றி எரித்துவிடும். ஞானியின்கண், ராகத் துவேஷமிராது. பிறரால் ஏற்படினும் அதனல் அவன் அசைக்கப்படான். அவனது சுபாவ குளிர்ந்த ஞானனுபவத்தால், அந்த ராகத்துவேஷம் விருத்தியாக இடமில்லே. அஞ்ஞானியின்கண், ராகத் துவேஷம் தோன்றினபோது அவனது முச்சரீரங்களும் தபிப்பிக்கப்பட்டு, அத்தீய குணங்களால் வியாபித்தவனய் நாசத்தையடைவன்.

79. பழம் நன்ருகப் பழுத்துவிட்டால், காம்பைவிட்டு விழுந்துவிடும். நிஷ்காம புண்யம் நிறைந்திருந்தால், பொருள், பெண், ஆசையை மனம் தானேவிட்டுவிடும்.

80 அளவு கடந்து வளர்ந்ததாலும், அதிகக்குறைவாக வளர்ந்ததாலும், நல்ல பலனேத் தராது, மத்தியதரமாக வளர்ந்தது நல்ல பலனேத்தரும். அதிக கல்வியும் கல்வியே யில்லாதிருத்தலும் போதிய சாந்திதராது. போதுமான அளவோடு கூடிய கல்வியும் மற்றைய குணங்களும் பொருந்தியமனம் ஞானத்தில் நிலேபெறும்.

81. தங்கம் நல்ல பெட்டகத்திலாவது சேற்றிலாவது இருக்கலாம். எங்கிருந்தாலும் அதன் மாற்று குறையாது. ஞானி பாமரர் மத்தியிலாவது சாதுக்கள் மத்தியிலாவது இருக்கலாம். அவன்மனம் ஆன்மநிலேயை விட்டு விலகாது.

82. பூமியினுள் ஜலம் எங்குமிருக்கிறது. தோண்டின இடத்தில் வெளிப்படுகிறது, **ஆனந்தவடிவ ஆன்மா**

யாவருள்ளத்தும் நிறைந்துள்ளது. எவர்கள் அசுத்த வாசனையைக் களைந்து எதிர்த்தனரோ அவர்கள் உள்ளத்தில் ஸ்பஷ்டமாக விளங்குகிறது. பிறருக்கும் ஒருவாறு விளங்குகிறது.

83. தாகமுள்ளவன், பாசிநிறைந்த தடாகத்தைப்பார்த்து அருவருப்படையமாட்டான். பாசியை நன்றாக விலக்கி, உள்ளே சுத்தமாயிருக்கும் ஜலத்தை பானஞ்செய்வான். மோக்ஷதாகமுள்ளவன் **அபிமான வடிவமான வாசனை**, தியானகாலத்தில் கண்டதுகொண்டு பயந்துவிடமாட்டான். **விவேக** வாயிலாகத் தள்ளி ஆனந்தகரமான ஆன்மசுக வடிவனுவன்.

84. பசுவின் அங்கங்களில் பாலில் நிறைந்துள்ள சூக்ஷ்ம மான நெய் அதன் வியாதிக்கு மருந்தாக உபயோகப்படு கிறது. கறந்து, காய்ச்சி, கடைந்து எடுத்தால் உபயோகம் ஆகும். ஆனந்தவடிவ ஆன்மா, தன்சரீரத்துள்ளே இருப்ப தானுலும், தனக்கு அனுபவமாகாது. விவேக தியானுதி களால் கடைந்ததனுல் அபரோக்ஷமானபின் ஆனந்தானு பவம் உண்டாகி, சமுசார துக்கவடிவ வியாதிபோகும்.

85. பூசுனைப்பூ, பூக்கும்போதே பிஞ்சோடு வரும். பிஞ்சுயின்றிய பூ காய்க்காது. மகான்கள் பிறவி ஆரம்பத் திலேயே தகுந்த உயர்வினை யுடையதாயிருக்கும். அங்ஙன மல்லாரது பிறவி ஆரம்பத்திலேயே பயனற்றதாயிருக்கும்.

86. பாலோடு சர்க்கரை சேர்ந்தால் இன்சுவையுண்டா கிறது. ஞானிகளுக்கு நல்ல சுபகுணங்கள் சேர்ந்திருந்தால் அப்பெரியாரை யாரும் விரும்புவர்.

87. வியாதியுடையவனுக்கு, ஆகாரத்தில் அருவருப்பு உண்டாகும். மலினவாசனையால் அதிக சஞ்சலமுடையவனுக்குப், பாரமார்த்திக ஆன்மவிஷயமான வார்த்தை, மிக அருவருப்பாகத் தோன்றும்.

88. நறுமணமுள்ள மலர்களை யாரும் விரும்புகின்றனர். சுத்த வாசனையுள்ள ஞானியை யாவரும் போற்றுகின்றனர்.

89. வெல்லத்தை எவ்வகையாக மாற்றி உபயோகித்தாலும், தன்னிடத்துள்ள தீஞ்சுவையை விடாது நிற்கும். ஞானி, பிராரத்தனுசாரமாக, எவ்வகை சுபகாரியங்களைச் செய்யினும் அவனது ஞானனுபவ ஸ்திதி கெடாது.

90. வியாதியுள்ளவன் ஔஷதத்தில் சிரத்தைவைத்து புசித்தலால் அதிசீக்கிரம் வியாதி குணமடையும். முமூக்ஷு குருவின் வாக்கியத்தில் சிரத்தை வைத்தலால் அதிசீக்கிரம் பிரதிபந்தங்கள் நீங்கி ஞானத்தைப்பெறுவன்.

91. விக்கிரகங்களில் மாத்திரம் கடவுளைக் காணுபவர் மந்த மதியினர். கடவுள் எங்கும் நிறைந்தவரெனக் காண்பவர் மத்திம புத்தியினர். கடவுள் **சச்சிதானந்த** இலக்கணமுடைய **அகண்டவஸ்து**வெனக் காண்பவர் உத்தம மதியினர். பஞ்சகோச சாக்ஷிவடிவினனும், பிரபஞ்ச சாக்ஷி சொரூபமும் சச்சிதானந்த வடிவமுமாதலின என்றும் ஏகம் எனக்காண்பவர் உத்தமோத்தம மதியினராவர். விஷத்தைப் பார்க்கிலும் அசுத்தவாசனை மிகக்கொடியது. விஷம் ஒரு சரீரத்தை மாத்திரம் கொல்லும். அசுத்த வாசனை அனேக ஜன்மங்களில் உடனிருந்து துன்புறுத்தும்.

92. மரத்தின் வேரில் விடப்பட்ட ஜலம் மரத்தின் எல்லா பாகங்களுக்கும் செல்லும். அகண்டைகரச பிரம்மத்தின் தியானம் சகல தேவதைகளையும் தியானித்ததாகும். பெண்ணாசை பொன்னாசையே ஞானத்திற்கு விரோதமான தென்றறிந்து, விட்டவன் நல்ல தியாகியாவான்.

93. எல்லாம் இறைவன் செயலெனை பிறழ்ச்சியின்றிகண்ட மனந்தான் ஆனந்தமான ஆன்மநிலையில் அழுந்த மிக்க விரைந்து செல்லுகிறது.

94. விதையை பூமியில் நட்டுவிட்டால் பலன் வந்து விடாது. ஜலம், வேலி முதலிய பாதுகாப்பால்தான் பின் பலன்தரும். குருவிடம் மகாவாக்கியத்தை அர்த்தத்தோடு கேட்டுவிட்டால் ஞானம் வந்துவிடாது. தூய்மை, வைராக்யம், ஈஸ்வர, குரு கிருபை இவைகளின் பாதுகாப்பால்தான் ஞானம் உண்டாகும்.

95. சத்தியம், பிரம்மச்சர்யம், அஹிம்சை, பக்தி, ஞானம், இவ்வைந்து ஆயுதங்களுக்கு சமானமான ஆயுதம் எங்குமில்லை. இவ்வாயுதங்களால் சர்வ அனர்த்தங்களும் நீங்குகின்றன. (சேதிக்கப்படுகின்றன).

96. பாலை, பாம்புக்கு ஊட்டினால் அது விஷமாக மாறுகிறது. பாலை, விவேகமுள்ள சிறுவர்க்குக் கொடுத்தால், புத்தி தெளிவும் நல்ல வலிவும் உண்டாகி, நன்மையைச் செய்கிறது. அகங்காரம், தேகாதி உலகப்பொருளோடு சேர்ந்தவழி துன்பவடிவ ஜனனமரண சமுசாரத்துக்கேது வாகிறது. அகங்காரம், அனான்மாபிமானங்களை விட்டு ஆன்மாவோடு சேர்ந்தழிந்தால் சர்வானந்தவடிவமாக பிறப்பற்ற முக்திபதம் எய்துகிறது.

97. மதத்தின்பேரால் கடவுளுக்குச் செய்யப்படும் சடங்குகளையெல்லாம் தள்ளிவிட்டு மிக்க பிரியத்தோடு மன அடக்கம், இந்திரிய அடக்கம் உள்ளவனாய், அகத்தில் அகண்ட சச்சிதானந்த பரமான்மாவை தனது சொரூபமாக விடாப்பிடியாக தியானம் செய்பவன், சில வாரத்திற்குள் ஆனந்த மஹோத்தியாகி ஆகின்றான்.

98. களஞ்சியத்தில் குவித்திருக்கும் தானியக்குவியல்களை ஒருவன் ஒரே நாளில் புசித்து ஜீரணம் செய்ய முடியாது. தினம் கொஞ்சங்கொஞ்சமாக பாகம் செய்து உண்ணின், சிலவருஷங்களுக்குள் யாவும் முடிந்துவிடும். மனத்தின்கண் உள்ள துர்வாசனை கூட்டங்களை ஒரே நாளில் விலக்கிவிட முடியாது. முயற்சியால், கொஞ்சங் கொஞ்சமாக நீக்கினால், நாளடைவில் எல்லா துர்வாசனைகளும் நாசமடையும்.

99. உலக விவகாரத்தில் கருமமே மனிதருக்குப் பிரதான மானாலும், அக்கருமமுயற்சி ராவணாதியருக்குப்போல கூடாது. **ஸ்ரீராமன், தருமன்** போன்றவர்கள் கருமம் போன்று இருக்கவேண்டும்.

100. பூமியில் குழி செய்ய இடிக்கப்பட்ட கட்டப்பாறையைச் சிறிது ஆழம்சென்ற பிறகுதான் நன்றாக அசைத்துக் குழியை அகலம் செய்யவேண்டும். மேலோடே அசைத்தால் குழி மண்களால் அடைபட்டுவிடும். பின்னர் குழி செய்யமுடியாது. பெரியோர்களிடம் சாஸ்திர சிரவணம் செய்யும்போது மனமாகிய குழியில் விவேகமாகிய கட்டப்பாறையால் புத்தி நிரோதமாகிய குழியை ஆழமாக்க வேண்டும். அங்ஙனமின்றி ஆரம்பத்திலேயே வீண் சங்கையாகிய சலனத்தால் விவேகத்தை சலிப்பித்தால் **புத்தி**

நுண்மையின்றி தடிப்புண்டாகும். பின்னர் குதர்க்கமே உண்டாகும். சிறிது சிறிதாக அனுபவம்வரும், சிரவணார்த் தத்தை சிந்தித்து வெகுநுண்மையான அநுபவத்தில் சங்கை யுண்டானால் சங்கை அநுபவாநுசாரமாக செய்யவேண்டும்.

101. மனத்தை நிறுத்துவது கடினமான காரியம். ஆனால், அதில் ஈடுபட்டவர்களுக்கு வெகுசுலபமும் ஆனந்தமுமான வேலை அதுவேயாகும். என்னால் மனத்தை அடக்க முடியா தென்று கூறுபவன்தான் பெண்தன்மை வாய்ந்த பேடியா வான். அவனால் ஒரு நன்மையை, அவனுக்கும் பிறருக்கும் செய்யமுடியாது.

102. அகண்ட சச்சிதானந்தவடிவத்தின் சுகத்தைவிட்டு விஷயத்தில் சுகமுண்டு என்று திரிந்து வருந்துபவன், கையி லுள்ள வெண்ணையை முழங்கை வழியாக ஒழுகவிட்டு நாவினால் எட்டப்படாத அதனை வருந்திருசிக்க எண்ணுவது போலாகும்.

103. ஏணி எல்லோரையும் மேல்மாடிக்கு ஏற்றிவிடும். தான்மாத்திரம் மேல்மாடிக்கு செல்லமாட்டாது. சிலர் விதேக மோக்ஷபரியந்தம் அனேகருக்குக்கூறி நன்னெறி கற்பித்து வீடடையச்செய்வார்கள். அதற்கான பிரசங்கங் களையும் நன்றாகப் பிறர் சம்மதிப்பதாகக் கூறுவார்கள். தாங்கள்மாத்திரம் அந்நடையைப்பற்றி நில்லார்கள்.

104. வில்வதளிர் காலையில் மென்று விழுங்குவதால் எல்லா அசுத்தங்களும் விலகி, சரீரத்தை சொஸ்தம் செய் கின்றது. ஆன்ம பிரஹ்ம ஐக்கிய ஞானமடைந்தால் சர்வ கருமவினைசமுண்டாகி பரமானந்தநிலை ஸ்திரமாகின்றது.

105. மனத்தை அடக்குதல்தான் ஆண்மையாகிய வீரம். அவனுக்கு நிரங்குசமான ஆனந்தம் உண்டு. சகுணப்பரமேஸ்வரப் பிரசாதமற்றவருக்கு சாஸ்திரத்தினதும் ஞானனுபவத்தினதுமான உண்மையான மார்க்கமகப்படாது.

106. சிரத்தையற்றவனுக்கு எவ்வுலகிலும் சுகமில்லை. அவனுடைய வாழ்க்கை பாலைவனம் போன்றதாகும். இருட்டில் பாலகருக்கும், மூடருக்கும் அதிக பயமுண்டு. அஞ்ஞானிகளுக்கு ஆவரணத்தால் சர்வானர்த்தங்களும் வேண்டாவிட்டாலும் கொடுக்கப்படுகின்றன.

107. மனத்தூய்மையுள்ளவன் ஒரு மரத்தினடியில் இருந்தவண்ணம் மஹா ஆனந்தனுக வாழ்கின்ருன். மனத்தூய்மையில்லாதவன் அனேக காணி, மணை, தனம், அனேக மனைவிகள், அனேக புத்திரர்கள், இவைகளை உடையவனுனலும் மிக்க துக்கியேயாகின்ருன்.

108. மனத்தூய்மை வேண்டின் உடற்றூய்மை வேண்டும். உடற்றூய்மை வேண்டின் மனத்தூய்மை வேண்டும்.

109. விஷமுள்ள சர்ப்பமும் குரூரமுள்ள புலியும் உள்ள இடத்தில் வாழ்வதைவிட, பெண்ணுசை, பொன்னுசை உடையவரோடு கூடிவாழ்வது அதிகதுக்கம் தரும்.

110. சாந்தமும், சுருசுருப்பும், பரோபகாரமுடையவன் முன்னிலையில் கோபமும், சோம்பலும் தமக்கென யாவும் தேடுபவன் புழுப்போன்றவனுவான்.

111. நிராசையில் உள்ள சுகத்தை உள்ளபடி கண்டுவிட்டால் அவன் ஒரு போதும் ஸ்திரீ, பொன் முதலிய

பொருள்களை அடைய மனம் நாடாது. அவைகளை மலம் போல அருவருத்துத் தள்ளுவான்

112. உமியோடு கூடிய அரிசி முளைக்க ஏதுவாகிறது. உமி நீங்கிய அரிசி முளைக்க ஏதுவில்லை. முச்சரீரத்தில் **அபிமானமுள்ள மனம்** ஜனனவடிவ துக்கத்திற்கு ஏதுவாகிறது. அபிமானம் நீங்கிய மனம் துக்கமற்ற சுகத்திற்கு ஏதுவாகிறது.

113. துஷ்கிருத்தியங்களால் மனிதன் துன்பமடைவது போல், தீய ஆகாரங்களாலும் பிரத்தியக்ஷ துக்கமே உண்டாகிறது. ஆதலால் **மனோசாந்தி**யை விரும்பும் உத்தமர்கள், சுருசுருப்பும் சத்துவமும் பெருகத்தக்க ஆகாரம் உட்கொண்டால் எண்ணியபடி மனம் சத்விஷயத்தில் ஈடுபடும். இது ஓர் தவமுமாகும்.

114. ஆகாரம் நாவின் ருசிக்காக உண்ணுமல் பசி, வியாதி தணித்தற்பொருட்டு உண்ணவேண்டும். அன்னரசத்தின் சூக்குமப்பகுதி மனத்தைச் சாருவதால் உண்ணும் உணவிற்கேற்ப மனம் வியாபாரம் செய்யும்.

115. அழகான பொருளென்று அனுத்மாவில் ஒன்றுமில்லை. ஆரம்பத்தில் எஜமானன் சொற்படி பணியாளன் நடந்து பழகிவிட்டால், பின்னர் பணியாளன் திருத்தமும் ஒழுக்கமும் உடையவனுகிருன். அதனுல் பணியாளன் சொன்னபடியும் எஜமானன் நடந்துக்கொள்ளுவான்.

116. ஆரம்பத்தில் பக்தன், பரமேஸ்வரனும் பெரியோர்களும் கூறியபிரகாரமாக, பரமமேஸ்வரனிடம் **பக்தி** செய்துவந்தால், நாட்செல்ல நாட்செல்ல நல்லொழுக்கம் பரமபக்தி இடைவிடா ஆனந்தம் முதலியன

தனக்குத்தானே உண்டாகிவிடும். பின்னர் பக்தன் வேண்டிக் கேட்டுக்கொண்டவண்ணம் கடவுள் கிருபையால் அவனிஷ்டத்தை பூர்த்திசெய்வார்.

117. பிரஜைகள் தாங்கள் வாழும் தேசத்தின் சர்வ நிர்வாகமும் அரசனிடமிருப்பதாக அறிந்து தேசத்தைப் பற்றிக் கவலையற்றிருக்கிறார்கள். ஞானி தனது சரீரத்தின் சர்வ நிர்வாகமும் பரமேஸ்வரனிடம் இருப்பதை நன்கறிந்து கவலையற்றிருக்கிறான்.

"ஸ்ரீ சங்கர பகவற்பாத ஆச்சாரியரவர்களின் ஜன்மதினம்"

118. மதுரையின் மத்தியில் உயர்ந்து அகன்று நீண்டு அமைந்துள்ள மீனாக்ஷிசுந்தரேஸ்வர ஆலயம் அந்நகரத்தி லுள்ள எல்லாப் பிரஜைகளையும் தன்வசமாக்கி மகிழ்வூட்டு கிறது. இப்பூமண்டலத்தில் தீர்க்கதரிசிகளான **ஸ்ரீ சங்க ராச்சார்யார்** போன்ற மஹான்களின் அவதாரம் இப் பூமண்டலத்திலுள்ள பெரும் பகுதியினரை மகிழ்வித்து, ஆனந்தவடிவ மோக்ஷத்தையே பயப்பதாகின்றது.

119. மதியீனனுக்கு அதிகாரம் கிடைத்தால் அவ்வுயர் வாழ்க்கை சில நாளும் தங்கிஇராது. நிஷ்காம புண்ணிய மற்றவர்கள் ஆத்மீக விஷயத்தில் முயன்று வந்தால் அது சிலமாதமும் நிலைபெறாது.

120. மீன்களுக்கு வேகமாகச் செல்லும் ஜலத்தை எதிர்த்துச் செல்லுவது மிக்க சந்தோஷம். உத்தம முமூக்ஷுவுக்கு மனமுதலியவைகளை எதிர்த்துத்தள்ளி ஆன்மாவில் மூழ்குவது என்பது மிக்க சந்தோஷமும் வெற்றிகரமுமான காரியமாயிருக்கிறது.

121. உபவாசத்தால் ஜீரணக் கருவிகள் நல்ல நல்ல ஓய்வு கொள்ளுகிறது. மனமும் விஷய சிந்தனையில் வலுவற்றுவிடுகிறது.

122. வெறும் புத்தகப் படிப்பும் சொப்பனத்தில் கிடைத்த சம்பத்தும் ஒரே தன்மையது. அடக்கமுடையாருக்கு, எங்கும் ஆனந்தம்.

123. நல்ல விரக்தனுக்குப் பணத்தாசை கொண்டவரையும் ஸ்திரீபோகங்கொண்டவரையும் கண்டால், வெகு அருவருப்பான உவர்ப்பு உண்டாகும். ஞானியாகிய விரக்தனுக்குத் தயையுண்டாகும்.

124. கடவுளை நாங்கள் ஒருபோது தனித்து உட்கார்ந்து தியானிப்பதில்லை; எப்போதும் அதே சிந்தனையாகவேயிருக்கிறோம் என்றுசொல்லிக்கொள்ளுபவர் மிதந்து செல்லுபவராவார். அவர் நினைப்பது கடவுளையல்ல. அங்ஙனமானால் வாயால் அவர்கள் எப்போதும் தியானிக்கிறோமென்று சொல்லவேமாட்டார்கள்.

125. தினம் காலைமாலை ஒவ்வொரு மணிநேரத்திற்குக் குறையாமல் குருவின் உபதேசவண்ணம் அவசியம் செய்ய வேண்டும். இடையிடையே அத்தியானப்பிரகாரம் பாவித்து வரவேண்டும். நாட்செல்லச்செல்ல மோக்ஷம் கைகூடும்.

126. அசலமும் சுத்தமுமான ஜலத்தில் முகம் நன்றாக விளங்கும். சுத்தசத்துவமும் ஏகாக்கிரமுமான மனத்தில் ஆன்மா யதார்த்தமாக விளங்கும்.

127. ஒரு பிரம்மாவின் ஆயுள்பரியந்தம் செல்வத்தோடு வாழ்ந்தாலும் இவ்வுலகவிஷயங்களில் தடையற்ற பேரின்ப

மாகாது. ஒரு நாள் நிராசையோடு வாழ்ந்தால் அது தடையற்ற பேரின்ப வாழ்க்கையாகும்.

128. பிறவிக்குருடன் சூரியபிம்பத்தைக்காண யோக்கியதை யில்லை. பாப சமஸ்காரமுள்ளவன் கடவுளைக்காணத் தகுதியில்லை.

129. பிறவிக்குருடனும் தெய்வசகாயத்தால் நேத்திரப்பிர காசம் பெற்று சூரியபிம்பம் முதலியவைகளைக் காணமுடியும். பாப சமஸ்காரமுடையவனும் கடவுள், பெரியோர் இவர்கள் சகாயம்பெற்று பரமனைக்காணமுடியும்.

130. காமத்தால் சகல துற்குணங்களும் உண்டாகின்றன. நிராசையால் சகல நற்குணங்களும் உண்டாகின்றன.

131. தனித்திருந்து தியானஞ்செய்வதால் உண்டாகும் ஏகாக்ரவிருத்தியின் அமைதியில் தோன்றும் சாந்தியே அப்பியாசிக்கு மிகுதியும் வேண்டப்படுவதாகும்.

132. உலகம் அனர்த்தமாதலால் அதன் விவகாரம் அனைத்தும் அனர்த்தமே.

133. மாசற்ற உள்ளத்தில் **ஆன்மானந்தம்** ஒன்றே விரும்பப்படும்.

134. கங்கா ஜலத்தில் மூழ்கினவனுக்கு வெய்யலின் வெப்பம் தெரியாது. வெளியில் வந்தால் வெப்பம் தோன்றும். அகண்டானந்த ஆன்மாவில் மூழ்கிய மனத்திற்கு உலகதாபம் உண்டாகாது. அனான்ம விஷயங்களை அடைந்து பகிர்முக மானல் உலகதாபம் அனைத்தும் உண்டாகும்.

135. பாண்டவர் சத்தியவிரத தருமசொரூபிகள். ஆன தால், பகவானது சகாயமும், சர்வசத்துரு நாசமும், வெற்றியுமுண்டாகி, சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்றனர். மோக்ஷ அதிகாரியும், சத்தியம், அஹிம்சை, சாந்தி முதலிய குணங்களால் பகவானது திருவருள் சகாயம் பெற்று சகல துர்வாசனை வடிவ விருத்திகளின் நாசமும் உண்டாகி அகண்டானந்தப் பரமசிரேயசைப் பெறலாம்.

136. துஷ்ட குணங்களையுடைய மனத்தை கேவல தியானத்தாலும் விசாரத்தாலும் அடக்கமுடியாது. பிரார்த்தனை, ஜெபம், சாஸ்திரத்தை அமைதியாக வாசித்தல், சாது சங்கப்பயிற்சி இவை முதலியவைகளா லும், சகுண ஈஸ்வர வழிபாட்டாலும், எவ்வளவு மஹாபாபியானாலும் சீக்கிரத்தில் சத்குணசம்பன்னனாய் ஞானாதிகாரியாகலாம்.

137. பிறர் நம்மை வையும்போது அவரைக்கோபிக்கக் கூடாது. ஏன்? அவர் ஆன்மாவான நம்மைக் கோபிக்க வில்லை. மலஉடலைத்தானே கோபிக்கின்றனர். அது ஞாயந்தான். மலஉடல் இயல்பாக நிந்திதவஸ்துவே யாகும். அதனை வைவதால் குற்றமில்லை.

138. ஒருவர் கோபிக்கும்போது, கோபிக்கப்பட்டவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே என்கின்றனர். ஏன் இவர் ஒரு குற்றமும் செய்யாதவராவார்? சரீரத்தை **நான்** என்பதும், பந்துமித்திரரை **எனது** என்பதும் பெருங்குற்ற மன்றோ? அதற்காக "கோபித்தார்கள்" என்று கருத லாமே?

139. **கோபம்** கோபிப்பவர்களேயே முதலில் சுட்டு பொசுக்குகிறது. அதுவே அவனுக்குப் பெருந்தண்டனை யாகும். இதையறிந்தால் யாரும் கோபிக்கமாட்டார்கள்.

140. சன்னல் வெளிச்சத்தில்தான் பறக்கும் அணுக்கள் தெரியும். அகண்டப்பிரகாசத்தில் அணுக்கள் தெரியாது. அற்ப மதியினருக்கு அநித்ய உலகபோகமே தெரியும். நல்ல விரக்தியுடைய பெரியோருக்கு அவ்விஷய யோசனைகள் ஒரு பொருளாகமாட்டாவாம்.

141. சூரியன் ஒரு மாதம் உதயமின்றியிருந்தால் இவ் வுலக முழுதும் துர்நாற்ற முதலியவைகளாலும், பயிர்கள் விருத்தியின்மை, முதலியவைகளாலும் துன்புறும். **ஞானி கள்** என்ற மஹான்கள் தங்கள் அனுபவத்தால் சித்தத்தைத் தன்வசமாக்கி வைத்திருப்பதுபோல், மற்றையரையும் இவ்வாறு செய்யவேண்டுமென்ற எண்ணத் தால் உழைத்து வரவில்லையானல், துன்மார்க்கரே அதி கரித்து, நற்குணமுடையார் விருத்தியின்றி, சகலரும் ஒருவரையொருவர் பிடிங்கித்தின்னும் விலங்குகளாக இருப்பார்கள்.

142. அகண்டானந்த ஆன்மாவைத்தவிர நிர்ப்பய வஸ்து வேறொன்றில்லை. எங்கும் நிறைந்த பரத்தில் மனம் அபேதமாதற்கு, சத்துவம் ஒன்றே வேண்டப்படுகிறது. அச்சத்துவம் ஈஸ்வர உபாசனையாலும், நிஷ்காம கருமத் தாலும் உண்டாகின்றது.

143. விசாரமாத்திரத்தால் ஞான்முண்டென்பது வருத்த விதையில் ரசமனுபவிப்பது போன்றது. தியான விசாரத்

தால் ஞானமுண்டென்பது வருத்த விதையை வேக வைத்துப்பின் ரசம் அனுபவிப்பது போன்றது.

144. பொன் மண்ணுகவும், பெண்கள் லோகமாதாவாக வும், யாவருக்குத் தோன்றுகிறதோ அவர்களே **சுகிர்த புருஷர்கள்.**

145. தியாகி என்பவன் புறப்பொருளை விடுவது மாத்திரத் தால் தியாகியாகான். புறத்துப்போல அகத்தும் துறக்க வேண்டும்.

146. மனத்தைச் சோதிக்கும் வியாபாரம், சக்ரவர்த்தி ராஜாவுக்கே முடியாத காரியமென்ருல் பாமரர்கள் என் செய்வார்கள்?

147. மனத்தைச்சோதிக்கும் வியாபாரம் நன்ருகத் தெரிந்து கொண்டால், மனத்தையடக்கும்தன்மை அவர்களுக்கு நன்கு தெரியும்.

148 குதிரை, நன்ருக சவாரிசெய்யும் வீரனைக்கண்டால் அடங்கி அவனிஷ்டப்படி நடக்கும். மனமும், தன்னியல்பு நன்ருகத்தெரிந்த தீரவிரக்தனுக்குக் கீழ்படிந்து அவினிஷ் டப்படி அடங்கி நடந்துகொள்ளும்.

149. ஓர் மார்வாடி தன்வீட்டுக்கு விறகு கொண்டுவரும் ஓர் ஏழைக்குடியானவனுக்குத் தான், தயாளத்தன்மையால் பத்துலட்டுகளையுடைய ஒரு முடிப்பைத்தந்தான். அம் முடிப்பை அந்த விறகுவிற்பவன், தன்வீட்டின் சமீபம் போய் அவிழ்த்துப்பார்த்தான். "சின்ன விளாம்பிஞ்சுதின்னுலே மாரடைப்புண்டாகுமே ஆகவே, இம்முடிப்பிலுள்ளவைகளை

நாம் யாரும் தின்னக்கூடாது" என அங்குள்ள சாக்கடையில் அவைகளைக் கொட்டிவிட்டான். அனதிகாரிக்குக் கடவுளே நேராகவந்து மோக்ஷந்தருவதாயிருந்தாலும் அவனுக்கு அம்மோக்ஷபயன் எதுவும் பிரயோஜனமற்றதாகும்.

150. முறட்டுக்குதிரையானாலும் மணலில் சவாரிசெய்து பழக்கினால் சில நாட்களில் சாதுவாகிவிடும். எவ்வளவு கெட்ட மனமுடையவனானாலும் **கடவுள்நாமத்தை** ஜெபித்தல், கடவுள் சம்பந்தமாகப் பிரார்த்தித்தல், சாதுக்களோடு நெருங்கிப்பழகுதல், இவைகளால், கொஞ்சகாலத்திற்குள் மிக்க சாதுவாய் ஞானதிகாரியாகலாம்.

151. ஜலம் நிறைந்த பாத்திரத்தில், சிறிய துவாரத்தின்வழி ஒழுகினால், அத்துவாரத்தை வெளியில் அடைத்தால், ஜலம் ஒழுகுதல் நிற்காது. உட்புறத்தில் அடைத்தால்தான் நிற்கும். சாந்தி வேண்டியவன் புறவிந்திரியங்களைத் தகைதலால் தீயமார்க்கத்தினின்றும் மீண்டு, அவன் சாந்தியடைவனென்பது கூடாது. அகத்திலுள்ள மனத்தைத் **தீய எண்ணங்கள்** உண்டாகாதவண்ணம் தகைந்தால்தான் தீயமார்க்கத்தினின்றும் சாந்தியடைந்தவனாவான்.

152. பல் இயற்கையாகப் பற்றியிருப்பது, மெல்லுதற்கு சவுகரியமாயிருக்கும். விழுந்தபின், அதைச் சேர்த்துப் பிடித்திருப்பதோ, அல்லது, நிற்கும்படி உபாயம் செய்வதோ, மிக்க துன்பமானது. சரீராதிகளில் அபிமானமுடைய அஞ்ஞானிக்கு அதிக துக்கமில்லை. அபிமானம் விட்ட ஞானிக்கு, ஒருபோதும் அவைகளில் அபிமானம் உண்டாகாது. ஓர் கணமாவது அபிமானம் உண்டானால், அதைச் சகியான்.

153. எவ்வளவு பெரிய கனமான பதார்த்தங்களையும் உபாயத்தால் தாங்கி வாழலாம். ஆனால் துக்கவடிவமனத்தின் பாரத்தைத் தாங்குவது, கூடாதகாரியம்.

154. விக்கிரஹ பூஜையினும் மானததேவதை பூஜை சிறந்தது. எங்கும் நிறைந்த ஈசனை மனத்தால் வழிபடுவது, அதனினும் சிறந்தது. இதனினும், தான் பரமானந்த பரமாத்மாவாகக் காண்பது, மிக்க சிரேஷ்டம்.

155. புத்தகத்தை அதிகமாகப் படிப்பதைவிட நடையில் முன்னேறிச்செல்வது சீக்கிரம் பயன்தரும். ஆரம்பத்தில் நூல் ஆராய்ச்சியும் வேண்டும்.

156. ஒருவன் ஆசையை வென்றுவிட்டால், ஒருபோதும் ஓர் இடமும் அவனுக்குத் துன்பமுண்டாகாது.

157. சிலமரங்கள் கோணலானாலும் உறுதி நன்றாயிருக்கும். சிலர் சரீரம் கோணலானாலும் மனம் உறுதியாயிருக்கும். இன்று காலை 5-மணிக்கு கிருஷ்ணமாச்சார்யாரவர்கள் ஆஸ்ரமம் வந்து தங்கினோம்.

158. அறிவுநூல் ஆராய்ச்சியால், மனம் ஆனந்தமடையும். உலக நூல் ஆராய்ச்சியால் மனம் கூர்மை ஒருவாறு பெறும்.

159. ஒருவன் நூல் கற்றஅளவு நடந்திருக்கமுடியாது. ஆனால் அதனை சிற்சில பகுதிகளில் கூறியவைகளையாயினும் நன்கு ஆராய்ந்து அதன்படி நடத்தல் வேண்டும்.

160. மக்கள் பிறப்பு மிக்கமாண்புடையது. அதை நன்னெறியில் புகுத்தி உபயோகப்படுத்தாவிடின், அவர்கள் மாக்களேயாவர்.

161. ஒருவன் தூக்கிச் செல்லும் மூட்டை தனதென்று உள்ளபரியந்தம் சுமந்து செல்லுகிறான். ஆனால், அது தனதன்று, அன்னியரது என்று தெரிந்தால் உடனே போட்டு விடுகிறான். சரீரத்தை அவிவேகத்தால் நானென்று கருதும்பரியந்தம் அதை அதிக பாதுகாப்பில் வைத்து சுக துக்கத்தையடைகின்றான். விவேகத்தால் நான் என்பது ஒழிந்து, பூதங்களுடையதெனத் தெரிந்தால் சுகதுக்கமற்று சுகமாக வாழ்கின்றான்.

162. நல்ல பக்தன் விரும்பியதைப் பரமேஸ்வரன் அவசியம் கொடுக்கின்றார். இதுபோன்ற அனேக ஏதுக்களால் பக்தன் பரமனையே நாடி நிற்கின்றான்.

163. அறத்தின் பால் சென்ற மனம். அவதியில் (அதாவது முடிவில்) பரம சாந்தியைப் பெறும்.

164. பாமரர்கள், தாங்கள் செல்லும் அல்பவழியில் அறிவீனர்களால் செய்யப்படும் சோதனையில் சிக்குண்டு துன்புறுகின்றனர். சுத்த புருஷர்கள் கடவுளாலும் பெரியோர்களாலும் உண்டாகும் சோதனையிலும் பிரமிக்காமல் நன்னெறியில் சென்று ஆனந்தராகவே வாழ்கின்றார்கள்.

165. ஒருவன் அனந்த மக்களைப் பெறுவது, புண்ணைப் பெற்றதேயாகும். பிரமசரியமும் கெடும். பராதீனனுமாவான்.

166. கல்லைப்போன்ற மனமும், இடைவிடாது ஜெபம், பிரார்த்தனைகளைச் செய்துவரின் சில நாளைக்குள் அன்புடையதாய் மெழுகென உருகும்.

167. உண்ணும் உணவில் இரண்டொரு கல்கள் இருப்பதைக் கண்டு உணவு அருந்தாமல் யாரும் இருப்ப தில்லை. நன்னெறி நடப்போர் (ஞான வாழ்க்கையில் ஈடு படுபவர்கள்) இரண்டொரு தடவைகளில் தவறிவிட்டதி லிருந்து அவ்வுயரிய வாழ்க்கையை விட்டுவிடலாகாது. மீண்டும் உற்சாகத்தோடு செல்லவேண்டும்.

168. அன்புடைமையால் சகலரையும் வெல்லலாம். கிருபா கடாக்ஷரான பரமேஸ்வரனுக்கு யார் அடிமையாகின்றார் களோ அவர்களுக்கு உலகம் முழுமையும் அடிமையாகும்.

169. கணக்கற்ற இரும்பு துண்டுகளை ஒரு கரண்டின் சம்பந்தமுள்ள கம்பியானது இழுத்துத்தன்பால் வைத் தடக்கும். ஆன்ம சம்பந்தமான சின்மாத்திர வாசனையை யுடைய மனம் மற்றைய அனான்ம அசுத்த சமஸ்காரங்களை எல்லாம் அடக்கிவிடும்.

170. மத்தியான சூரியனால் சகல ஜலநிலையங்களும் சூடு உடையதாகின்றது. ஆசையினால் சகல சீவர்களின் இருதயங்கள் தாபமடைகின்றது.

171. ஆகாயத்தை சூரியகிரணம் ஒருபோதும் சூடுடைய தாக்காது. பரமான்ம அபரோக்ஷஞானத்தைப் பெற்றுள்ள இருதயத்தை விஷய ஆசைவடிவதாபம் ஒருபோதும் சாந்த சுகத்தை விடும்படி தபிக்க செய்யமுடியாது.

172. மரத்தின் கோணல்கள் நூல்தட்டி அறுப்பதால் நீங்கி விடும். மனிதரது மனக்கோணல்கள் சாஸ்த்திரவழி பெரி யோர்மொழி இவைகளின் கிரமமாக ஒழுகினால் நீங்கிவிடும்.

173. சகலமும் மித்தையெனக் காண்பது சிறந்தது.

அதனினும் சகலமும் தன்வடிவெனக் காண்பது ஆனந்த கரமாம்.

174 எவன் எப்பொருளில் **ஆசையை** அதிகம் வைக்கிருனே, அப்பொருள் அவனைவிட்டு விலகுகின்றது. இதற்கு தசரதன் ராமனிடமும், கைகேயி பரதனிடமும் வைத்த பிரியமே தக்க உதாரணம்.

175. கண்ணுடியில் ரசப்பூச்சு இல்லையானல் முகம் தெரியாது. சகம் மித்தை. அம்மித்தையான சகமும் தன்வடிவமெனக்காணவில்லையானல், தன் அபரோக்ஷானுபவம் திடமாகாது.

176. கர்த்தவ்வியமுள்ள இருதயம் ஒருபோதும் சாந்தியடையாது. ரத்தினபரீக்ஷை செய்பவன் மனம் அப்பரீக்ஷையில் எவ்வளவு நேரம் ஒருமுகப்பட்டிருக்கிறதோ, அதில் அரைபங்கு நேரம் பரமாத்மாவில் உள்ளபடி நிலைத்திருந்தால் **பேரின்பநிலையை** எய்தும்.

177. மரமேறி கைவிட்டவன் உடல் குலைந்து துன்புற்று இறப்பன். துறவினின்று வழுவின சன்யாசி மனங்குலைந்து துன்பமடைவன்.

178. மனம் சித்திரைப்பதுமையைப்போல் ஆன்மாவில் நிலைபெற்று விட்டால்தான், ஆனந்தானுபவம் உண்டாம். ஆன்மாகாரமாகாது பாவனுவிருத்தியில் ஆனந்தம் விளங்குவதில்லை.

179. எவனெருவன் தன்னை ஞானியென்றும், பலருக்குத் தான் குருவென்றும், தனக்கு பலசிஷ்யர்கள் உண்டு என்றும், எண்ணுகின்றனே, அப்புருஷன் துன்பத்திற்காளானவனேயாவன்.

180 அகண்டான்ம அனுபவம் வந்தவன் ஒருபோதும் தன்னை மனிதன் என்று எண்ணுததுபோலத் தன்னை குருவென்றுங்கருதான். இது முதலிய எண்ணங்கள் ஆனந்தானுபவத்திற்கு தடை என்பது அவனுக்குத்தெரியும்.

181. சிறுவர்கள் ஜன்னல்வழியாகவரும் சூரிய வெளிச்சத்தை தின்னும் ஓர் பொருளென எண்ணி, கையால் பல வகையாகப்பற்றி பார்ப்பர். அது சிறிதும் பயனற்றதாகவே முடியும். லௌகீக விஷயபோகிகள் அநந்தசஞ்சலத்தோடு, விஷயங்களை சுகமென்று கருதி எண்ணி எண்ணி யிருமாந்திருப்பர். அவர்கள் சிரமப்பட்டதெல்லாம் வீண் என்று அந்தத்தில் காட்டிவிடும்.

182. பழுத்த கனி எங்கு ஒளித்துவைத்தாலும் தனது மணம் பலபக்கங்களில் பரவாமல் இராது. அநுபவ ஞானி எங்கு எந்த மூலையிலிருந்தாலும் அவ்வனுபவ ஜ்வாலை பல பக்கங்களிலும் வீசாமல் இராது.

183. கரும்பு கோணலானலும் ருசி நன்ருகவே இருக்கும். சிலருக்கு கல்வி ஒழுங்கு நன்ருயில்லாதிருந்தாலும் ஆனந்த அனுபவம் உடையராய் இருப்பர்.

184. வியாபாரி தான் செய்யும் அனந்த காரியங்களிலும் லாபத்தைத்தான் கருதுவான். நல்லொழுக்கத்தோடு அனந்த நூல்களை கற்ருலும் ஆன்ம லாபத்தையே கருதுவான் விவேகி.

185. ஸ்பிரிங் கதவைப் போன்று ஞானியின் மனம் வெளியில் வந்தாலும் உடனே ஆன்மாவில் நிலை பெறும். சாதாரணக் கதவைப்போன்று அஞ்ஞானியின் மனம், வெளி

யில் வந்தால் அப்படியே அனர்த்தத்தில் உழலும். பெரியோரது ஞானம் ததும்பும் சொற்களை கேட்டால் அப்போது அகமுகம் சிறிது பெறும்.

186. ஜலம் நிறைந்த கடத்தில் தோற்றும் சீதளம் அனைத்தும் ஜலத்தினதே, கடத்தினதன்று. லௌகீக விஷயங்களின் முன்னிலையில் தோன்றும் ஆனந்தமெல்லாம் ஆன்மாவினதே. விஷயத்தினதன்று.

187. ஜகத் அநித்தியமென்பது நன்ருகத்தெரிந்துவிட்டால், ஓர்போதும் பதார்த்தங்களில் ஆசை வராது.

188. பிருதிவியில் பொன்னினும் உயர்ந்த பொருளில்லை. வாழ்க்கையில் ஞானத்தினும் உயர்ந்த பொருளில்லை.

189. கரணசேஷ்டைகள் உபாசனையால் சீக்கிரம் ஒழிந்து போம். ஆனுல் ஞானம் வந்த பிறகே சாந்தி பெறும்.

190. ஆன்மாவில் நன்ருக நிலைத்து ஆனந்த அனுபவம் பெற்ற மனத்திற்கு வேறு பொருள்களெல்லாம் தன்வடிவாகவே காணும்.

191. சர்வ மதங்களிலும், மனத்தை திருத்தி அமைப்பதுவே சிறந்த கருமமாகக் கூறியுள்ளன. இதனை செய்ய இயலாதவர்கள்தான் சண்டையிடுகின்றனர். இதில் ஈடுபட்டவர்கள் கலகமிட இச்சியார்கள்.

192. காகம் எச்சிலையும் அசுத்தபுழுக்களையும் நாடிஊர்களையே தனது வாசமாகக் கொள்ளும். கிளிபோன்ற நல்லபக்ஷிகள் பச்சை மரங்களில் கிடைக்கும் பழவர்க்கங்களின் பொருட்டு பசுமையும், ஏகாந்தமான சோலைகளையே

நாடும். அபிமானியாகிய ஜீவன் துர்நாற்றமான சரீர போகங்களின் பொருட்டு, அவிவிவேக சமூகவாழ்க்கையையே சுகமென்று கருதுவான். ஞானி சரீர அபிமான மற்று பரமானந்த ஆன்மானந்த சொரூபனாய் நிலைத்து நிர்ஜனப் பிரதேசத்தை நாடுவான்.

193. மணியைக்காட்டும் கடிகாரம் அநேகங்களை, ஒரே நியமமாகச் சாவிகொடுத்து வைத்தாலும், ஒரேமாதிரி மணியைக் காட்டாது. ஜீவர்களை, எத்தனை ஒழுக்கங்களால் ஒருகுழுவினராக வாழ்ந்தாலும் ஒரே சுபாவமுள்ளவராக இரார்கள்.

194. பெரிய நகரங்களில் பெரும்பாலும் நற்குணமுடையராக இரண்டொருவர்தான் இருக்கமுடியும். அனேக ஆயிரம் அப்பியாசிகளுள் இரண்டொருவர்தான் நல்ல ஞானிகளாக முடியும். முயற்சியே முக்கிய காரணம். அது கடவுள் **திருவருளால்** ஆவது.

195. பரிசுத்த வாழ்க்கையைக் கைக்கொண்டவர்கள் அழுக்கு வஸ்திரத்தை அணியார்கள். அனந்தமாகவும், பூரணமாகவும் உள்ள ஆனந்த சொரூபத்தைத் தானாகக் கண்ட பெரியோர்கள், அநித்திய பொருள்களை சேகரஞ் செய்யமாட்டார்கள்.

196. எவனுக்குக் கொள்வதைப்பார்க்கிலும், விடுவது அதிக சந்தோஷமாகவும், திருப்தியாகவும் இருக்கிறதோ, அப்புருஷனுக்குத்தான் ஆன்மநிலை மிக்க தீஞ்சுவையுடையதாகும்.

197. குருகிருபை உள்ளவனாக வேண்டுமாயின் அகங்கார மற்றவனாகல் வேண்டும்.

198. ஆத்ம ஞானத்திற்கு சாதுசங்கம் உத்தம சாதனம் தான்; ஆனால் சுத்தமான பேரின்ப நிலையில் மூழ்க வேண்டின், சாது, அசாது யாவரையும் விடவேண்டும்.

199. எங்கும் நிறைந்த பரம்பொருள், தனது வடிவமெனக் கண்டால், சோக மோகங்கள் எப்படி உண்டாகும்?

200. மதியிழந்த வாழ்க்கை பயன் தராது.

201. சூரியகிரணம் எவ்வளவு சுடினும் பின்பயன் தரும். ஆசை அணுவளவு சுடினும் அனர்த்தமே தரும்.

202. மனமடங்காதபோது அதன் சேட்டை அடங்க வேண்டின்; ஜபம், பிரார்த்தனை, சாது சங்கம், இவைகள் சுலப சாதனமாம்.

203. கடையர், மோகத்தால் பெண்ணை வணங்குவர். மூடர், மோகத்தால் பொன்னை வணங்குவர். அடியார், அம்பலவாணனை வணங்குபவர். அறிவறிந்தார் அகண்டானந்தராக அமர்ந்திருப்பர்.

204. கன்று, மேயச்சென்ற தன்தாய்ப்பசுவை மாலையில் வரக்கண்டால் மிக்க ஆனந்தம். முமுக்ஷுவுக்குப், பரமானந்த வருஷம் வெள்ளமாகப் பொழியும் அர்த்தபோதகப் பெரியாரைக் காணில் மிக்க சந்தோஷமுண்டாம்.

205. கல்லை எவ்வளவுநாள் கசக்கிப் பிழிந்துக்கொண்டிருந்தாலும் ரசம் தராது. ஆசையை சுகத்தின் பொருட்டு

எவ்வளவுநாள் அதனேடு சேவைசெய்துவந்தாலும் ஆனந்தமுண்டாகாது.

206. மலரை முகர்ந்தால் வாசனையைத்தரும். கசக்கி முகர்ந்தால் நாற்றமுண்டாகும். பெரியார் வாக்கியங்களை அப்படியே பொருள்செய்து அனுஷ்டித்தால் நலந்தரும். அதனை விபரீத அர்த்தம் செய்து அனுஷ்டித்தால் அனர்த்தமுண்டாகும்.

207. வெட்டுப்பட்ட சில மரக்கொம்புகள் நட்டுவைத்தால், மீண்டும் மரமாகும். சில மரத்துக் கொம்புகள் முளையாது கர்மங்களோடு அஞ்ஞானமும் ஒழிந்த பெரியோர், சரீரம் நீங்கனபின் பிறப்பதில்லை. கர்மங்களும் அஞ்ஞானமும் உடைய ஜீவர்கள், இறந்தால் மீண்டும் பிறப்பர்.

208. மேகத்தில் சீதளக்காற்று சம்பந்தமுண்டானல், மழை வருஷிக்கும். மனத்தில் சத்துவகுணம் திதி பெற்ருல் பேரின்பமழை இடையீடின்றி உண்டாகும்.

209. செல்வவந்தன், தன்செல்வமாகிய அநேக ஆயிரம் பொன்னும் விலகினபோது எவ்வளவு துன்பம் அடைவனே அவ்வளவு துன்பம், வனத்தில் வாழ் இருளனும், கிழங்கு முதலியனவைகளை எடுக்கும் தன் கட்டப்பாறையை இழந்தபோது அடைவன். இருவருக்கும் **பொருள்** வித்தியாசமாயினும் **துக்கத்தில்** வித்தியாசமில்லை. நிராசையாயிருந்தால் இருவருக்கும் துன்பமில்லை.

210. கரணத்தூய்மை உள்ளவனுக்கு வரும் லாப நஷ்டங்கள் எல்லாம் அவனது சோதனையின் பொருட்டாகும் என்பதை நன்கறியவேண்டும்.

211. காலதேசத்திற்கேற்றபடி, சரீர சௌக்கியத்திற்கேற்ப, உணவை மாற்றிக்கொள்வதுபோல, மனத்தையும் பல உபாயங்களால், நன்மையான ஏகாக்ரக பழக்கத்தை விருத்தியாக்கல் வேண்டும்.

212. அஞ்ஞானியின் ஆசை. நெல்லின் உமியைப் போன்றது. ஞானியின் ஆசை, நெற்பொரியின் உமி போன்றது.

213 கல்கண்டு கரடு முறடானதாயிருந்தாலும் வாயில் போட்டவுடனே, கரைந்து இனிய சுவையாக மாறிவிடுகிறது மனமும் அனுத்ம சம்பந்தத்தால் நானு மலின ஆகாரமாகத் தோன்றினும், ஆனந்த வடிவ ஆன்மாவை அடைந்தால், தனது தூலமான கடின சுபாவங்கெட்டு, ஆனந்த நிலைமையைப் பெறுகிறது.

214. கட்டையில் செய்த பதுமை சிறுவருக்கு விளையாட உதவும் தீஞ்சுவை சேர்ந்தமாவால் செய்த பதுமை விளையாட உதவாது. தின்பதற்குத்தான் உதவும். ஆவரண சஹித புருஷனது மனம் அனர்த்த விளையாட்டுக்குதவும். ஆவரணம் நீங்கிய ஞானியின் மனம், மனதாகக் காணப்பட்டாலும் அது ஆனந்த வடிவ நித்ய ஆத்மாவில் சுகமாக சுகித்திருக்க உதவும்.

215. ஒழுக்கமும் அறிவுமுள்ளவர் எவ்வயதுடையவராயினும், எச்சாதியராயினும், எம்மதஸ்தராயினும், எத்தேசத்தராயினும், அவர்தான் உயர்ந்த புருஷர். அவருக்குத்தான் நல்ல சுகமுண்டு.

216. நன்ருகப்பிசையாத மாவுரொட்டி, தணலில்லாத அடுப்பிலிட்டு, எவ்வளவு நேரம் காத்திருந்தாலும், உப்பி நன்ருக வெந்திராது. நல்லொழுக்கங்களைப் பழகாது, சற்குருவையடையாது, தானே ஞானம் படைத்து எவ்வளவு காலம் இருந்தாலும், உண்மையான ஞானம் உண்டாகாது. துக்கமும் போகாது.

217. ஒருவன் சகல விஷய சுகங்களையும் அனுபவித்துக் கொண்டும், சுகமாக வாழ்ந்துக்கொண்டும் அறவாழ்க்கையை எவ்வகையாலும் பற்றி நடக்க முடியாது.

218. எரியாத அடுப்பிலிருக்கும் அரிசியை பக்குவமான அன்னமாக ஒருபோதும் காணமுடியாது. குருவினிடத்தும் வாக்கியத்தினிடத்தும் (அவர் செய்த உபதேசம்) சிரத்தையற்றவன் ஞானசுகத்தை நாடுவது மிக்க மடைமையாகும்.

219. பாரம் சுமப்பவனுக்கு சுமைதாங்கிக்கல் கிடைத்தால் எவ்வளவு சகாயமாகுமோ அதுபோன்று, துன்ப சமுசாரத்தில் மூழ்கினவனுக்கு நல்ல சாதுவின் சவகாசம் கிடைப்பது மிக்க சாந்திக்கிடமாகும்.

220. அறநெறியில் வாழ இச்சிப்பவன் முதலில் புலனடக்கம், விரதமிருத்தல், பட்டினி கிடத்தல் போன்ற ஆரம்பப் படிகளை அனுஷ்டித்து, நன்ருகத் தேர்ச்சி பெற்ற பிறகு, மற்ற சாஸ்திர முதலியவைகளை அனுஷ்டித்தால் நல்ல பலனைத் தரும்.

221. ஒருவன் தன் சரீரத்தை "**நான்**" என்று சொல்லுகிருன். அதையே தூரத்திலுள்ளவன் '**அவன்**' என்று சுட்டி அழைக்கிருன். '**நான்**', '**இவன்**', '**அவன்**' என்னும்

இம்மூன்றும் ஒன்றற்குரித்தாக முடியாதது. பரஸ்பர விரோத சொற்களாதலால், மூன்றையும் அதன் பொருளான சரீரமும் பொய்யேயாம்.

222. சுவானம் ஒருகாரணமுமின்றி மற்றொரு நாயைக் கண்டால் சும்மா குலைத்தவண்ணமிருக்கும். மனமும், யாதொரு நற்காரண காரியமுமின்றி கோபாதிகளை அடையும். ஆதலால், பெரியோர், நாயினேன் நான் என தம்மை இழித்துக் கூறிக்கொள்ளுகின்றனர்.

223. கரித்துண்டே வைரமாகிறது. கரித்துண்டைக் கத்தியால் வெட்டமுடியும். அதே வைரமானல், கத்தி மழுங்கிவிடும் மனம் ஆசையால் உலகப் பொருளை அடையும் போது, துன்ப வாளால் அறுபட்டு சிதறுண்டு போகும். நிராசையாகிய அப்பியாசத்தால் ஆனந்தவடிவ ஆன்மலாபம் பெற்றுவிடின், துன்பவாள் அம்மனத்தருகும் செல்லாது மழுங்கும்.

224. சுத்தமான கண்ணுடியை மரத்தில் காட்டினுல் எல்லாம் பசுமையாகத் தோன்றும், அப்பசுமை நிறம், கண்ணுடிக்குள் சேர்ந்திருக்கவில்லை. ஆபாசமாக பிரதிவிம்பித்துள்ளது. பரிசுத்த ஆத்மாவில் துக்கவடிவ சமுசாரம் கற்பிதமாகத் தோன்றுகின்றது. வாஸ்தவமாக இல்லை. அது அகங்கார சம்பந்தமேயாகும்.

225. பற்று, பந்தம், சமுசாரம், துன்பம் அனர்த்தம் என்பது சரீரத்தில் **நான்** என்ற அபிமானமேயாகும். **'நான்'** எனும் அகந்தை, சரீரத்தினின்றும் ஒழுங்காக விடுபட்டால் சமுசாரம் அனர்த்தமென்பதெல்லாம் போம்.

226. ஆயிரம் மணங்கு பாக்கு வியாபாரம் செய்வதை விட ஐந்து தோலா எடை தங்க வியாபாரம் செய்வது லாபகர மானது. அனேக ஆயிரம் புத்தகங்களைப் படிததுப் பல மதங்களையும் ஆராய்வதை விட, ஒரு மதானுஷ்டானத்தில் நின்று தன்னை ஆராய்வது மிக்க லாபம் தரும்.

227. ஓர் நகரத்தின் அலங்காரத்தைப் பற்றிப் பலவகை பேசிக்கொண்டிருப்பதைவிட, பேசாமல் நேரில் பார்ப்பது சிறந்தது. நானு நூல்களால் படித்துக் கடவுளை ஆராய்வதை விட மனத்தை அநுபூதி முறையில மௌனமாகச் செலுத்து வது சிறந்தது.

228. மரம் நன்ருக வளரவில்லையானல், அதுதரும் கனியும் நன்ருயிராது. மனம் தர்ம வழியில் நன்ருக அப்பியசித்து வரவில்லையானல், அது மோக்ஷ விஷயத்தில் நற்பலனைத் தராது.

229. கல், கடினமானலும், அது விக்ரகமாக மாறி நின்ற போது, அனேக ஆயிரம் மனிதருடைய புத்தியை ஜலமும் மெழுகும்போல நெகிழ்ச்சியுடையதாக்குகிறது. மனம், அசத்து துக்கவடிவமானலும், அது ஆன்மசொரூபமான போது, அதன் முன்னிலையை யடைந்த முமுக்ஷுகளை யெல்லாம். நெகிழ்த்தி பக்தி செய்யும்படி செய்து, நித்ய சுகவடிவ மோக்ஷ வழியை சுகமாகக் காட்டுகின்றது.

230. கண்ணினுள் சிறுதுரும்பு விழுந்துவிட்டால் அதை எடுக்க முயன்று திறந்தால் இவனிஷ்டப்படி நிற்பதில்லை. அதனிஷ்டப்படிதான் மூடிக்கொள்ளும். பிரயத்தனத்தால் விரல் முதலியகொண்டு பிடித்துககொண்டுதான் ஆராய வேண்டும். ஒரு கண்ணென்ற இந்திரியமே இவன் சொன்னபடி செய்வதில்லை; அங்ஙனமிருக்க, 'நான்'

செய்தேனென இவன் அகங்கரிப்பது எங்ஙனம் உண்மையாகும்.

231. ஆன்மா, தான் என அபரோக்ஷஞானம் பெற்றவன் தான் கலக்கமற்றவன்: மற்றையர் ஓரோர்கால் கலக்கமற்றவர்போல் காணப்படுவர்.

232. அனர்த்தமென்பது 'நான்', 'எனது', என்னும்பற்று. அதுநீங்கவே ஆனந்த வடிவதான அபரோக்ஷமாக விளங்கும்.

233. உபவாசம், உடல் சுத்திக்கும், உடல் வலிவிற்கும் மிகச்சாதகமாவதுபோல், மனம் விஷயத்தில் செல்லாமை, பேரின்ப வாழ்க்கைக்கு அநுகூலமும் பிரத்தியக்ஷ துக்க நீக்கமும் உண்டாகும்.

234 உலகத்திலுள்ள நூலெல்லாம் கற்றுவிட்டேனென்றால் மனமடங்காது. உன் இஷ்டப்படி செல்லவிடேன் என்று விவேகத்தோடு ஆசையை அடியோடுவிட்டால், மனமடங்கும்.

235. பூமியில் உழைத்தமட்டும் நல்ல பலன் தரும். பாரமார்த்திக வாழ்விலும், உழைத்தமட்டும் பேரின்ப நிலையின் சமீபம் சென்றுவிடலாம்.

236. சிறிது திரவியம் சேர்ந்தவன், மென்மேலும் திரவியம் சேர்க்கவே முற்படுவன். சிறிது ஆத்மீக வாழ்க்கையில் பயன்பெற்றவன், மென்மேலும் ஆனந்தமான ஆத்மீக வாழ்க்கையிலேயே செல்லுவன்.

237. அனேக நூறுமைல் யாத்திரை செய்பவன், ஒவ்வொரு அடியாகத் தன்காலடியாலேயே அத்தனைமைல்

தூரங்களையும் இணையாது கடந்துவிடுகிறேன். சாதகன், துக்கசமுத்திரத்தினின்று, குரு சாஸ்திரங் காட்டிய மார்க்கமாக சிறிது சிறிதாக வாசனையைக் கடந்து, குருகடவுட் கிருபையால் சகல மல வாசனையுங் கடந்து, மலையாது சென்று, பேரின்பவீட்டையெய்துகிறான். மன அடக்கம் அதாவது, **மனம்** நிராசையால் புறத்துச்செல்லாமைக்கு நிகரான செல்வம், எவ்வுலகத்துமில்லை.

238. மனிதனிடத்து அனேக குணங்களுண்டு. அவைகளில், தீயகுணங்களால், கீழ்ப்பிறவியையும், நற்குணங்களால், உயர்ந்த பிறவியையும், சுத்தசத்துவ குணங்களால், ஞான யோக்கிய பிறவியையும், அடைகிறான். இது தான் கடைசி பிறவி.

239. மனிதன், எவ்வகையாகவோ வாங்கத்தெரிந்தது போல, பொருளைக் கொடுக்கத் தெரிந்துகொள்ளவில்லை! அதனாலேயே, இவ்வளவு பெரிய துன்பம் அனுபவிக்க நேரிடுகிறது.

240. ஆற்றருகில் கரையில் உள்ள செடி ஜல ஓட்டத்தால் தான் பல துன்பம் அடைவதானாலும்; அதைவிட்டு விலகிச் செல்லத் தெரியாது அல்லல் அடைகிறது. அஞ்ஞானி விஷய ஆசையாகிய வெள்ளத்தில் பெருந்துன்பம் அடைந்தாலும், அதைவிட்டு விலகக்கூடாதவனாய்ப் பல இடையூறுகளை அனுபவிக்கிறான்.

241. ஆரம்ப தியானம் ஓடையின் நீர்போல வருவதும் போவதுமாகும். நிலைத்த மனத்தினது தியானம் வற்றாத கங்கையாகிய ஜீவநதியின் பிரவாகம் போன்று இடை

விடாது வந்துக்கொண்டிருக்கும். பூரண சமாதி பெற்ற மனம் பூரண ஜலம் நிறைந்த சமுத்திரம் போல நிறைந்த ஆன்மாவில் அழுந்தி பூரணமேயாகும்.

242. ஓர் சந்நியாசி லெளகீக விவகாரங்களில் செல்லு வானுயின் எப்படியும் மூடனுகச் செய்துவிடும்.

243. மோக்ஷமார்க்கம் ஊசிமுனையைவிடக் கூர்மை யானது.

244. பாதரசம் பக்குவப்படி உட்கொண்டால் உடல் நன்மையைத்தரும். பக்குவம் கெட்டதை உட்கொண்டால் தீமையே விளைவிக்கும். மனம் நூல் முறையே ஒழுகிவந்து சத்துவமாயின் மோக்ஷ சாதனமாகும். தீய வழியில் ஒழுகின் பந்த சாதனமாகும்.

245. மதங்கொண்டயானை பாகனுக்கடங்காது மதமின்றிய யானை, சிறு பையனுக்கும் அடங்கிவிடும். அதிக அகந்தை மமதையுடைய சந்நியாசி எவ்வளவு படித்தாலும், கேட்டா லும், விசாரித்தாலும், தியானத்தில் மனம் அடங்காது. அபிமானம் விட்டவன் ஆயின் அப்போது ஒரு வாக்கியத் தாலேயே மனம் சாந்தி பெறும்.

246 மனிதன் கடவுளால் கொடுக்கப்பட்ட நல்ல சாதனங் களை உதறிவிட்டுத் தன்னிஷ்டப்படி தன்னையே கொல்லும் கெட்ட துஷ்ட சாதனங்களை கைப்பிடித்துத் துன்பமே யடைகிருன்.

247. கண்ணுடியை நோக்கினுல் முகம் தெரியாது. பிரதி விம்ப முகத்தைக் கண்டால் கண்ணுடி தெரியாது ஆன் மாவைக் கண்டால் உலகம் தெரியாது. உலகத்தைக் கண்டால் ஆன்மா விளங்காது.

248. சிறுவரது விளையாட்டுச் சோறு அவர்களுக்குப் பசியைத் தணிக்காது வீட்டுச் சோறுதான் தணிக்கும். சாதனமின்றியவரது சாஸ்திரத்தாலாகிய யுக்தியால் ஜகத் மித்தை பிரமம் சத்தியமென்னும் உணர்வு துக்கத்தை ஒழிக் காது. சாதனம் நிறைந்து, குரு, ஈஸ்வர கிருபையுடைய வர் பெற்ற சாஸ்திர ஜன்னிய ஞானமே துக்கத்தைப் போக்கும்.

249. பொறுமை என சாதாரண மனிதர் கூறுவது தமசின் குணம். பொறுமையுடையவன் ராமனைப்போல, சமயோசிதமும், உண்மையுமான பொறுமையான குண முடையவனுதல் வேண்டும். தருமனும் அப்படியே.

250. மாந்தர், மனமடக்கம் கடினமென்பது சாதாரண வார்த்தையாய்விட்டது. ஆனல், சுத்த வீரனுக்கு மன மடங்குவதுபோல சுலபமான காரியம் யாதுமில்லை. கடவுள் கிருபை, நிஷ்காம புண்ணிய, உறம் பெற்ற விவேக ஆராய்ச்சியுடையவரே வீரராவர்.

251. எத்தனைப் பிறவியெடுத்தாலும், எத்தனைகோடி திரவியம் படைத்தாலும், எத்தனை மனைவி மக்களை கொண் டாலும், எத்தனை மாட மாளிகைகளில் வாழ்ந்தாலும், சுக முண்டாகாது. இத்தனையும் அநித்யமென்று நல்ல விவே கத்தால் நிராசையைப் பூரணமாகப் பெற்ருல், பரம சுக முண்டு.

252. அறிவிற் சிறந்தவரென்பவர், அனைத்தையும் துறந்த வரேயாவர்.

253. உலகப்பொருளை நினைக்க நினைக்க மனம் தூலமாகி

துக்கம் அடையும். பரம்பொருளை தியானம் செய்யச் செய்ய சூக்குமமும் எகாக்கிரமும் ஆகும்.

254. பரிசுத்த உணவை உண்பவன், பரிசுத்த காக்ஷியை காண்பவன், தனியிடத்து வாழ்பவன், நாளடைவில் சிறந்ததும், சுத்தமுமான மனத்தைக் கொண்டு, உயரிய நிலையை யடைவன்.

255. மனிதன் தினந்தோறும் தன்வாழ்க்கையின் குற்றங்களை நன்கறிந்தால் அவசியம் பரிசுத்தனுவான்.

256. உண்டபின் எல்லா உணவும் மலமாகிறதை நன்கு அறிந்தால், நாக்கு ருசியை அதிகமாகக் கருதமாட்டோம்.

257. பழத்தினுள் புழு இருப்பதைக் கண்டால், எத்தனை உயர்தரப் பழமாயிருப்பினும் வீசியெறிந்து விடுகிறோம். ஆணும் பெண்ணும் மலஉடல்தானே? இதையேன் மனிதன் தள்ளி விவேகத்தால் புழுக்கள் நிறைந்த பாண்டமென்று அறிந்திருந்தும் அருவருப்பதில்லை. ஆச்சர்யம்!

258. சென்ற அனேக யுகங்களிலும், இந்தயுகத்தின் 5040 வருஷமாகியும், இதுவரையில் இருந்த மன்னரும், மாண்புடைய ஞானியரும், பிரபுக்களும், மற்ற பண்டிதரும், எங்கே?. அவரது சிறப்பான வீடுமுதலிய தனங்களெங்கே? அனைத்தும் காணவோ, கேட்கவோ, ஒருசின்னமுமில்லை. மனமே! நீயும் அவர்களில் ஒருவன்தானே! உன் சிறப்பு எவ்வளவு அல்பம். சிறுபுழுவுக்கும் உனக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது.

259 வீரனது கையில் உடைந்தால் விறகிற்குத்தான் உதவும். சாதகனது மனம், இடையில் பெண், பொன் இவைகளை முன்னிட்டுக்கெட்டால், மூடரிலும் அதி மூடனுவன்.

260. வீணையின் கம்பி முன்னுல் இழுத்துக்கட்டப்பட்டால் நல்ல நாதந்தரும். தளர்த்திவிட்டால் நாதம் நன்ருயிராது. மனம் பரமாத்மாவான தன்னிலையில் ஸ்திரம் பெற்ருல் பேரின்பமாகும். அதினின்று உலக வியவகாரங்களில் விழுந்து தளருமாயின், சுகத்துக்கு எதிராக துக்கமே யடையும்.

261. பெண்ணையும் பொன்னையும் மோக்ஷசத்துரு என்பதை நன்ருக தியான விசாரஞ்செய்யும் முமூக்ஷு களுக்கே விளங்கும்.

262. உணவு உண்பதற்கு ஜலம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு மனோசாந்தத்திற்கு விசார தியானம் அவசியம் வேண்டற்பாலதாம்.

263. கற்கண்டிற்கு இன்சுவை சுபாவம். வேம்பிற்கு கைப்பு சுபாவம். சத்துவ மனத்திற்கு ஆனந்தம் சுபாவம் ரஜோ, தமோ, மனத்திற்கு துக்கம் சுபாவம்.

264. பெரிய கற்பாறையினுள் தேரை உயிர் வாழ்வதென் ருல், கடவுளின் அற்புதத் திருவிளையாட்டிற்கு வேறென்னை உவமை கூறமுடியும்! எல்லாம் இறைவன் திவ்ய மஹிமையேயாகும்.

265. தற்போது பிறருக்கு உபகாரம் செய்வதைப் பார்க்கிலும், தான் பிரமச்சரியம் அநுஷ்டிப்பது சிரேஷ்டமானது.

266. துக்க சொரூப கற்பனைக்கெல்லாம் மனமே காரணமாதலால் மனத்தைத் தன்னிலையில் நிற்கப் பழக்கினுல் யாவும் போம்

267. மரத்தில் புஷ்பிக்கும் கணக்கற்ற புஷ்பங்கள உதிர்ந்து போகின்றன. சில புஷ்பங்களே பலத்தோடு கூடியதாகின்றன. உலகத்தில் கணக்கற்ற மனிதர் பலனற்ற மார்க்கத்திலேயே சென்று நாசமாகின்றனர். சிலரே பிறந்ததின் பயனைப் பெறுகின்றனர்.

268. அற்ப மதியினருக்கு உலக வியவகாரமும் லௌகீக சுகமும் ஒழுங்காகக் கிடைப்பது என்றுல் அவர்களுக்கு பேரின்பம் எங்கே லபிக்கும்.

269. ஒவ்வொருவரும் கீதையைப் போன்ற உயர்தர நூல்களைக் கற்று அதன்படி சிறிதாவது ஒழுக வேண்டும்.

270. கரடி புகுந்த வீட்டில் உண்ட உணவும் பின் உண்ணப் போவதும் சுகமாக இராது. ஆசை புகுந்த இருதயத்தில் செய்துவந்த தியான விசாரமும், செய்யப்போகும் தியான விசாரமும் நல்ல பயனைத் தராது.

271. ஓர் வனத்தில் ஒரு குடியானவன் மாலையில் உணவு நன்ருக உண்டு உறங்கும்போது வாசற்படிக்கெதிரில் வெளியே தீயை மூட்டிவிட்டு சுகமாக நித்திரையிலிருந்தான். கரடி வந்தது. தீயைக் கண்டு சமீபிக்காமல் வெகுதூரம் ஓடிவிட்டது. ஞானி நிராசை ஞான வடிவ

அக்கினியைத் திடமாக சம்பாதித்து வைத்து முக்தி சுகத்தில் வீற்றிருக்கிருன். அவனிடம் ஆசையாகிய கரடி செல்லவே இடமில்லை.

272. நடு சமுத்திரத்தின் ஆழம் கண்டாலும் காணலாம். மனிதரின் ஆசை அளவு காண முடியாது.

273. ஒருவன் நெருப்பில் பாய்ந்து செல்வதைவிட, ஆசையில் கட்டுப்பட்டு வாழ்தல் மிகக்கொடியது

274. சிறுவர்கள் விளையாட்டு, வயது வந்தவர்கள் திருஷ்டிக்கெப்படியோ, அப்படியே ஞானியின் திருஷ்டிக்கு யுவர்களின் உலக வியவகாரமும்.

275. அடுக்கடுக்காகத்தான் மலையின் சிகரம் நீண்டிருக்கும். அதனுல்தான் அது சில காலம் நீடித்திருக்க முடிகிறது. அப்பியாசி கிரமமாகத்தான் மோக்ஷமாகிய ஆனந்த சிகரத்தை நிலைபெறச் செய்யவேண்டும். மனம் அவசரப்பட்டால் மண்சுவர் நீண்டிருந்தால் மழையில் கரைந்து இடிவதுபோல சீக்கிரம் கெட்டுவிடும்.

276. பரிச்சின்னமாகிய **நான்** என்பதொழிந்தால் அகண்டானந்தமாகிய தான் என்பது விளங்கும். கவலைக்கிடம் உலகம் சத்தியமென்னும் நினைவேயாகும்.

277. கற்பக விருக்ஷமும், காமதேனுவும், தேவேந்திரனும் அழிவது உண்மையென்ருல், இந்த அல்ப மாமிச உடலின் வாழ்க்கையில் என்ன உறுதி வேண்டும்?

278. மனிதனது ஆயுள் இலையின் நுனியில் தொங்கும் பனித்துளியைப் போன்றது என்று நூல்கள் கூறுகின்றன.

இதனுண்மையைத் தெரிந்தவர் இவ்வுலகில் பதின்மரைப் பார்ப்பது அருமையாகும்.

279. மோக்ஷம் மோக்ஷம் என்று சொல்லிக்கொள்ளும் ஜீவன்கள் அனேகரில், மோக்ஷத்தின் உண்மை வடிவம் இன்னதென்று பரோக்ஷமாகவாவது சமுசயமின்றி தெரியாது. அதுவிஷயமாகப் பெரியாரையடுத்து பழகிவந்து சிரத்தையோடு அவர்கள் உபதேசத்தை கிரஹித்தவருக்கே தெரியும்.

280. மறந்தும் தலையில் நடக்க ஒருவருக்கும் எண்ணமுண்டாவதில்லை. ஞானி மறந்தும் ஜகத்தையும் திரேகத்தையும் சத்தியமென்றெண்ணுவதில்லை.

281. மனமே! எல்லாச் செல்வமும் சரீரம் பிணமான மாத்திரத்தில், நீங்குவது சத்யமென்பதை, சத்யமாகக் கண்டிருக்கிறாய். இங்ஙனம் நீ கண்டது உண்மையானால். கிடைத்ததைக் கொண்டு சந்தோஷமாயிரு. உனக்கு மிகச் சிறந்த உபதேசம்.

282. வீதியில் நடப்பவர் சுமையைத் தலையில் வைத்துக் கொண்டு சாக்கிரதையாகப் பார்த்து நடந்து செல்லுகின்றனர்; என்றால் சாதுக்களும் அப்படியே பரசிவ காரியங்களில் ஆன்ம திருஷ்டியை விடாதிருத்தல் கூடும் என்பதில் என்ன சமுசயம்.

283. இப்போது மலையை விட்டு அதாவது குகை வாசம் விட்டு வந்து சுமார் 4 மாதங்களாகின்றன. மீண்டும், முன் பழக்கத்தால் மனம் தனித்த மலைப் பிரதேசத்தையே நாடி ஸ்மரிக்கிறது. ஆனால், யாண்டும் நலமானால், உனக்கினி

என்னை தனியிடத்துக்குக் குறைவென்று கூறும் விவேகத்தின் உபதேசத்தைக் கேட்டு மனம் மிக்க சந்தோஷிக்கிறது.

284. 100க்கு 90 பேர்கள் போலி போகங்களிலே பிரியமுடையராகின்றனர். அதனால் ஏராளமான போலிப் பொருளும் அதற்கேற்ப துன்பமும் அதிகம் அடையப் படுகின்றன.

285. கல்லைக் கனியாகப் பிழிய சக்தி பெற்ருலும், மனதை நிற்கச் செய்வது அவருக்கு அசாத்யமேயாகும்.

286. பனித்துளி இலையில் தொங்குகிறது. அது அந்த இலையினின்று விழுவது எவ்வளவு சுலபமோ அது போன்றது மனிதருடைய ஜீவனம்.

287. மனிதருக்கு ஒரு போது மனைவியும் புருஷனுமென்ற பெயர் வரும்போது ஒரு நாள் மட்டும் கல்யாணமென்று கூறுகிருர்கள். உத்தம தியாகியான ஞானிக்கு என்றும் கல்யாணமே, ஒரு நிமிஷமும் கல்யாணமின்றிய நாள் இல்லை.

288 ராமனது ஒழுக்கமும், லக்ஷ்மணனது சேவையும் சீதையின் பக்தியும், அநுமானது பிரமசரியமும், பரதனது பிடிவாதமும், விபீஷணனது சரணுகதியும், மிகச்சிறந்தவைகள். ஆனுல் இவை யாவும் ஒரு ராமனது ஒழுக்கமாகிய தீபத்தின் முன்னேதான் விளங்கின. அத்தீபம் இல்லையானல் இவைகள் விளங்கா.

289. கந்தைத் துணியையும் துவைத்து சுத்தமாக அணிந்தால், அதற்கேற்ற பரிசுத்தம் அவசியமுண்டு வயோதிகரும் தயங்காமல் மனவடக்க அப்பியாசம் பெற்ருல் எப்படி

யும் நன்மையே விளையும். அது மோக்ஷத்திற்கே அனுகூல மாகும்.

290. தன்னடக்கமின்றி செய்யப்பட்ட பரோபகாரம் தனக்கும் பிறருக்கும் துன்பமே தரும்.

291. வயலில் நெற்பயிரோடு புல்லும் வளரும்; அப்போது பேதந் தெரியாது. விளைந்து கதிர் முற்றும்போது தான் இது நெல், இது புல். என்று தெரியும். சாது, அசாது, இருவரும் பார்வையில் வேற்றுமை தெரிவது துர்லபம். மனவடக்க சமாதி, அசமாதி, நிராசை, ஆசை, முதலிய காரியங்களாகிய இவைகளால் காணலாம்.

292. ஒரு வீட்டின் சர்வபாகங்களும் தகப்பனுக்குச் சொந்தமென்று அனுபவமும், குழந்தைகளுக்கு ஒவ்வொரு மூலேயே தங்களது விளையாட்டில் சொந்தமென்றும் அனுபவிக்கின்றன. சைவ வைணவராதி மதத்தினர் இறைவனது ஒவ்வொரு பாகங்களேயே கண்டு ஆனந்திக்கிருர்கள். ஞானி இறைவனது சர்வ பாகங்களேயும் அனுபவித்து ஆனந்திக்கிருர்.

293. ஜலமில்லாத பயிர் வாட்டம் போன்றது தியான மில்லாத விசார சீலரின் வாழ்க்கை.

294. மனிதர் தனக்குப் பிரயோசனமற்ற கல்வியையே ஏராளமாகக் கற்று வருகின்றனர். இன்னும் தன் பொருட்டு கற்க வேண்டியதைக் கற்கவில்லே. அங்ஙனம் தன் பொருட்டுக் கற்றவர் சிலரேயாவர்.

295. இன்றிரவு 1 மணிக்கு சொப்பனத்தில் ஒரு ஆலயத் திற்கு தரிசனம் செய்யப்போகும்போது ஸ்ரீ சற்குருநாதன்

அதே ஆலயத்தில் தரிசனம் செய்துவிட்டு எதிரில் வரும் போது தரிசனம் கிடைத்தது. உடனே மனம் உருகி கண்ணீர் ததும்பி மயர்க்கூச்சல் உண்டாயது. அதை அருளால் அடிமையைப் பார்த்து நிறுத்தி '**உன சேதனவடி பிரக்ஞையில் நில். கண்ணீா ததும்பும் புற நிலையைப் பற்ருதே**' என ஓதி இடை இடையே வற்புறுத்திக் கூறியருளவும், உடனே மனம் அப்படியே நின்றது. ஆனுலும் ஆசாரியர் அருளை நினைந்து மீண்டும் கண்ணீர் ததும்பியது. இதென்னை? இவ்வாறு வேண்டாமென்று மறுத்தருளினர். உடனே சற்குருநாதன் தம்மிடத்தன்பினுல் அடிமை கண்ணீர் விடுகிறேனென்றதைக் கண்டு புன்சிரிப்போடு மந்தகாசங்கொண்டு நின்றனர். அத்திவ்ய திருவுருவமோ திகழும் கையில் ஒரு கோலும் ஊன்றியதாகக் காணப் பட்டது.

296. '**செய்வன திருந்தச் செய்**' என்றது ஒளவையார் வாக்கியம். இது மிக மிக உயரிய அனுபவ வாக்கியம். இதை சிறுவர் முதல் சிறந்த சாதுக்கள் பரியந்தம் சகலரும் அனுஷ்டிக்கத் தக்க உயரிய உபதேசமாகும். சிலர் மேல்போக்காக புத்தகத்தைப் படித்துத் தாமும் ஞானி என பாவித்துக் கொள்ளுகின்றனர். பின் அவர்கள் லாப நஷ்டங்களில் படுந்துயரைக் கண்டால் பரிதாபமாகத் தோன்றுகிறது. இவ்வாக்கியத்தின்படி நடந்தால் யாரும் அதிக கிலேசமடைய வேண்டியிராது.

297. இராமன், இராவணுதி அரக்கர்களின் துஷ்டகாரியங்களைக் கண்டு கலங்கவில்லை, ஆதலால் **அவிகாரி**. மூல பல சைன்னியங்களை கிரியையின்றி மாய்த்ததால்

அக்கிரியன். சீதையை பக்ஷபாதமின்றி தீயில் இரங்கச் செய்ததால் அஸ்பரிசன்.

298 அன்னை தன் மடியிலுள்ள தின்பண்டத்தைவிட, கடையில் வாங்கி தயார் செய்து கொடுக்கும் தின்பண்டத்தில் வருத்தமடைகிருள். கடவுளும் ஜீவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பதைவிட, உலகப் பொருளைக் கொடுப்பதில் அவ்வளவு இஷ்டமும் சுலபமுமல்ல.

299. சொப்பனங் கண்ட ஊமை விழித்த வகைபோல், சகலரும் இவ்வுலகை விட்டு நீங்குவதாயிருக்க இதிலென்ன ஆசை வேண்டும்.

300 மனிதன் கல்லை விழுங்குவது எவ்வளவு ஆபத்தோ அதே போன்று 'நான்' என்று தேகத்தும், 'என'தென்று பிரபஞ்சத்தும் வைக்கும் அபிமானத்தில் ஆபத்தே நிறைய உண்டு. ஆனல் மனிதன் நன்குணரவில்லை.

301. பெண்ணசை, பொன்னசை, எவ்வளவு மனிதன் கொள்ளுகின்ருனே. அவ்வளவு நமனை எட்டி சீக்கிரம் செல்லுகிருன்.

302. வாழ்வு இலையில் தொங்கும் பனித்துளியை ஒத்து, அல்பமென்பதை யறிந்தால், அதிசீக்கிரமாக பேரின்ப வாழ்க்கையைப் பின்பற்றுவன்.

303. வாளின் நுனியில் நடப்பவனுக்கு எள்ளளவும் சுகமிராது. விரோதமாக மிக்க துன்பமே உண்டாம். விடயங்களோடுகூடி வாழ்பவனக்கு சர்வதா துன்பமே யுண்டாம்.

304. ஒரு பால் விற்பவள் பல நாட்களாக பாலில் ஜலம் கலந்து விற்று அநேக திரவியங்களைச் சேர்த்து வைத்திருந்தாள். செல்வம் அதிகம் சேரவும், தனது சிறு குடிசையில் வைக்கப் பயந்து அதைத் தனது குமாரனுன பெரிய வியாபாரியிடம் கொடுத்துவைக்க அயலூருக்கு எடுத்துச் செல்லும் இடைவழியில், அலுப்புத்தீர ஒரு ஆலமரத்தடியில், ஒரு பெரிய ஆழமான தடாகத்திஞேரம், படுத்து சிரம பரிகாரஞ் செய்து கொண்டிருந்தாள். தலையில் மூட்டையை வைத்து படுத்திருக்கும் கிழவியைக்கண்ட குரங்குகள், சோற்று மூட்டை என்று நினைத்து ஒரேபாய்ச்சலாக நாலைந்து குரங்குகள் திடீரென்று அவளைப் பயமுறுத்திப் பாய்ந்தன. கிழவி திடீரென பயந்தலறி எழுந்தாள். உடனே ஒரு பெரிய குரங்கு மூட்டையைக் கஷ்டப்பட்டு தூக்கிச் சென்று உச்சியில் வைத்துப் பத்திரமாக அவிழ்த்து விளையாட்டாக அனேக ரூபாய்களை எடுத்து, தின்பண்டமில்லாத கோபத்தால் சோதிப்பதாகத் தடாகத்தில் வீசி எறிந்தது அதைக் கண்ணுற்ற கிழவி அழுதவண்ணம் அலறினுள். அதற்குள் அனேக ரூபாய்களை எறிந்து ஆய் விட்டன. பின் தைரியம் தோன்றி கல்லை எடுத்தாள். குரங்கு மூட்டையைக் கீழே விட்டது எடுத்து எண்ணிப் பார்த்தாள். மொத்த தொகையில் காலே அறைக்கால் பங்கு ரூபாயே இருந்தது.

305 தத்துவஞானம் – கர்ணனை வேடுவபுத்திரனன்று, அரசிகுந்தியின் புத்திரனென்றறிவதுபோல, நான் மனிதனன்று, நான் பலவானன்று, நான் இச்சாவானன்று, நான்புத்திமானன்று, நான் அறிஞனன்று, எனத்தள்ளி சர்வத்திர அதிஷ்டானமான தன்னை பிரஹ்மமாக ஸ்வானுபூதியால் அனுபவித்தல் தத்துவஞானம்.

306. **மனோநாசம்** – அரக்கர்கள் ஒழிந்தார்கள் என்றால் ராவணன் போன்ற துஷ்டர்கள் ஒழிந்தார்கள், விபீஷணன் போன்ற சிஷ்டருண்டு, எனக்கொள்ளுதல் போல, குரு ஈஸ்வரப் பிரசாதத்தால் ரஜோ தமோ குணங்களின் பரிணமங்களான ராக மோகாதிகளை அப்பியாசத்தால் நாசஞ் செய்து சத்துவ மனம் உண்டென்று கொள்ளல் வேண்டும்.

307. **வாசனாநாசம்** – ஆகாயத்தில் கண்ணுக்குத் தெரியாத மலின அணுக்கள் பறக்கின்றன. அவை நிறைய மழை பெய்யும்போது நாசமாகும். ஆகாயம் நின்மலமாம். ஆன்மாவின்கண் அனன்ம வாசனையணுக்கள் தங்கியிருக்கும். அவை யாவருடைய பிரயத்தனத்தால் ஆன்ம வாசனை நிறைந்து, சுத்தசத்துவத்தின் நிரோத வடிவ மேகம் நிறைந்தபோது, ஆனந்த வடிவ மழை நிறையப் பெய்யும்போது அவ்வாசனை பொழிந்துபோம்.

308. நெருப்பைத் தொடுவது, தின்பது இதைவிட, பெண்ணையும், பொன்னையும் அடைவது மகா சுடுகையையுடையது.

309. கரைந்த மாவு வெல்லத்தையடையும். கரைந்த மனம் ஆன்மாவையடையும்.

310. நன்றாக சுடப்பட்ட மட்பாண்டத்தில் நல்ல ஓசை கிளம்பும். நன்றாக பேரின்பம் அனுபவித்தவர் வாக்கில் நல்ல இனிய சொற்கள் வெளிவரும்.

311. எதிரிகளிடம் அஞ்சா நெஞ்சம் படைத்த அரசனுக்கு அரச உரிமை பூரணமாகும். சர்வ பூவுலகையும் அவனாள்வன். விஷய ஆசை குரோத முதலியவைகளிடம் இணங்

காத சுத்த துறவிக்கு பூரண சுகமாகிய ஆன்ம ராஜ்யம் சொந்தமாகும்.

312. சிவாஜி என்ருல் உலக சரித்திரத்தில், உயர்வுடை மக்களில் ஒருவரென்று கற்றவர்க்குத் தெரியும். நல்ல ஞானி என்ருல், ஞானமகனீயர்களில் ஒருவரென்று, நல்ல நூல் கற்று நல்ல சுபாவமுடைய மக்களுக்கு நன்கு தெரியும்.

313. கரும்பைக் கண்டால் சிறுவர் மனமுருகும். இறைவன் பெயர் கேட்டால் நல்லோருக்குச் சித்த முருகும்.

314. அறநெறி நின்ருல் ஆசை யொழியும். ஆசை நீங்கின் ஆன்மநேயமாம். இன்னலொழிப்பது ஏக ஞானமாம்.

315. அஞ்ஞானிகளுக்கு மரணத்தைப்போல புனித சம்பவம் வேரென்றில்லை ஞானிகளுக்கு நிவர்த்தியைத் தவிர வேறு இவ்வுலகத்தில் விரும்பத்தக்கவையில்லை.

316. இவ்வுலகில் புனிதமானவை **நிராசை** ஒன்றுதான். அது பெண், பொன் இரண்டில் ஆசை யற்றிருத்தல்.

317. காதலர்கள் இளமையில் மோகம் வரும்போது, இனி வயோதிகத்தில் நம் நிலைமை எப்படியிருக்கும் என்பதை நினைத்தால் அந்த மோகம் அதிகரிக்காது அடங்கும்.

318. கூர்மையான அம்பு சுலபமாக இலக்ஷியத்தில் செல்லும். சுத்த நிராசையையுடைய மனம் சுலபமாக ஆன்மாவில் அழுந்தும்.

319. மிக நுண்மையான மாப்பண்டங்களை அதிகமாக புசித்தால் குடலுக்கும் உடலுக்கும் கெடுதியே மிகையாக உண்டாகும் அதி நுண்மையான ஆனன்ம வாசனையை உள்ளே தங்கவிட்டால் தற்போதைய விக்ஷேப துக்கமும், மறுமையில் தீராவிடும்பையுடைய பிறவியுமாம்.

320. பழத்தின் ருசியெல்லாம் பக்குவத்திலுள்ளது. சாத்திய ஞானத்தின் உறுதி வைராக்கியத்திற்கேற்ற வாருளது.

321. இயம நியமம் எவ்வளவு நன்ருய் அனுஷ்டிக்கப் பட்டிருக்கிறதோ, அவ்வளவு இந்திரிய நிக்கிரஹம் உண்டாம் இந்திரிய நிக்கிரஹம் எவ்வளவு நன்ருகத் திடப்பட்டிருக்குமோ, அவ்வளவு தியானமுண்டாம் தியானத்தால் எவ்வளவு மனம் சாந்தி அடைந்துள்ளதோ, அவ்வளவு பேரின்பம் வெளியாகும்.

322. சிறுவர்கள், தின்பண்டம் கொடுத்துப் பழகினவர் களிடம் மிக்க அன்புடையவராக இருப்பார்கள். மனமும் எந்த விஷயத்தில் சுகமென்று பழக்கி வைக்கின்ருேமோ அதற்கேற்ப நாடிச் செல்லும்.

323 கர்வங் கொண்ட யானையைப் பாகன் பல உபாயங் களால் அடக்கியும் அடங்கவில்லையானல், பின் இரும்பு உலக்கையால் அடித்து அடக்கிவிடுவான். அபிமான முள்ள அகங்காரத்தை, அப்பியாசி பல உபாயங்களால் அடக்கமுடியவில்லையாயின், வேறு உபாயமெல்லாம் விட்டு தனித்த இடத்துள்ள பெரியாரை இடைவிடாது நேசித்து அவர் கூறுமுறையை அனுஷ்டிக்கில் அடங்கும்.

324. உணவைப் பற்களால் மென்றுதான் விழுங்க வேண்டும். அப்போது நன்ருக ஜீரணமாகும். ஞானமும், தியானம் விசாரம் இரண்டால்தான் வரும். அப்போது பிரதி பந்தமின்றி பேரின்பநிலை அதிகாரிக் கெய்தும்.

325. ஊற்று ஜலத்தை, எத்தனை மண் கல் கொண்டு மூடினுலும் அடைபடாது கசிந்துக்கொண்டேயிருக்கும். நல்ல பிரமசாரிக்கு, எத்தனை துன்ப வியவகாரம் தோன்றினுலும், அதில் அவன் அசைந்து சலிக்கான். சுகியாகவே களித்திருப்பன்.

326. தீயைக்கண்ட கற்பூரம் தீயாக மாரிவிடும்- ஆன்மாவில் நின்ற மனம் ஆனந்த ஆன்மாவாவே ஆய்விடும்.

327. செடிக்கு, ஆரம்பத்தில் எவ்வளவு ஜலம் எருவிட்டு பாதுகாத்து வருகின்ரேமோ, அதற்கேற்ப காலத்தில் பலந்தரும். அப்பியாசி, எவ்வளவு ஒழுக்கங்களில் தேர்ச்சி பெறுகின்ருனே, அவ்வளவில் ஆன்ம வாழ்க்கைத் தடையின்றி பெறமுடியும்.

328. சிறுபாலகர்கள், தொட்டிலில் ஒருவருமில்லாதபோது தானே சிரித்துக்கொண்டு ஆனந்தமாக இருக்கின்றனர். என்ன காரணம். உலக அபிமான ஆசைகள் அவர் மனதைப் பங்கிட்டுக்கொள்ளவில்லை. ஞானியும், சதா ஆனந்தமாகவேயிருக்கின்ருன். ஏன்? அவன்மனம் எந்தப் பொருளிலும் அபிமானம் வைப்பதில்லை.

329. உடன்பிறந்த முட்டையைப் பக்குவம் வந்தபோது பறவை அதைவிட்டு விலகி தனித்து வாழ்கிறது. மனிதனும் பக்குவம் வரும்போது சரீரத்தில் பற்றற்று அன்னியனுகவே வாழ்கிருன்.

330. ஜலத்தின் ஓட்டம் குறைய வேண்டின் அதன் வருவாயை மூடவேண்டும். மனத்தின் சஞ்சலம் குறைய வேண்டின் அதன் சங்கல்ப நதியின் வருவாயான இந்திரிய நிக்கிரகம் அவசியம் வேண்டும்.

331. யோகம், பக்தி, கருமம், விவேகம் அனைத்தும் ஞானத்திற்கு சாதனம்.

332. நசிகேதுபோன்ற விவேக விரக்தி உள்ளவனுக்குத் தான் பூரணமோக்ஷ பலன் உண்டாகும்.

333. நல்லவர்கள் நல்வழியில் செல்ல முதல் மார்க்கம் அஹிம்சையும் பிரமசரியமும்.

334. குயவன் செய்யும் மட்பாண்டமெல்லாம் அவசியம் சில நாளில் முன்பின்னாக உடைந்துவிடும். பிரமன் சிருஷ்டித்த உடலனைத்தும் முன் பின்னாக அவசியம் அழியும். இதை அறிந்தும் சிலர் கலங்குவதேன்?

335. தேனழிக்கச் சென்றவன் தேன் சாப்பிடாமல் வர மாட்டான். தியானம் நன்றாகச் செய்பவன் விசாரவாயிலாக அவசியம் ஆன்மானந்தம் பெற்றே தீருவன்.

336. குழந்தையின் அழுகுரலைக் கேட்ட தாயின் இரக்கத்தைவிட, பக்தனின் அழுகுரலைக் கண்ட கடவுள் சீக்கிரம் அருள் புரிகின்றார்.

337. ஞானி பரமாத்ம சொரூபமே ஆனவன். ஆனதால் அவன் யாதொன்றைவும் விரும்புவதில்லை.

338. கடல் ஜலத்திற்கு அளவில்லை. இறைவன் அருளுக்கு அளவில்லை

339. கடாதிவிடயங்களைவிட இந்திரியங்கள் சூக்குமம். இந்திரியங்களைவிட மனம் சூக்குமம். மனத்தைவிட புத்தி சூக்குமம். புத்தியை விட ஆன்மா சூக்குமம்.

340. கடாதிவிடயங்களைவிட, தூல சரீரம் சிறந்தது. தூல சரீரத்தை விட, இந்திரியம் சிறந்தது. இந்திரியத்தை விட, பிராணன் சிறந்தது. பிராணனைவிட, மனம் சிறந்தது. மனத்தைவிட புத்தி சிறந்தது. புத்தியைவிட, ஆன்மா சிறந்தது.

341. விஷயப்பற்றுள்ளவன், அனந்தங்கோடி திரவிய முள்ளவனானாலும், அவனே பரம ஏழை. விஷயப்பற்று நீங்கினவன், ஒருபொருளும் தனக்கென இல்லாத தன்மை யால் அவனே பெரிய பிரபு. இது அவரவர் அனுபவத்தில் விளங்கும்,

342 வசிக்கும் இடம் சுத்தமாக வைத்துள்ளவன் சரீர சுத்தியும் வேண்டும். சரீர சுத்தியுள்ளவன் இந்திரிய சுத்தி வேண்டும். இந்திரிய சுத்தி உள்ளவன் மனோ சுத்தி வேண்டும். மனோ சுத்தியுள்ளவன் அவசியம் ஆனமா னந்தம் பெறுவன்.

343. மோக்ஷமடையும் பொருட்டு பயிற்சி செய்பவர்கள், நல்ல மகான்களையடுத்து, அவரது நடையையும் அவரது உபதேச மொழிகளையும் அவரது சிறந்த லக்ஷியங்களையும் பின்பற்றி நடக்கவேண்டும். வெறும் படிப்பால் மோக்ஷ மடையமுடியாது.

344. நல்ல வார்னிஷ், தக்கையில் அடித்தால் தக்கை யோடு சிலநாளில் நாசமாகும். அதையே நல்லதேக்கம்

பலகையில் அடித்தால் நீடித்திருக்கும். பின் அழிந்தும் பலகையிருக்கும். மனம், அல்ப அநித்ய விடயங்களைப்பற்றி வாழ்ந்தால் இடைஇடையே அழியும். அப்பொருளுக்கேற்ப துக்கமடையும். நித்ய ஆன்மாவைப்பற்றி வாழ்ந்தால் பூரண சுகமடையும். பின்தானும்போம்.

345. மனத்தை வென்றவர் பெரியோர். அதை வெல்லாதவர் சிறியர்.

346. விஷயங்கள் சாரும்போது மலையைப்போல் அசையாதிருக்க வேண்டும். கடவுளை நினைக்கும்போது மெழுகைப் போல் உருகவேண்டும்.

347. ஆசையற்ற வாழ்க்கையே பூரண வாழ்க்கை.

348. குரங்கு, மனிதன், இருவக்கும் இரண்டு தேங்காய்கள் கிடைத்தன. குரங்கு,தேங்காயை பலவகைகளிலும் முயன்று மட்டையையே சுரண்டி துன்பமடைந்து, சுகங்கிடைத்தது போல பாவித்து, கடைசியாகதேங்காயைவிட்டுச்சென்றது. மனிதன் சுலபமாக அதை உடைத்துப் பருப்பை சுகமாகத் தின்று பசி தீர்த்துக்கொண்டான். அதன் அவாந்திரப் பயனை ஜலமும் குடித்தான். அஞ்ஞானி, ஞானி, இருவரும் ஒரே உலகில் இருக்கின்றனர். ஆனல், அஞ்ஞானி புரம்பில் அபிமானமுடையானய், ரசமற்ற விஷயத்தையே புசித்து மாண்டுபோகிருன். ஞானி, விஷயத்தின் ரச அதிஷ்டான வடிவ ஆனந்த ஆன்மாவை அனுபவித்து அவாந்தரப் பலனை சத்துவகுண சம்பத்தையும் அனுபவித்து வாழ்கிருன்.

349. பெரிய என்ஜினியர் காவிரி போன்ற நதியின் பிரவாகத்தைத் தன் புத்தியின் விவேகத்தால் அணைகட்டி

நிற்கச்செய்கிறுன். ஆனுல், சின்ன இந்திரியங்கள் பிரவாக வேகமாக விஷயங்களில் செல்லாது நிற்கும்படி செய்வது முடியாத காரியமாயிருக்கிறது.

350. எவனுக்குத் தன் குற்றம் தனக்கு நன்ருகத் தெரிந்து அகற்ற முயற்சிக்கின்ருனே அவன் சீக்கிரம் உயர்ந்தோனுவான்.

351. மிகப் பழைமையும், புதுமையும் வாய்ந்த பொருள் ஆன்மா ஒன்றுதான்.

352. மனத்தின் நாசமே மாயையின் நாசம்.

353. மெல்ல மெல்ல நடந்து, ஒரு வருஷத்தில் எத்தனையோ மைல்கள் நடந்து, அனேக க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கடின பாதைகளையுங் கடந்து, வருகின்றனர். ஆனுல், ஆறடி நீளமுள்ள சரீரத்தைக் கடப்பது கடினமென்கிருர்கள்.

354. கற்பனைக்கெல்லாம் மூலம் ஆசையே. ஆசையொழிந்தால் சங்கல்ப கற்பனையெல்லாம் போம்.

355. மனே நிரோதத்தால் உளதாகும் பேரின்ப சுகமொழிய, வேருெரு சுகமும் இடைவிடாதனுபவிக்க முடியாது. அப்படி அவைகள் ஓர்போது சுகம்போலக் காணப்பட்டாலும், அனேக தடைகளால் பிணிக்கப்பட்டுள்ளனவாதலால் அவைகள் துக்கமே என்று விவேகி அறிவான்.

356. சன்னியாசம் என்ற சொல், தலையை வழித்தல், காஷாய ஆடையையணிதல், முதலியவைகளால் அல்ல. உள்ளும் புறம்பும் நன்ருகப் பதார்த்தங்களை விட்டிருத்தலே அச்சன்னியாச சப்தத்திற்கு அருத்தமாகும்.

357. சில இளகிய மனத்தினர், புத்திமான்களாக இருந்தும், நூற்றுணிபும், பெரியார் சங்கமமிருந்தும், அல்பமாகிய சித்தியையும், சத்தியலோக முதலிய உலகங்களையும் சிறந்ததென்றும், அதனை ஞானி அறிந்திருத்தல் வேண்டுமென்றெண்ணுகின்றனர். பார்க்கப்படுவது யாவும் திரிசியம். அவை யாவும் அழியும், என்றவர் அறிய இன்னும் நிஷ்காம புண்ணியம் நிறைந்த பின்னரே விளங்கும். நிஷ்காம புண்ணியமற்றவனும், வீதியில் விளையாடும் சிறுவரும் ஒப்பாவர்.

358. துயரற்ற வாழ்க்கை, பரிசுத்ததுறவும் ஞானமுமேயாகும்.

359. உயர்ந்த பரிசுத்த ஆகாயத்தில் பறக்கும் கழுகு, தன் திருஷ்டியை நாறிக் கிடக்கும் பிணத்தில்தான் வைத்திருக்கும். அதுபோல சிலபோலி சாதுக்கள், வேஷத்தால் உயர்ந்திருந்தாலும், மனத்தால் அசுத்தமும் துக்கமுமான பொன், பெண் இவைகளையே நாடி கெடுகின்றனர். என்பது இராமகிருஷ்ணரது பொன்மொழி.

360. அறிவீனரது நட்பும் துக்க காரணம்; விரோதமும் துக்க காரணம். அதுபோல மனத்தோடு நட்புக் கொண்டு வாழ்தலும், அதனோடு துவேஷித்து வாழ்தலும், துக்க காரணம். எவ்வகையானும் அதன் சம்பந்தம் விட்டிருத்தலே பரம சௌக்கியம்.

361. ஞானி ஒருவனொழிய மற்றயருக்கு சுகதுக்க மானவமானங்களில் சமத்துவம் உண்டாவது சாத்தியமன்று

362. மனிதருக்கு அபிமான வசத்தால், சகல நிர்வாகமும் உண்டாகின்றதென்று நினைக்கின்றனர் இல்லை அவ்வபிமானத்தால் துக்கம்தான் உண்டாகும். பிராரத்வம் ஈஸ்வர நியதியின்படி சகல சீவரது வியவகாரத்தையும் நடத்தி வைக்கின்றது. ஞானிக்கும் அப்படியானதால் அவன் அபிமான மற்றிருந்தும் வியவகாரம் நடக்கின்றது.

363. கீதைதான் தற்கால மனிதரது முழு சட்டத்தையும் கூறும் வேதம்.

364. சிறுவர்களுக்குத் தாய், தந்தையர் உணவு நல்ல தாகத்தந்து வளர்த்தல்போல,நல்லகுணத்தையும் போதித்து அதன்படி நடக்கக் கற்பித்துவந்தால் அதுதான் மக்கள் தாய் தந்தையரால் பெறத்தக்க செல்வம். பொருட் செல்வம் அவ்வளவு உயர்ந்ததல்ல.

365. உபநிடதங்களை அல்லது, அவைகளின் அருத்தங்கள் நிறைந்த வேறு நூலையாவது குரு முகமாக நன்ருகக் கற்றறிந்தவருக்கு, பரமாத்மாவையேயன்றி வேறு பொருளில் செல்ல புத்தி நாடாது.

366. மூன்று மாத கர்ப்பவதியின் பிரசவம் போன்று, வைராக்யமும் நல்ல குரு, நல்ல சாஸ்திர சம்பந்த விவேகம், இவைகளோடு கூடாத ஞானம் பயன்படாது.

367. மாதா பிதாக்களுண்ட அன்ன பானத்தினின்றும் உண்டானது, மலம், மூத்திரம், கோழை, சுக்கிலம். இவைகள் ஒன்றுக்கொன்று சகோதரர்கள். சுக்கில பரிணம சரீரத்தை நானென்ருல், அவைகளின் சகோதரரான மலம் மூத்திரத்தையும் நானென்னல் வேண்டும்.

368. பழத்தை உடைத்தால் ரசமிருக்கும். காயை உடைத்தால் ரசமிராது. பெரியோர் முன்னிலையில் பக்குவருக்கு மனமடங்க ஞானமுண்டாகும். அபக்குவருக்குக் கசப்பு தோன்றும்.

369. ஒருவருக்குக் குழந்தை பிறந்தால் அதைப் பிரசவம் என யாவரும் வழங்கி வருகின்றனர். இதற்கு நல்லசவம் அல்லது நல்ல பிணம் என்று பொருள். ஆன்ருேர் இதை எவ்வளவு கௌரவத்தோடு ஊகித்து உண்மையான பெயர் வைத்தனர். இதன் அறிவு மக்களுக்கின்மையால் அல்லவா வீணே பிணத்தைக் காத்து அபிமானிக்கின்றனர்!

370. உட்கார்ந்து கண்களைமூடி நிமிர்ந்திருப்பது தியானமன்று. தியானம் ஆன்மா விஷயமாக நிரந்தரம் எழும் விருத்திக்கு தியானம் என்று பெயர்.

371. சாந்தமான மனம், சென்றவிடமெல்லாம் விசிராந்தியடையும். அதன் சாந்தம் நிலை பெற்றிருப்பதற்கு நிராசையைத்தவிர வேறு மருந்தில்லை.

372. நிராசை வேண்டியவர்கள், பெண், பொன் இரண்டையும் முதலில் விலக்கிப் பின் அவைகளை மனத்தில் சங்கல்பியாதிருக்கச் செய்யவேண்டும். முதலில் இது சிரமந்தான்; பின்னர் இது சாத்தியமாகும்.

373. சகல துக்க கற்பனைக்கும் மூலம் மனமாதலால், மனம் நசித்தால் துக்கம் நசிக்கும்.

374. எவ்வளவோ நூலறிவும், நுண்மை கூர்ந்தறியும் தெளிவுமுடைய புத்தியுடையராக அனேகர் காணப்படு

கின்றனர். ஆனல், தியானஞ் செய்ய வேண்டுமென்ருல் அதில் மயங்குகின்றனர். என்ன காரணம்? மலின வாசனையின் அதிகமே காரணம். சுத்த வாசனை, சிறிது சிறிது ஆகச் செய்யும் தியான ஜபத்தால்தான் நீங்கும்.

375. மரணம் என்ருல் யாரும் அஞ்சுகின்றனர். ஆனல் ஞானி அஞ்சுவதில்லை.

376. எத்தனையோ கோடி வருஷங்களாக அனுபவித்த விஷய போகங்களில், மனிதருள்ளும் சிலருக்காவது நல்ல அருவருப்பு வரக்காண்பது அரிதாக இருக்கிறது. இதற்கு காரணம் விபரீத மயக்க புத்தியேயாம்.

377. தியானம் செய்பவருக்குக் கர்த்தவ்யமான ஒரு காரியம் இருக்கலாகாது. அதனல் தியானம் செய்ய முடியாது. அது சிப்தமாம். (கலங்கும்)

378. புருஷோத்தமனன ஸ்ரீராம அவதாரத்தைக் காண வும், அவ்வவதாரத்தால் தரிசன உபதேச முதலியவை களையடைந்து, மோக்ஷமடைய காத்துக் கொண்டிருந்த அநுமான், அங்குதன, சபரி போன்றவர்கள் போல், இப் போதும் அனேக பெரியோர்களின் பிறவியில் நன்மையின் பொருட்டு அனேகர் காத்திருக்கின்றனர்.

379. கிருஷ்ணனே ஆத்மா, ராதை மனம், ருக்மணி விவேகம், ராதை பகவானை தூலமாகவே கண்டு மகிழ் வாள். மனமும் ஆன்மாவின் தூலப்பொருளையே கண்டு மகிழும், விவேகம் அந்தர ஆன்ம சுகமே பெறும் ருக்மணி அந்தர சதானந்த வடிவகிருஷ்ணனையே சேர்ந்து மகிழ்வாள்.

380. தன்னைப் புகழ்ந்து பகுமானித்துக் கொள்பவன் தானே கெடுகிறான். தன்னை இகழ்ந்து தன் செய்கையின் குற்றங்களைக்கண்டித்துத் திருத்திக்கொண்டு வாழ்வதோடு, பிறரிடம் தன் உயர்வைக் காட்டாது நடப்பவன் சீக்கிரத்தில் முன்னேற்றமடைகிறான்.

381. குணங்களெல்லாவற்றும் சிறந்து நிற்பது "சத்தியமேயாம்"

382. எந்தமதம் விவேகியால் நன்கு ஆராய்ந்து விசாரிக்க இடந்தருமோ அதுவே சிறந்த வைதீகமதம். நான் கூறியதை நம்பு, இதுதான் மோக்ஷமென்று கூறும் நம்பிக்கையுள்ளது உண்மை மதமல்ல.

383. வெல்லமண்டியில் எறும்பு செல்லாது. அதில் சிறு துளி எடுத்துத் தனியே வைத்தால் எறும்புகள் நிறைய சென்று மொய்க்கும். பரமானந்த ஞானியினிடம் விஷய வாஞ்சை கூட்டம் செல்லாது. அற்ப விஷயங்களில் செல்லும் மூடனிடம் விஷய வாஞ்சை வடிவ கூட்டங்கள் நிறைய சென்றடையும்.

384. கடமாகும் மண்ணும், குயவன் சரீரத்தில் சேரும் மண்ணும், மண்ணில் பலகடம குயவனால் செய்யப்படுகின்றன. அவைகளில் அனேகம் இருக்கின்றன; அனேகம் உடைகின்றன. ஆனால் அவன் சரீரத்தில் செய்யப்படும் மண்ணின் சூக்ஷம சக்திகள், அவன் சரீரத்தில் பாய்ந்து பிந்துவாகி, வேறு சரீரம் உண்டாகி அச்சரீரம் வெகுநாள் அதாவது பலவருஷங்கள் நீடித்திருக்கின்றன. இதேமாதிரி பிரகிருதி மண்ணில் சில ஞானிகள் அந்திய ஜன்மமுடைய

ராய் சாதாரணராகின்றனர். சிலர் ஒரு பிரளய பரியந்த மிருந்து உலக உபகாரார்த்தம் ஜீவித்துப்பின் விதேக மோக்ஷத்தை அடைகின்றனர்.

385. ஆலன்வேர் பாறையை நாளடைவில் பிளந்து ஊடுருவிச் சென்றுவிடும். ஆனால் ஜலாயசயங்களில் சென்றால், அதோடு நின்று முறடு கட்டிவிடும். விஷய வாசனையும், அகங்கார மமகாரமுடையாரிடம் வேகமாகச் சென்று துன்புறுத்தும். பரமானந்தாநுபவ ஞானியிடம் சென்றால், அப்படியே தடைபட்டு விடும். தன் காரியம் அங்கு செல்லாது

386. மாணிக்கமும், பொன்னும், பெண்ணும், மகனும் பஞ்சபூதமென்றறிந்தால் மோகமுண்டாகாது.

387. பூரண வைராக்ய முடையவனுடைய சித்தம் மகிழ்ச்சியாகவேயிருக்கும். அதுவே பிரத்தியக்ஷ பலம்.

388. நிராசையென்பது எல்லா வத்துக்களிலும், நிரசத தன்மையை நன்றாகக்கண்டு இச்சையற்றிருத்தல்.

389. கொதித்திருக்கும் ஜலத்தில் தன்முகத்தின் சாயையைப் பார்க்க முடியாது. கோப மனத்தில் நல்ல ஆனந்தம் அனுபவம் காணமுடியாது.

390. பழக்கத்தால் எதையும் சாதித்துவிடலாம்.

391. பஞ்சின் ஒருமுனையை ஜலத்தில் விட்டால் ஏனைய பாகமும் ஜலமாக நனைந்துவிடும். மனிதன் **சத்தியம், வைராக்கியம், சாந்தி, விவேகம்** இக்குணங்களில் ஏதேனும் ஒன்றை சரிவர அநுஷ்டிக்கின் ஏனைய குணங்கள் யாவும் வந்துசேரும்.

392. தூல உடலின் தூய்மையைப் போன்று சூக்கும உடலின் தூய்மை அதிக அவசியமானதாகும்.

393. வேதாந்தத்தின் உணர்வு சகலருக்கும் அதிக அவசியமானது. ஏனென்றால் அது வாழ்க்கையை சுலபமாகவும் ஆனந்தமாகவும் இருக்கச் செய்கிறது.

394. வேதாந்தத்தில் ஒருவனுக்கு நல்ல ஞானம் இருக்குமாயின், மரணத்தில் நித்யத்தையும் தரித்திரத்தில் ஐஸ்வரியத்தையும் அதுதந்து உதவுகிறது.

395. பலவருணங்களோடு கூடிய மரத்தின் இலைகளையே விசேஷ ரசமுடைய பதார்த்தமென்றொருவன் காத்துக் கொண்டிருந்தால், கடைசியாக அது கீழே விழும்போது கிஞ்சிற்றும் பயனற்ற அவைகளை மென்றுதின்ன தகுதியற்றதாதல்போல, வீடு, மனைவி, மகன், சம்பத்துக்களையே, சுகமெனக் காத்துக்கொண்டிருந்த அவிவேகிக்கு மரண காலத்தில் சிறிதும் பயன்படுவதில்லை. மாறாகப் பெரும் துக்கமே விளைகின்றது.

396. ஒருவனுக்கு சுகதுக்கம் கருமாதீனமாக வரும்போது அவைகளைப் பொறுத்துக்கொண்டு நிச்சிலமாக இருக்கப் பழகவேண்டும். அதனால் வெகு நன்மையுண்டாகும். சீவனுக்கிது சுதந்திரமான காரியம்.

397. காசி க்ஷேத்திரத்தை இருவர் கண்டனுபவித்து வந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவனுக்கு அடுத்த மணியில் போய்ச் சேரத்தக்க ஆகாய விமானம் கையலிருக் கிறது. மற்றையனுக்கு யாதொரு வசதியுமின்றி நடந்தால் தான் போகலாம். இவ்விருவருக்கும் காசியின் அனுபவ

ஸ்மிருதிகள் எப்படியோ அப்படியே இருவருக்கு அகண் டானுபூதி உண்டாகிறது. ஒருவனுக்கு சமதமாதி வைராக் யாதி குணங்கள் நிறைந்திருக்கிறது. இவனனுபவமும் ஸ்மிருதியும் சகஜமாகும். மற்றயனுக்கு சமதமாதி விசேஷ மாக இல்லாமல் அபரோக்ஷத்துக்குரியதுமாத்திரம் இருந்தது. அவன் வருந்தி அப்பியாசித்துத்தான் பரமா னந்த இன்பம் இடையே பெறமுடியும்.

398. ஜெயிக்கப்பட்ட மனம் நல்ல மந்திரியைப் போன்றது.

399. அசுத்த மனம் அவிவேக திசையில் எவ்வளவு காமாதி துர்க்குணங்களால் துன்பந்தந்ததோ, அம்மனமே ஞானதிசையில் ஜெயிக்கப்பட்டபிறகு, மிக்க ஆனந்த வாழ்க்கைக்கு மேலான சாதகமாக இருக்கிறது.

400. சகல விஷயங்களிலும் பெண், பொன் இவ்விரண்டே ஜீவர்களைத் தீமையில் தள்ளும் சத்துரு. இவைகளின் இச்சையை ஜெயித்தவன் பிரஹ்ம வித்தையின் உன்னத ஸ்தானத்தை எய்துகிறான்.

401. வனத்திலுள்ள மரங்களெல்லாம் எரிந்தபோது உடையாத கல், புல்லெரியும்போது உடையாதல்லவா? வாசனையோடு அஞ்ஞானமும் அதன் காரியமும் மித்தை யாய்ப் போகும்போது, அவைகளின் சலன நடைகளைக் கண்டு மயங்காத ஞானி அவைகளில் ஒருவரான மனித னொருவன் வையும்போது அதைக் கேட்டு ஞானி எப்படி மயங்குவன்? எல்லாம் சரீரத்திற்கே என்று சாந்தியா யிருப்பன்.

402. மனம் நின்றால் ஆனந்தம். சலித்தால் துக்கம்.

403. மனிதரது ஜீவியத்தில் மனோ சாந்தியைத் தவிர வேறு நற்பயனில்லை.

404. பொருளை ஆசையோடு சேகரிப்பவர் பின்னால் அதிக துன்பமடைவர்.

405 நிராசையுள்ளவர் பொருள் சேர்ந்தாலும், பொருள் நீங்கினாலும், ஆனந்தமாக வாழ்வர்.

406. சன்னியாசி பொருளுடையவனாயின், அதுவே அவனது நரக வாழ்க்கையாகும் 'பிரத்யக்ஷ நரகமாம்'.

407. கிரகஸ்தன், தன் மனைவி, தன் புத்திரன், பொருள், யாவற்றையும் பரமான்மாவெனும் புத்தியோடு நிச்சயம் செய்து வாழ்ந்தால் வெகு சீக்கிரமாக நன்மையடைவன்.

408. சர்வமும் பூதமயம். சர்வமும் கல்பிதம். சர்வமும் சின்மயம்.

409. அதிகாரி மோக்ஷமார்க்கத்தில் ஏறிச்செல்லும்போது, அவனுக்கு வேண்டிய உயரிய அம்மார்க்கத்தில் தடையின்றி செல்ல, கடவுள் அனேக சகாயங்களைச் செய்கின்றார். இதனை நல்ல அதிகாரிகள் அறிவார்கள். இதனால்தான், இறைவனுக்கு மார்க்க சகாயன் என்று பெரியோர்கள் நாமம் வைத்தனர்.

410. நாக்கிற்குக் கசப்பையுண்டாக்கும் வியாதியுடையவனுக்கு உணவு ருசியாயிராது. பல லோகங்களில் பிறந்து சுகதுக்கங்களையடையத்தக்க சகாமனுக்கு, மோக்ஷத்தில் இச்சையுண்டாகாது.

411. சுபாவமாகவே, ஆற்றில் போகும் தண்ணீர் ஒரு காசும் சிலவில்லாமல் அனேகருக்கு உபகாரம் செய்துக் கொண்டு செல்லுகின்றது. அதை வேறு வழியாகச் செலுத்தி உபயோகிக்க வேண்டின், அனேக லக்ஷம் ரூபாய் செலவும் உபத்திரவமும் உண்டாகின்றன. மனிதன் இயற்கையாகவே தன் சொரூபநிலை விளங்கவேண்டிய அளவு சுத்த ஆசாரபரனுக வாழ்ந்து வந்தால், அவனுக்கு மனோநாசனுக்ஷயப்பொருட்டு அதிக சிரமம் தேவையில்லை. மாறுபட்ட துராசாரமாக ஒழுகிவந்தால், அவனுக்கு ஞான வழியில் செல்லும்போது அனேக தடைகளும் சிரமங் களும் உண்டாகின்றன. ஆனல் முயன்ருல், இவ்வாச ஈனனும் அவசியம் மோக்ஷம் அடைய முடியும்.

412. கடினமும் கூர்மையுமுடைய பல பல்களோடு சேர்ந்து, மிருதுவான நாக்கு வாழ்ந்து வருகிறது. ஆனல் ஒருநாளும், தான் பற்களில் அகப்பட்டுக் கெட்டுப் போவதில்லை. ஞானி அநித்ய துக்க வடிவ நானு வகை யாய பிரபஞ்சங்களோடு வாழ்ந்தாலும், தான், அசங்கனுக இருக்கின்ற அநுபவானந்தமுண்மையின், ஒரு போதும் அவைகளில் சேர்ந்து துன்புறுவதில்லை.

413. பழங்களுக்கு, ஆரஞ்சி, மா, முதலிய பெயரை வைத்திருக்கிரேம். அவைகளின் ரசத்தின் இனிமைக்கு என்ன பெயர் வைப்பது 'இன்சுவை' என்று ஒரே பெயர் தான் வைக்கமுடியும். ஆன்மாவிற்குப் பல தேசங்களில் பல பெயர் வைத்திருக்கின்றனர். ஆனல், மனம் நின்ற உயரிய சமாதி நிலையில், என்ன பெயரிடுவது? **ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தம்!!!**

414. செய்கை யாவற்றிலும் சிறந்தது சும்மாவிருப்பது. அதாவது வாசனையற்று சும்மாவிருப்பதென்பது பொருள். பதார்த்தங்களில் ஆசைவிடத் தெரிந்தவனுக்குத்தான் ஆனந்தம் ஆன்மாவென்பது விளங்கும்.

415 சுக்கிரீவன், அநுமான் போன்ற நண்பரைக் காணும்போது, அவர்களால் கொடுக்கப்பட்ட நகையைக்கண்ட இராமன், சீதையினது என்றெண்ணி அவைகளை இலக்ஷ்மணனுக்குக் காட்டினர். அப்போது இலக்ஷ்மணன் சில கழுத்தில் அணிந்த ஆபரணங்களைக் கண்டு, இவை யாருடையதென்பது நிச்சயமாக என்னல் கூறமுடியாது என்றுன். காரணம் என்னே? இலக்ஷ்மணன் ஒரு நாளும் சீதையின் முகத்தைப் பார்த்ததில்லையாம். இலக்ஷ்மணனது அகத்துறவு எவ்வளவு உயர்ந்தது! அஃதல்லவா ஒழுக்கமும் துறவுமாகும்.

416. யாவருடைய கூட்டுறவால் மனச்சாந்தியும் நிர்மலமும் உண்டாகின்றனவோ, அவர்கள் தான் காஷாயம் தரித்திருந்தாலும், அஃதல்லாதவராளுலும் சாதுக்கள்.

417. வானில் அனேக நக்ஷத்திரங்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனல் இல்லையென்று கூறுவது சரியாகுமா? ஒருவன் அகண்ட நிர்மல ஆனந்த நிர்க்குண சைதன்யத்தை அனுபவிக்கவில்லையானல் அதனுல் அவ்வகண்டபரம்பொருள் இல்லையென்று கூறுவது சரியாகுமா?

418. பொன்னைக் கண்டு துக்க சொரூபமெனப் பயப்படுவதைவிட பொன்னை, மண்ணென்று கண்டு உபேக்ஷிப்பது சாந்தியைத் தரும்.

419. பெண்களை அனர்த்த ஏதுவென, அவர்களின் ஆசையோடு கூட்டுறவையும் விடுவது மிக்க சிரேஷ்டமாகும். பாதித்து அதாவது பொன், மண், பெண் இவர்களின் சொரூபங்களை பஞ்சபூதமயமென்றும் அவைகளை மாயா வடிவமென்றும் அம்மாயையும் ரச்சுவில் சர்ப்பம்போல, என்னிடம் கற்பிதம் ஆனதால் அதிஷ்டான சத்தியஞான ஆனந்தனை என்னைத்தவிர வேறொன்றுமில்லை எனக் காண்டல், கிரமமான விசார திருஷ்டியாகும். இதுவே பந்த நிவிருத்தி வடிவமுமாம்.

420. ஒருவன்தான் குறிப்பிட்ட இடத்திற்குப் போகும் போது இடையே இரவில் தங்கித் தங்கிச் செல்கின்றான். இரவு வரும்போது வழிநடைக்குத் தடையாயிற்றே என்று அவன் பயந்து அதோடு நின்று விடுவதில்லை. சாதகன் அகண்டானந்த மோக்ஷ வீட்டை நாடி அப்பியாசம் செய்யும் போது, அனேக இடையூறுகள் நேரிட்ட காலத்தும் இவன் அவைகளை பொருள்படுத்தாமலும், நின்றுவிடாமலும், தனது நன்மார்க்க சாதனத்தில் முன்னேறிக் கொண்டே போக வேண்டும். அவசியம் தனது லக்ஷ்ய வடிவ பரமானந்தசொரூபமோக்ஷத்தை அடைவான்.

421. பற்றி எரியும் தீ எந்த மரமானாலும் தகிக்கும். ஞானாக்கினி எந்த கருமமானாலும் வெந்துபோம். இதனை ஞானி உள்ளவாறு உணறுகின்றான்.

422. கடவுள்கருணை ஆற்றுவெள்ளம் போன்றது. அதை நெருங்கி ஏற்கும் தகுதிக்குத் தக்கவாறு பலன் தரும்.

423. அனேக வருஷம் உலகமனைத்தும் அரசாண்ட சூரபன்மன், அவனது சகாக்களான அசுர சிம்ஹங்களெல்லாம் ஒரு நாள் இறந்துவிட்டார்கள் என்பதை நன்கு தெரிந்தவர்கள், எப்படி மோகத்தால் பொருளையும் ஆயுளையும் விருத்திசெய்யக் கருதுவார்கள்.

424. நாக்கின் ருசிக்காக உண்பவன் நல்ல சீவனமுடையவனும் அத்வைதியுமாகான்.

425. உணவைப் பசி வியாதிக்கொரு மருந்தென அளவறிந்து உண்பவன், நல்ல வாழ்க்கையையுடையவனும் ஞான வாழ்க்கையில் முன்னேற்றமடைய யோக்கியனுமாவான்.

426. கருத்தூன்றி விவேகிப்பவர்கள் இவ்வுடலோடு இவ்வுலகில் வாழ இச்சியார்கள். நித்திய சாம்ராஜ்யமான பரம சுகத்தையே நாடுவார்கள்.

427. சரீரம். மலமென்பது உண்மையானல் எவன் இதனை போஷிப்பதே காரியமாயிருப்பன்? இதினின்றும் விலகி வாழவே நினைப்பன். அவ்வாறு உறுதி செய்யின், அப்படியே கூடிய சீக்கிரத்தில் கைகூடி விடுகின்றது.

428. மழைக் காலங்களில் செடிகளின் செழுமையைப் போன்று ஞானியின் மனம் எப்போதும் செழுமையும் கெம்பீரமுமாயிருக்கிறது.

429. பெரியோர்களின் **குருபூஜையை** கொண்டாடுவது மனத்தூய்மைக்கும் அவர்கள் நடையைப் பின்பற்றுதற்குமாகும்.

430. அதிகமாகப் பொருளும் அதிக ஏவலாட்களேயும் சேகரிப்பது துன்பமென்பதை நல்ல சன்னியாசி உணருகின்ருன்.

431. சிறுவர்கள் கத்தி முனேயிலுள்ள தீஞ்சுவையை நாவினுல் சுவைப்பது போன்று விஷய சுகங்களும் வெகு ஆபத்தானது.

432. மனேசாந்திக்குத் தனித்த இடமும், வேதாந்த விசாரமும் அதிக அநுகூலமானது.

433. அகங்காரத்தை **நான்** என்பதைவிட மித்தையா சாரம் வேறெதுவுமில்லே.

434. சகல கற்பனேக்கும் தானே ஆதாரமென்பதை யுணர்ந்தவன் இச்சிக்கும் பொருள் ஒன்றுமில்லே.

435. கசடறப்பேசக் கற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது மனமும் **மாசற** நிற்கும்படி நன்ருகப் பழக வேண்டும்.

436. அதீத நிலேயில் பேச்சொன்றுமில்லே.

437. **அபிமானம்** அதாவது சர்வப்பற்றுக்களும் நீங்கின வன் எங்கு சென்ருலும் ஆனந்தந்தான்.

438. பருவகாலத்தில் பூவும் மணமும் தாமே உண்டாவது போல, இடைவிடாது ஞானப்பியாசத்தில் முயன்றுவரும் சாதகனுக்குப் பருவத்தில் அவசியம் **ஞானமும்** அதனுல் **பேரின்பமோக்ஷமும்** உண்டாகும்.

439. ஸ்ரீபௌத்தரைப் போன்று ஜீவகாருண்யமுடையவனுக்குத்தான் மனவழுக்கு விலகும்.

440. ஸ்ரீராமகிருஷ்ணரைப் போன்று ஞானத்திற்காகத் துடிதுடித்து முயன்று அப்பியாசிப்பவனுக்குக்குத்தான் அபரோக்ஷஞானம் யதார்த்தமாக விளங்கும்.

441. மனதைப் பார்க்கினும் கடினமான பொருள் ஈஸ்வர சிருஷ்டியில் யாதுமில்லை.

442. மனதைப் பார்க்கினும் நெகிழ்ச்சியான வஸ்து ஈஸ்வர சிருஷ்டியில் யாதுமில்லை.

443. நல்லவரென்பவர், அகங்கார மமகாரமற்றவர்.

444. அறுசுவையோடு கூடிய அன்னத்தையுண்பதால் உண்டாகும் சுகத்தைவிட, மனம் ஒரே விஷயத்தில் நின்றபோது அனேக மடங்கு சுகம் உண்டாகின்றது.

445. மனமே! எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டுமானல், அசஞ்சல அதிசூக்குமமான என்னையே பற்றிநில்.

446. கர்வமுள்ளவனை லௌகீக வைதீகமாகிய எல்லா சம்பத்துகளும் விட்டு நீங்கிவிடும்.

447. மிளகாயை எவ்வளவு அணுவாகும்படி பொடித்தாலும் காரம் போகாது. துஷ்டர்கள் எவ்வளவு நுண்மையான கல்வி கற்றாலும் துஷ்ட குணம் போகாது.

448. மிளகாய்த்தூள் தின்பண்டங்களில் அளவாகக் கலந்துபோது ருசியாக மாறிவிடுகிறது. துஷ்டர்களும், சாதுக்களோடு பலகால் பழகிவர நல்லவர்களாவார்கள்.

449. முட்கொடி சூழ்ந்தவிடத்தில் வாழை பலன்தராது. துஷ்டர்கள் கூடியவிடத்தில் சாதுக்கள் வசித்தால், சாதுக்களுக்கு நல்ல பலன் கிடையாது.

450. சக்ரவர்த்தி இராஜாவிற்குப் பிருதிவியும் அதன் காரியங்களும் உரியன. பரமேஸ்வரனுக்குத்தான் சகல புவனபோக்கியங்களும் யதார்த்தமாக உரியன.

451. ஜோதிக்கெல்லாம் ஜோதியாயிருப்பது **ஆத்மா**.

452. அனன்மாவான போக்கியங்களில் தோன்றும் ஆனந்தம் அனைத்தும் தன் சொரூபமேயாம்.

453. நான் எனதென்னும் அபிமானமுடையவன், பிறருக்குள் அடைக்கலமாகின்றான். நான் எனதென்னும் அபிமானமற்றவன் ஒருவருக்கும் அடைக்கலமாவதில்லை.

454. பிறரது தீமையைக் காணும் மனம், தன் தீமையைப் பார்ப்பதில்லை. ஆனால், எந்த மனம் தன் தீமையையும் பிறர் நன்மையையும் கூர்ந்தறிகிறதோ, அந்த மனம் நல்ல மனமாகும்.

455. கருமங்களில் உயர்ந்தது **மானஸஜபம்**.

456. பத்தியில் உயர்ந்தது எங்கும் நிறைந்த இறைவனிடத்து வைக்கும் **அனன்யபக்தி**.

457. ஞானத்தில் உயர்ந்தது **அகண்டான்ம அபரோக்ஷ ஞானம்**.

458. பெரியோர்களை அல்லது கடவுளை அடிக்கடி பணிவதால் அகங்காரம் குறைகிறது.

459. பக்ஷிகள் தின்று கொஞ்சம் சதைமாத்திரம் இருந்த மாங்கனியை எடுத்து, ஒருவன் அதை உண்ணும் பொருட்டு, அதிலுள்ள எறும்பு, மண் இவைகளைத் துடைத்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்குள் தெய்வகதியால் முழுக்கனி ஒன்று கிடைத்தது. உடனே பக்ஷி தின்ற கனியை எறிந்து விட்டான். அதுபோல அல்ப சுகமுடைய விஷயங்களான செல்வங்களை சேகரித்த ஒருவன், தெய்வ கதியாகத் தியானத்தால் பேரின்ப சுவை சிறிது கிடைத்து விட்டால், அவ்வெல்லா விஷய சுகங்களையும் நாடாது விட்டு விடுவான்.

460. சங்கல்பமும் அகங்காரமும் அப்பியாசத்தால் எவனுக்குக் குறைகிறதோ, அவனுக்கு ஆனந்தம் உதயமாம்.

461. தார் எண்ணை போன்ற சில எண்ணைகளைக் கழுவ வேண்டின், கிரோசினயில் கொண்டு கழுவவேண்டும். ஜலம் கொண்டு கழுவினல் படாத இடமும் படும். ஆசையை ஒழிக்க வேண்டின் நல்ல, சாதுசங்கமும் விஷயங்களின் தோஷ திருஷ்டியும் அடிக்கடி பழகவேண்டும். விஷய ஆசையுடையவரின் கூட்டுறவால் ஆசை போகாது.

462. மனத்தெளிவிற்குச் சாந்த விவேகம் வேண்டும்.

463. பேரின்பத்திற்கு மனத்தின் தூலம் போகவேண்டும்.

464. அறிவுள்ளவற்கு ஒழுக்கம் அழகு.

465. சந்நியாசிகளுக்குத் தனியிடம், நிரந்தரத்தியானம், நிராசை, இவைகள் அழகு.

466. பிரமச்சாரிக்குக் கல்வியும் குருசேவையும் அழகு.

467. கிரகஸ்தனுக்கு அன்னியரையும் தன்னையும் விசுவாசத்தோடு தாங்குதல் அழகு.

468. வானப்பிரஸ்தனுக்கு உண்டியைக் குறைத்துத் தவங்கிடத்தல் அழகு.

469. சந்நியாசிக்கு வைராக்யம் அழகு.

470. துக்ககாரணம் மனந்தான் என்று தெரிந்தவன், மனத்தைத் திருத்தி அமைக்கவேண்டுமல்லவா?

471. தளர்ந்த வயதில் தியானம் செய்யமுடியாது. மனமும் உடலும் தளர்ந்து விடுகின்றமையின் ஓர்நிலையில் நில்லாது.

472. பூதாக்கினியை விட தபோ அக்கினி சிறந்தது. தபோ அக்கினியைவிட ஞானக்கினி சிறந்தது.

473. ஜலத்தைவிட சீதளமானது சத்துவமனம். சத்துவ மனத்தைவிட சீதளமானது ஆன்மா.

474. ஆகாயத்தைவிடப் பெரியது மனம். மனத்தைவிடப் பெரியது ஆன்மா.

475. அணுவைவிட நுண்மையானது விவேகம். விவேகத்தைவிட நுண்மையானது ஆன்மா.

476. விஷயசுகத்தைவிட சிறந்தது நிராசைசுகம். நிராசை சுகத்தைவிட மனோநிரோதசுகம் சிறந்தது. மனோநிரோத சுகத்தைவிட ஆன்மானுபவசுகம் சிறந்தது

477. பாகிய விஷயங்களினும் உடல் சிறந்தது. உடலினும், பிராணனும், இந்திரியங்களும் சிறந்தன. பிராண இந்திரி

யங்களினும் மனம் சிறந்தது. மனத்தினும் விவேகம் சிறந்தது. விவேகத்தினும் ஆன்மா சிறந்தது. ஆன்மா வினும் சிறந்த பொருள் வேறென்றில்லை.

478. பல வியாபாரத்தால் ஊதியம் அடையக்கருதுவதை விடத் திருத்தமான ஓர் வியாபார ஊதியமே சிறந்தது. பல சாதனங்களை மோஷசாதனமெனக்கருதி அனுஷ்டிப் பதைவிட உண்மையுள்ள யாதேனுமொன்றை இதுவே மோக்ஷசாதனமெனக் குரு முகமாக நிச்சயஞ்செய்து, அதையே நன்ருக அனுஷ்டிப்பது நலந்தரும்.

479. சத்துருக்களால் சூழப்பெற்ற அரசனும், விஷய ஆசை யால் சூழப்பெற்ற சாதகனும் துக்கிகளாவார்கள்.

480. எல்லா ஆசையினும் பெண்ணுசை, பொன்னுசை மிக்க கொடியது.

481. நிராசையுள்ளவன் ஓர் புளியமரத்தடியில் இருந்தா லும் பரமசுகியாக இருப்பன்; ஆசையுள்ளவன் சுவர்க்கத்தி லுள்ள கற்பக விருக்ஷத்தின்கீழ் இருந்தாலும் சுகமடையான்.

482. வேப்பங்காய் தின்றவன் கரும்பு தின்னமுடியாது. கரும்பு தின்றவன் வேப்பங்காய் தின்னமாட்டான். விஷய போகத்தில் அழுந்தினவன் வேதாந்தத்தில் பிரியமுள்ள வன் ஆகான். வேதாந்த ஞானமுள்ளவன் விஷய போகங் களில் செல்லான்.

483 எறும்பிற்கும், யானைக்கும், மனிதனுக்கும் உள்ளிருக் கும் அந்தர்ஜோதிவடிவ ஆத்மா, ஒரே சச்சிதானந்த வடிவ மாகவே உள்ளது.

484. **வைராக்கியம்** வேண்டியவர்கள் பெண்ணையும், பொன்னையும் பற்றி நன்ருக விவேகம் செய்துவரவேண்டும்.

485. மலையின் உச்சியில் மேகம் தங்கி விலகுவது போன்று, **சம்பத்து** ஒருவனிடம் தங்கி விலகிவிடும்.

486. சம்பத்தும், மனைவியும், பந்துவர்க்கங்களும் கர்மத்தால் அடைந்துள்ளன. அவைகள் மீண்டும் வியோக கருமத்தால் விலகிவிடுகின்றன; என்பதை அறிந்தவன் யாது விலகினுலும் கிலேசியான்.

487. சத்தியமென்னும் மார்க்கம் அதிசூர்மையானது.

488. அசுத்தசித்தத்தினருக்கு கடலைக் குடிப்பதைவிட, மனத்தை அடக்குவது கடினந்தான். நின்மலமனமுடையாருக்கு, அலர் (புஷ்பம்) கசக்குவதுபோல மனமடங்குவது அதிசுலபம்.

489. எத்தனை வித்தையாடிப் பிறரைச் சந்தோஷிக்கச் செய்தாலும், பசிப்பிணி நீங்காது. அன்னமுண்டால்தான். நீங்கும். எத்தனை சித்திகள் கைவந்துவிளையாடினுலும், பரமானந்தமும், துக்கமற்றதுமான **மோக்ஷம்** கிட்டாது. ஆத்ம ஞானம் ஒன்ருலேதான் சர்வதுக்கமும் போம்.

490 அகந்தையைவிட சத்துருவும், பாபஹேதும் வேருென்றும் இவ்வுலகத்தும் வேறுலகத்தும் இல்லை.

491. மனத்தை யடக்குவது கடினமென்பவன், மனத்திற்கு தீமையை இவனே விளைவிக்கிருன்.

492. மனம் நின்மலத்தால் ஆன்மாவில் சாந்திபெற்றிருப் பதைவிட சம்பத்து எவ்வுலகத்துமில்லை.

493. மனத்தையடக்குவது சுலபம் என்ருல், அவசியம் முடியுமென்று துணிந்தவன், அவசியம் அடக்கிவிடுகின்ருன்.

494. தியானம் செய்யும் போது மனம் அடங்கவில்லை யாஞல், மிக்க தூய்மையான மகான்களது சரித்திரத்தை நன்ருக ஞாபகத்திற்குக்கொண்டுவருதல், நல்ல ஜெபம் செய்தல், பரமார்த்தப்பிரார்த்தனை, இவைகளைச் செய்வ தால் மனமடங்கும்.

495. அனர்த்தமான செல்வமே பொருள் என்று பிரமை யுள்ள அவிவேகிக்குத் தியானம் செய்வது முடியாதகாரியம். அப்படி அவன் தியானஞ்செய்வது பிணத்தின் அலங்காரம் போன்றதாகும்.

496. தியானம் செய்பவனுக்கு, செல்வமும் பழுத்த இலைத் துண்டுகளும் ஒன்றென்று விளங்கவேண்டும். அப்போது தான் தியானத்தில் மனம் அழுந்தும்.

497. மனவொருமையோடுகூடிய தியானத்தால் சகலமும் பெறலாம்.

498 தியானத்தின் லக்ஷியத்திற்கேற்றவாறு தியானம் பலன்தரும்.

499. விஷய ஆசையுடையவர்கள் தீபத்தில் மடியும் விட்டில் பூச்சி போன்று, விஷயங்களில் வீழ்ந்து மடிகின்றனர்.

500. புல்லின் நுனியில் தங்கிநிற்கும் பனித்துளி போன்றது மனித ஆயுள்.

501. தூல சரீரம் வீண் பொக்கிஷம் ஆனதால் நாம் அதைக்கொண்டு சாந்தியடைய முடியாது.

502. ஆசை, அகங்காரம் இரண்டும் மனிதசத்துரு.

503. ஆசை, அகங்காரமாகிய இரு சத்துருக்களும் ஆன்மாவை மறைத்துவைத்திருக்கும் மலங்கள்.

504. வெகுநாள் தேடாதுவிட்ட ஒரு சுவர்ணபாத்திரத்தை ஒருநாள் எடுத்துப் பார்த்து, முதலில் அதன்மேலிருக்கும் தூசுகளை வஸ்திரம் கொண்டு துடைக்கின்றோம். பிறகு தங்கப்பாத்திரந்தானு என்பதை உறைத்துப்பார்க்கிறோம். பிறகு நன்றாக கழுவிச் சுத்தஞ் செய்து அனுபவிக்கிறோம்.

505. நமது நிஜானந்த வடிவத்தை மறைத்து வைத்திருக்கும், அகங்கார ஆசைகளை அடியோடு துலைக்க வேண்டுமாயின், முதலில் இறைவனது நியதியைக்கண்டு, ராகதுவேஷமற்றிருக்கவேண்டும்.

506. இரண்டாவது, குரு ஈஸ்வரக் கிருபையால், அகங்கார ஆசைகளின் மூலமும் அதன் நிவர்த்தியையும் பரதோஷமாகத் தெரிந்து, ஆன்மா இன்ன சொரூபமெனப் படுவதை குறிப்புணர்ச்சியால் அறியவேண்டும்.

507. மூன்றாவது, வைராக்ய அப்பியாசங்களால் அடியோடு அகங்கார ஆசைகளையும், அவைகளின் மூலமான அஞ்ஞானத்தையும் துலைத்துத், தனது நிஜவடிவ ஆன்மா அபரோக்ஷஞானத்தால் அகண்டானந்த சுகத்தை அனுபவித்தல் வேண்டும்.

508. மார்க்கத்தில் கண்ட திரணத்திற்கும், தன் சரீரத்திற்கும் பேதமில்லாமையைக்கண்டவன் சுகமடைவான்.

509. இடைவிடா ஒரு தேவதையின் மந்திர ஜபத்தால் மனம் அவசியம் ஒழுங்குபடுகின்றது.

510. எத்தனை மழை ஜலங்கள் ஒன்றுகூடி வந்தடைந்தாலும் சமுத்திர ஜலம் குறைவதும் நிறைவதுமில்லை. எத்தனை அனன்ம பதார்த்தங்கள் ஒன்றுகூடி ஆன்ம கோசங்களானலும், ஆன்மானந்த வடிவம் நிறைவதும் குறைவதுமில்லை. உள்ளபடி உள்ளது.

511. உலகத்தின் சர்வ விஷய சுகங்களும் அகண்டான்மாவின், ஒரு அல்ப தொகுதியினின்று விளங்குவனவாம்.

512. விஷயங்களை விட்ட அளவு, அப்பியாசி முன்னேற்றமடையலாம்.

513. விஸ்வம் (அனைத்துலகும்) சரீரம், காசி இருதயம், விஸ்வநாத ஆலயம் அந்தக்கரணம், விஸ்வேஸர் ஆன்மா.

514. மனத்தை ஊன்றிப்பார்த்தால் அதன் வடிவமில்லை. ஆனதால், இல்லாமையே அதன் சொரூபம்.

515. சாது சங்கத்தால்தான் அதிகாரி முன்றேற்றமடைய வேண்டும்.

516. மாயை தன் முக்குண வேறுபட்டால், அனேகமாயிர விசித்திரங்களைத் தோற்றுவிக்கும். அவைகள் அனைத்தும் சொப்பனமென்று திடமாக நிச்சயஞ் செய்தல் வேண்டும். அந்நிச்சயத்தால் மனம் சாந்தியடையும்.

517. மாயையின் பரிச்சின்ன சக்தியே மனம்.

518. சீவர்களின் அதிக நன்முயற்சியே ஈஸ்வரக்கிருபை வடிவம்.

519. அனுமானுக்குத் தெய்வக்கிருபையாகிய முயற்சி உண்மையால், கடல் கடக்கமுடிந்தது.

520. கல்வியிலும் வியாபாரத்திலும் அதிகப்பிரியமுள்ளவனுக்கு, தியானுப்பியாசம் செய்ய முடியாது. தன் கடமையென செய்பவனுக்கு முடியும்.

521. தேகங்களை நானென்று அபிமானிப்பதைவிட அனர்த்தம் யாதுமில்லை.

521. காலஞ்சென்றதற்காகவும், சென்ற கருமங்களையும் நினையாமல், இனி செய் காரியத்தை ஒழுங்காக செய்.

522. தியானிப்பவனுக்குத்தான் நல்ல மனப்பிரசாதமும், குரு ஈஸ்வரக்கிருபையும், நல்ல விவேகமும் உண்டாகும்.

523. நதியின் பிரவாகம் மலினமும் சுத்தமுமாயிருக்கும். சமுத்திரஜலம் என்றும் பரிசுத்தமே. ஜீவதத்துவம், சார்ந்த வஸ்துவுக்கேற்றபடி சுத்தா சுத்தமாகும். ஆன்மதத்துவம் என்றும் சுத்தமே.

524. மலமற்றவருக்கு எப்போதும் நன்மார்க்கம் உரிமையாகும்.

525. தியாகிக்கு யாவுந்திரணமே. ஞானிக்கு யாவும் தன்வடிவமே.

526. சிஷ்யர்களுக்கு சுவானுபூதியில் அழுந்த அழுந்த குருவினிடம் அதிக சிரத்தை உண்டாகும்.

527. பூ உதிர்ந்தால் பிஞ்சு உண்டாம். பிஞ்சு கெட்டு காயுண்டாம், காய் கெட்டுப் பழமுண்டாம். இது இறைவன் நியதி. ஒன்று கெட்டுத்தான் மற்றொன்ருக வேண்டும். உடல் பருவங்களும் செல்வங்களும் இவ்வண்ணமாதலால் மரணத்திற்கு ஏன் பயப்படவேண்டும்?

528. பருவத்தில் விதையிடாது, அறுக்கும் காலத்தில் அறிவாள் கொண்டு சென்ருல் தானியம் எங்குகிடைக்கும்? பருவத்தில் தியானுதி அப்பியாசம் செய்யாமல், மரணம் அல்லது நோயுண்டான காலத்தில் எப்படி மனம் ஆன்ம நிலையில் அழுந்தி ஆனந்தமாயிருக்கும்.

529 பயிற்சி முயற்சியாலாம். முயற்சி பயிற்சியாலாம். ஆதலால் முயற்சியையுடைய நல்ல பயிற்சி அவசியம் பேரின்ப வழியாம்.

530. பரமாணுவினும் நுண்மையது காலம். காலத்தினும் நுண்மையது மனம். மனத்தின் நுண்மையது அகங்காரம். அகங்காரத்தின் நுண்மையது ஆத்மா. ஆதலால், ஆன்மா வியாபகமும் ஆனந்தமுமாம்.

531. மனத்தை அடக்கவல்லவன் யாவையும் தன்மயமாகக் காண்பன். அவன்தான் தீரன்.

532. கலியுகத்தில் மோக்ஷமடைய முதல்வழி கடவுளின் இடைவிடா ஜபமாகும். அதனல் சர்வ கிலேசமும் நீங்கி, பிறகு குருப்பிரசாதமும் விவேகமும் சமாதியும் உண்டாகும்.

533. இச்சையைத் தாங்கி வாழ்வதைப் பார்க்கினும் துன்பம்யாதுமில்லை. நிராசையோடு வாழ்வதைப் பார்க்கினும் சுகம் யாதுமில்லை.

534. சரீர அபிமானம் கவலைக்கிடம். சரீர அபிமானமின்மை ஆனந்தத்திற்கிடம்.

535. மோக்ஷமடைவதைவிட சுலபமான காரியம் வேறு ஒன்றுமில்லை.

536. ஆசையைவிடு என்பது, உலகவிஷயங்களிலுள்ள ஆசையைவிட்டு, இறைவனிடம் ஆசையை செலுத்து என்பது பொருள்.

537. புஷ்பங்களின் மணத்தைப் பார்க்கினும் நுண்மையானது ஞான திருஷ்டி.

538. மனத்தை அடக்கின அளவிற்கு, மனத்தில் ஆற்றல் மிகுகின்றது.

539. ஞானி, ஒருவரிடமும் ஒரு பொருளும் யாசிக்கா திருத்தல் வேண்டும். அதனால் அவன் மனம் பன்மடங்கு தூய்மையும் சுகமுமடைகின்றது.

540. பதார்த்தங்களில் உள்ள துர்நாற்றம் சரீரத்தைக் கெடுக்கின்றது. ஆசை முதலிய துர்வாசனை சூக்கும தேகத்தை அல்லது பிரதானமாக மனத்தைக் கெடுக்கின்றது.

541. நிராசை முதிர முதிர ஞானம் வளர்ச்சியடைந்து பிரதிபந்தமனைத்தும் நீங்குகின்றன.

542. தூல உடலுக்கும் இந்திரியங்களுக்கும் மற்றும் தன்னைச்சார்ந்த மற்றையருக்கும், ஞானியின் மனம் சுகமான சீதளத்தை உதவுகின்றது.

543. சகல கற்பனைக்கும் தான் அதிஷ்டானமென நன் குணர்ந்தால், பின் எதன்சார்பாக மனம் செல்லும்? க்ஷணத் திற்குச் க்ஷணம் சாந்தியடையும்.

544. குளிருள்ளவன் போர்வையணிகிருன். பயமுள்ளவன் நிராசையைப் பெறவேண்டும்.

545. அப்பியாசிகள், ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ ஔவை போன்ற பெரியோர்களது திவ்விய சரித்திரத்தையும், அவர்களது உபதேசமொழிகளையும், அடிக்கடி சிந்திக்க வேண்டும்.

546. மரணமென்பது மனித ஜென்மஸ்னனமாகிய தூய அவஸ்தை. அதைக் கண்டு சந்தோஷிக்க வேண்டும்.

547. முன்னொருகால் இந்தியாவின் தென்கிழக்குக் கோடி யில் ஒரு இராவணன் இருந்தான். அவனது தொந்தரவை சகிக்கமுடியாது, சாதுக்கள் பரமனை வணங்கி, இராமா வதாரத்தால் அவ்வின்னல் நீங்கி, சுகமடைந்தனர். இப் போது நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு இராவணன் வாழ்வதாலும், அவனது சைன்யங்கள் படக்காக்ஷி வடிவமாக வந்திருப்பதாலும், இக் காலத்திய ஜிஞ்ஞாசுக்கள் என்ன செய்வார்கள்! பாபம்! திரும்பின பக்கமெல்லாம் காக்ஷியாலும், ஓசையாலும் இவ்விராவண சைன்யங்கள், உடலைவிட்டு உயிரையும், மனத்தையும், சதா துன்புறுத்துகின்றன. இவ்வரக்கர்

நாசம் இனி எந்த இராம கிருஷ்ணர்களால் மடியுமோ தெரியாது! இவைமடிந்தால், ஏதோ ஒருவாறு பிரமசரிய முதலிய தருமமும், நல்லொழுக்கமும் தலையெடுக்கும்.

548. ஒருவன் ஞானமடையாதது மிக்க பாதகமென்பதை, பக்குவமான முமுக்ஷுவாகும்போதுதான் தெரியும்.

549. பிராஹ்மணனுனாலும் அகமுகமில்லையானல் சுக மில்லை. நீசனுனாலும் அகமுகமுடையவன் பெரியோனும், பேரின்பமுடையனுமாவன்.

550. தூலஉடல் அபிமானம் நீங்கினல், அகங்காரம் பெரும் பாலும் கழியும்.

551. முறட்டு ஜெந்துக்களான குதிரை, பசு, எருமை, முதலியவைகள், சிறு குழந்தைகளைக்கண்டால் உபத்திரவம் செய்வதில்லை. தவறியும் மிதிப்பதில்லை. இது என்ன தெய்வீகம்! குழந்தைகளுக்கு அபிமானமில்லை தெய்வங் களாகின்றன. தெய்வமானவரைப் பார்த்து மிருகமும் தெய்வமாகின்றன. ஞானி விஷயத்திலும் அவ்வாறேயாகும்.

552. சுத்தமான இடம் சுத்தமான காற்றுள்ள இடத்தில் வாசஞ் செய்தலாலும், சுத்தஆகாரம் உட்கொள்வதாலும் தூல சரீர சுத்தியுண்டாகிறது. சப்தாதி விஷயங்களை சித்தையென்றுவது, இறைவன் வடிவமென்றுவது நிச்சயத் தோடு நின்றுல், இந்திரிய சுத்தி உண்டாகின்றது. என் னேரமும் ஆன்மாவான தன்னையே நாடச் செய்வதால் மனம் சுத்தமாகின்றது.

553. ஒரு மனிதன் நிறைந்த தனம், அனேக பந்துக்கள், சில குழந்தைகள், மனைவியின் செம்மை, தேகசௌக்கியம் இவைபோன்ற சில விஷயங்கள், தம்மிடம் கூடியிருப்பதைக்கண்டு தான் மிகுந்த புண்ணிய புருஷனென்றும், சுகியென்றும் நினைத்துவிடுகின்றான். இவ்வெண்ணம் எவ்வளவு அறியாமையையுடையது! ஜனன ஏதுவும், வண்ணான் வாகனம்போன்று சுமையையல்லவா சுகமாகக் கருதுகின்றான்?

554. (1) ஆத்மா சுகபுருஷன், (2) ஆத்மஞானம் அடைந்த ஞானி சுகபுருஷன், (3) ஆத்மனையடையவேண்டுமென்னும் இச்சையால், நல்ல அப்பியாசமுடையவனாய், சகல லோகங்களிலும், சகல பதார்த்தங்களிலும், பிறவிகளிலும் நிராசையடைந்தவன் சுகபுருஷன். (1) சுகதமம். (2) சுகதரம் (3) சுகம்.

555. செல்வங்களையும், மனைவி மக்களையும், விட்டுவிட்டுக் கானகத்திற்கு ஓடிவிடுவது துறவல்ல. மனத்தில் நிராசையோடு இருப்பதுதான் துறவு. அப்படி மனத்தில் நிராசையுடையவன் அவசியம் ஞானியாவான்.

556. சுகத்திற்குவழி:— (1) சத்குணங்கள் (2) நிராசை (3) சாதுசங்கம் (4) அப்பியாசம்.

557. மனமே! நீ என்ன நினைக்கின்றாய்; நீ நினைப்பதெல்லாம் பஞ்சபூதந்தான்; அநித்தியந்தான்; அவைகளால் நீ ஒருபோதும் சுகமடையாய். நில், என்னை உள்ளபடி தியானஞ்செய். என்னிடத்தில் அபேத ஆனந்தம் பெறுவாய்.

558. அனேகர்கள் மனத்தை அடக்குவது மிகக்கடின மென்கிறார்கள்; அது உண்மைதான். ஆனால், எப்போதும் அவ்வார்த்தை பொருந்தாதிருக்கும். ஒருபோதாவது அடங்கிவிடுகிறது. அதிகப் பிரயத்தனமுள்ளவனுக்கு ஜலத்திலிட்ட லவணம்போல எளிதாகின்றது.

559. தியானத்தில் மனம் ஓடும்போது அதன்வழி போகாமல், மனத்தை என்ன பொருளென்று ஊன்றி விசாரித்தால், அடியோடு நாசமாகிவிடும். இது சுலபமான வழி.

560. மனமடங்கவில்லை யென்று குறை கூறுகின்றவர்கள், நன்றாகக் குரு கூறியபடி அப்பியாசஞ் செய்யாதவர்கள்.

561. மோக்ஷமென்பது புதிதாக அடையப்படுவதொன்றல்ல. அனர்த்தங்களை விலக்கினால் தானாக மிஞ்சுவதுதான் மோக்ஷம்.

562. ஞானவாழ்க்கையொன்றே தூயமார்க்கம்.

563. சாதகனுக்குத் தியானம், விவேகம்போல, தத்துவ நூல் ஓதல், சாது சங்கப்பழக்கம் இவைகளுந் தொடர்ந்திருத்தல்வேண்டும்.

564. தியானத்தையும், விசாரத்தையும் விடாது செய்து வருபவர்தான் பலனடையமுடியும். ஒரு, கடனாக சிறிது சிறிது செய்து வருபவர் எவ்வளவு காலமானாலும் ஒரு பலனையுங் காணமுடியாது.

565. சிறுவர்கள், உலக வியவகாரத்தில் பரமாகவிருப்பது போல், ஞானிகளின் வியவகாரம்.

566. தாமரை மலர் வடிவில் சிறந்தது. பாதிரி மலர் மணத்திலும், வடிவிலும் சிறந்தது. ரோஜா மலர் மணத்திலும், வடிவிலும், ருசியிலும் சிறந்தது. பிரமசாரிக்குக் கல்வி சிறந்தது. கிரஹஸ்தனுக்குக் கல்வி, விரதம் சிறந்தது. சன்னியாசிக்குச் கல்வி, விரதம், ஞானம் சிறந்தது. இம்மூன்றும் தியாக மாளிகையிலுள்ளது.

567. இறந்தும் இறவாதவன் ஞானி. இருந்தும் இறந்தவன் அஞ்ஞானி.

568 நீர்மேலெழுத்துப்போன்றது, உலக வியவகாரமும் உலக சுகமும்.

569. கிளாசின் (கண்ணுடியின்) சுத்தத்திற் கேற்றபடியே பிரகாசம் மிகுந்திருக்கும்! மனத்தின் சுத்தம் எவ்வளவு அதிகமுண்டோ, அவ்வளவு பேரின்பம் வெளிப்படும்.

570. தான் ஆனந்தன் என்பது மனம் அடங்கினஅளவில் விளங்குகின்றது.

571. மனக்கிலேசத்தைப்போல சரீரதாபம் அவ்வளவு துன்பம் தருவதில்லை.

572 ஒருவன் சமையலுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வீட்டில் சேர்க்கிறன். சிறுவர்கள், பின்னுல்பக்குவமான பிறகு தங்களுக்கு உணவாகுமென்று விளங்காமலும், பொறுத்திராமலும், அப்போதே தின்னவேண்டுமென்று பரபரப்படைகின்றனர் ஆனுல், வயது வந்தவர்கள் பக்குவமானபின்தான் உண்கின்றனர். அஞ்ஞானிகள், அல்ப அறிவால் கண்டதைக் கேட்டதை அப்போதே விவேக

மின்றி, மோகத்தால் அனுபவிக்க இச்சிக்கின்றனர். ஞானியாகிய விவேகி யாவற்றுள்ளும் நிறைந்துள்ள தன் வடிவ ஆனந்த ஆன்மாவில் திளைத்து, சாவதானனுய் விஷயத்தில் சுழுத்தனுகின்ருன்.

573. பெருளாசை முதலில் ஒழிந்தால்தான் பின் பெண் ஆசை போம்.

574. மனம், சென்றபடி விடுவது முதலில் சுகமாகவும், பின்னர் துக்கமாகவும் முடியும். மனத்தை முதலில் சென்றபடி விடாது அடக்குவது துக்கமாகவும், பின்னர் நாளாக நாளாக சுகமாகவும் முடியும். இதுவே நன்மார்க்கம்.

575. கற்பனைக்கு மூலம் மனம். ஆனதால் மனத்தைத் தன்னில் நிறுத்தி, புறத்தில் செல்வதைத்தடுத்தால், கற்பனை உண்டாகாது. அதனுல் துக்கமும் உண்டாகாது.

576. சன்னியாசிக்கு, இடம் பொருள் மிக்க துக்ககாரண மாகிறது.

577. அதிகபசியுடையவனுக்கு ரசவர்க்கங்களோடு கூடிய அன்னங்கிடைத்தால் சந்தோஷமுண்டாவதுபோல, மோக்ஷ தாகமுடையவனுக்கு சத்துக்களைக்கண்டால் சந்தோஷ முண்டாம். இவைகளுக்கு இறைபக்திப் பிரதானம்.

578. ஒரு குடியானவன் பழவர்க்கக்கொடிகளை அல்லது செடிகளை நல்லபலனைஉத்தேசித்துப் பயிர்செய்து வருகிருன். அதில் சிறுவர்கள் சிறு பிஞ்சுகளை அறுத்துத் தின்னு கின்றனர். மத்தியதரப் பையன்கள் சில காய்களையறுத்துத்

தின்றும், குறைந்த விலேக்கு விற்றும் வருகின்றனர். இவ்விருவருக்கும் முக்கியப் பயனுகிய பழவர்க்கங்களின் கௌரவமும், அதன் ஊதியமும் இன்னதென்பதை நன்கறியார்கள். அவைகளை அனுபவிக்கவும் முடியாது. ஆனல், குடியானவன் முன்னுள்ளபிஞ்சு, காய்களை அறுத்துச் செடியைக் கெடுக்காமல், பழமொன்றனையே நாடி அதன் பலனையும் அடைகின்ருன். ஈஸ்வர சிருஷ்டியில் உள்ள பிரபஞ்ச தோற்றங்களில், சிலபாமரமக்கள் **கண்டதேகாக்ஷி கொண்டதே கோலமாக** விஷயசக்தராய் அதனையே யனுபவித்தும், புழு மலக்கிருமிகளைப்போல மடிகின்றனர். இன்னும் சில அல்பவிவேகமுடைய புருஷர், இவ்வுலகினும் அதிகபோகமுடைய சுவர்க்காதி அனித்யபோகங்கள் அடைய இச்சித்து, அதன்வழியே அளித்த பலனை அடைந்து மீண்டும் துன்பமடைகின்றனர். இவ்விருவரும் இறைவனின் முத்தொழில் பிரபஞ்சங்களை நன்குணராதவர்; பூரணவிவேகமற்றவர். அதனல் இவ்வுலகில் எது பயனென அறியாது, மோக்ஷத்தையடையாது, இழிநிலையை அடைகின்றனர். ஆனல், **உத்தம விவேகி** முற்கூறிய பலனைக் கிஞ்சித்தும் அடைய இச்சியாதொழித்து, பரமமேலான ஞானமொன்ருலேயே மோக்ஷமடைந்து ஆனந்தராக வாழ்கின்றனர்.

579. கரணங்கள் தடிப்புறும்போது ஆகாரத்தைக் குறைக்கவேண்டும். ஆகாரமும் மிக்க புளிப்பு, உறைப்புள்ளதாக இருக்கலாகாது.

580. பருவத்திலிடப்பட்ட வித்துக்கள் நல்ல பயனைத்தரும். நல்ல பருவ வயதில் அப்பியசிக்கப்பட்ட ஞானசாதனம் அவசியம் மோக்ஷத்தைத் தரும்.

581. எப்போதும் சுத்தமான வத்து ஆன்மா ஒன்றேயாம்.

582. பகவானும் ஆனந்தம்; அவரது சிருஷ்டிப்பொருளும் ஆனந்த வடிவமேயாம், ஆனால், சீவர்கள் அச்சிருஷ்டியில் நானா புத்தியைச் கற்பித்துத் துக்கிக்கின்றனர்.

583. நன்றாகக் கற்று, உலக நடையில் உபேக்ஷை பிறந்து, ஞான வாழ்க்கையில் முன்னேற்ற மடைந்து, மனம் அடங்கப் பெறின், இதுவே **சிறந்த செல்வம்**. இதனினும் சுகந்தரும் செல்வம் எவ்வுலகிலுமில்லை.

584. ஒருவன் உறுதியாகப் படிக்காமல், அனேக சாதனங்களை அப்பியாசிப்பானாயின். அவ்வப்பியாசம் பிறரிடத்தில் பேசிக்கொண்டிருக்கத்தான் உதவும். தனக்கு ஒரு பயனும் தராது. ஒன்றையே நன்றாகப்பழகி, அதில் கொஞ்சமேனும் நன்மையடைந்து மற்றைய நன்மையையும் நாடி நின்று முயற்சிப்பவன் சீக்கிரம் பலன் அடைவன். அவன் பிறரிடம் அதிக கௌரவம் பாராட்டமாட்டான்.

585. சாதகன் அடங்கியிருப்பது சாதனைக்கு அதிக பயன் தரும்.

586. எப்படி ஜலத்தின் சூடு வெளிப்பாத்திரத்தின் பரிசத்தாலும் அறியலாமோ, அதுபோல ஒருவன் மனப்போக்கை அவனது முகத்திலும் செய்கையிலும் கண்டுக்கொள்ளலாம்.

587. பழமுள்ள விருக்ஷத்தின் மேலுள்ள முட்செடிகளை, அப்போதைக்கப்போது மேல் ஏறுவதை வெட்டிவந்தால், ஓயாது முளைத்து அம்மரத்தை மூடிக்கொண்டேயிருக்கும். வேரோடு எடுத்துவிட்டால் மீண்டும் உண்டாகாது. ஆன்ம

ஞானத்தை குரோத லோபங்களாகிய முட்செடிகள், ஒன்றன்பின் ஒன்ருக வந்து மூடிக்கொண்டு வருகின்றன. நாம் வகையறியாது ஏதோ ஒருவகையாக பிரதிகூல வாசனையால் தள்ளுகிருேம் ஆனல் அவைகள் அப்பிரதி கூல வாசனையால் மாத்திரம் போகாது. அவைகளின் மூலம் கெடவேண்டும். அம்மூலம் ஆசையேயாகும். ஆதலால் ஆசையை அடியோடு நீக்கினல், பிரதிபந்தங்க ளான குரோதாதிகள் சுத்தவாசனையாகிய வெய்யிலால் தீய்ந்து காய்ந்துவிடும்.

588. நன்ருகப் பார்க்குமிடத்து சிதாபாசனுக்கே சரீரங் களைப்பற்றிய ஜுரம் இல்லையாயின், அவனதிஷ்டானமான ஆன்மாவுக்கு எவ்விதத்தாலும் யாது துன்பமுமில்லை. ஆத லால் ஞானி துக்கமற்றவன்.

589 யார் எதைப்பெற எண்ணிப் பாடுபடுகின்ருனே, அவன் அதன் வடிவமானல், அதற்கே மனம், வாக்கு, காயங்களை அர்பித்தால்தான் அதனை அடையமுடியும்; ஆன்மாவும் அப்படியேதான்.

590. தியானம் செய்கிறவர்கள், அதிசுப்பேச்சுள்ளவர்கள் எவ்வளவு நல்லவர்களானலும், அவர்கள் சகவாசத்தைக் குறைத்தல் வேண்டும்.

591. மாம்ச மய சரீரம் நலமல்லவென்பதை அடிக்கடி விசாரித்துத் தெளிதல் வேண்டும். அதனல் அனேக துக்கங்கள் போகும்.

592. தியானமென்பதும், விசாரமென்பதும், பெண்ணுசை பொருளாசையற்ற மனத்திற்குத்தான் பிரியமாயிருக்கும். ஆதலால் நாம் முதலில் ஆசையற்றவனுதல் வேண்டும்.

593. ஜலத்தில் ஜடப்பொருள்களான திரணமுதலியவை ஜலம் போன போக்கில் செல்லுகின்றன. மீன் போன்ற சேதன ஜந்துக்கள் எதிர்த்துச் செல்லுகின்றன. உலகில் விவேகமற்றவர்கள், உலகம்போன போக்கில் தூர்த்தராகித் துன்புறுகின்றனர். சில உத்தமர் எதிர்த்துப் பர நிலையை அடைக்கின்றனர்.

594. கட்டுக்கடங்காத காட்டுயானை சிலநாளில் ஒரு யானைப்பாகனிடம் அடங்கிவிடுகின்றது. அதிசஞ்சல மனமும், அப்பியாச வைராக்யங்களால், சில நாட்களுக்குள்ளாக அடங்கிவிடும்.

595. மனத்தின் தெளிவிற்கேற்க ஆனந்த ஆன்மா வெளியாகும்.

596. ஆயுள், நீர்க்குமிழிபோன்றது. சரீரம் நானென்பது பாம்பின் விஷத்தினும் கொடிது. பெண்போகத்தில் இச்சை வைப்பது நெருப்பில் விழுவது போன்றது. தனத்தில் ஆசைவைப்பது விஷஜந்துக்களின் சேர்க்கைபோன்றது. இவையாவையினும் **நிராசை**யை சம்பாதிப்பதினும் மேலான சுகம் வேறொன்றுமின்று.

597. கருவி கரணங்களுக்கு உறுதியுள்ளபோதுதான், மனத்தை அடக்கமுடியும். பேரின்பம் சுலபமாக அடைய முடியும்.

598. சர்வ ஜனங்களுக்கும் ஒரு உண்மையைக் கூறுகின்றேன். சர்வசுகத்தினும் **ஆன்ம** சுகமே சிறந்தது. இது நீங்கள் அடைந்தபோது நன்றாகத்தெரியும்.

599. விவேக முதிர்ச்சியாலும் சாந்தி கிடைக்கின்றது. ஆனால், அது நிலைபெறுவதில்லை.

600. "நிராசை பூரணமாகும்போது தான்" மற்றெல்லா சாதனமும் பூர்த்தியாகின்றன.

601. மனக்குழப்பமின்றிய தியானம் கொஞ்சமானாலும் நல்ல பலன் தரும்.

602. மனம் தியானம் செய்யும்போது சாந்தியடையவேண்டின், கூடுமானவரையில் அனாவசியமான விவகாரங்களை ஒதுக்கிவைத்தவனாகவேண்டும்.

603. பொன்னால் செய்த சிம்ஹத்தை, சிறியவனும் வயது வந்தவனும் வேடிக்கையாகக் கண்டனர். அதில் சிறியவனுக்கு சத்தியமாகவும், பெரியவனுக்குப் பொய்யாகவும் அனுபவிக்கப்படுகின்றது. உலகம், ஞானி, அஞ்ஞானி இருவருக்கும் போக்கியமானாலும், அஞ்ஞானிக்குச் **சத்தியமாகவும்**, ஞானிக்குப் **பொய்யாகவும்** அனுபவிக்கப்படுகின்றது.

604. மித்தையா திருஷ்டி, தன்மய திருஷ்டி ஆகியவைகள் ஆரம்பத்தில் அவசியம். பின்னர் எப்போதும் சங்கல்பமன்று. ஒரு திருஷ்டியும் இல்லா திருத்தலே **பரமசுகம்.**

605. வள்ளுவரை அனேகர் நல்லவாழ்க்கையுடையர் என்று ஒப்புகின்றனர். காரணம் என்ன? **புறத்தில் ஏழ்மையும் அகத்தில் சுத்தமும்** நிரம்பிய ஞானச்செல்வமுடையராக இருந்தமையால்தான்.

606. ஒருவன் தன் மனக்கோணலை அறிவதற்கு அனேக ஜன்மங்கள் செல்லுகின்றன. ஆனால் நல்லாசாரியனை அடைந்தால் சீக்கிரம் தெரியலாம்.

607. 'அறிவுடைமை' மாநிலத்தில் மிக்க செல்வமென்றனர். அவ்வறிவு யாதெனின் பதார்த்தங்களை உள்ளபடி அறிதலாம்.

608. விவேகமில்லாத தியானம் செய்பவர், குருட்டுப் பிறவியினர் ஆவர்.

609. விஷயம்:-
விஷய சுகத்தினும் கரணச்சுவை சிறந்தது. இராகச்சுவையினும் கல்விச்சுவை சிறந்தது. கலவிச் சுவையினும் ஒழுக்கச்சுவை சிறந்தது. ஒழுக்கத்தினும் வைராக்யச்சுவை சிறந்தது. வைராக்யத்தினும் ஞானச்சுவை சிறந்தது.

610. பூரண மனவலிவும், நிஷ்காம புண்ணியமும், ஈஸ்வர கிருபையுமுள்ளவன், தன்னையே விசாரித்துத் தன்னையே தியானித்துத் தன்னிலே சாந்தியடைந்து தானாக சுகித்திருப்பன். இவனுக்கு மற்ற வியவகாரமனைத்தும் பாரமாகும்.

611. மனத்தூய்மையுள்ளவர்கள் எவ்வளவு தீமையாதிகள் உண்டானபோதும் கலங்கார்கள்.

612. சங்கல்பமொழிந்தால், மித்தையாத்மா புத்தி கெடும். புத்தி கெட்டால், சித்தம் கெடும். சித்தம் கெட்டால் அகந்தைகெடும். அகந்தை கெட்டால் ஆனந்தமாம்.

613. ஓர் விவசாயம் செய்பவன் பிராரப்தமென்று தகுந்த

முயற்சி செய்யாமல், தீ முயற்சி செய்து நிலங்களுக்கு விபரீதமான காலங்களில் ஜலம் முதலியவைகளை விடுவானாயின், தானியத்தைக் காலத்தில் பார்க்கமுடியாது. மாறாக துக்கமே உண்டாகும்; முயற்சியும் வீணாகும். அதிகாரியும், நன் முயற்ச்சியால் நல்ல சாதனங்களைத் தேடியடைந்து, சுகம் பெறாமல் தீ முயற்ச்சியை பிராரப்தமென்று சொல்லிக்கொண்டு செய்வானாயின், கடைசியாகத் துன்பமும், மறுபிறவியில் நரகமும் பிராப்தமாகும்.

614. உத்தம சாதுக்களுக்குப் பெண்ணாசையும், பொருளாசையும் கனத்த பகை. இவைகளை வென்றவன் பரமானந்தனாகின்றான்.

615. சில வேதாந்திகள் ஜனகரைத் தங்களுக்கு உவமானமாகக் கூறிக்கொள்ளுகின்றனர். அது நன்றுதான். ஆனால், அவருடைய மோக்ஷ தாகமும் ஞானானுபூதியும் தங்களுக்கு உண்டா? என்பதை ஆராய்ந்து கூறுதல், மிக்க நலமாகும். வெறும் விஷய போகங்களுக்காக அவ்வாறு கூறுதல் நலமாகாது.

616. மனத்தை நிறுத்துவதில் அனேக சாதனமுண்டு. ஆனாலும், அவைகளில் **நிராசையே** அவசியம் வேண்டப்படுகிறது.

617. கருமம் செய்பவர்களுக்கு ஆரம்பத்திலேயே ஞானோபதேசம் செய்வது, வளரும் செடியை ஆரம்பத்திலேயே முறிப்பது போலாகும்.

618. முரட்டு வேலை செய்யும் கூலிகளிடத்து நுண்மையறிவு காண முடியாது. என்னேரமும் வேதாந்தத்தைப்

பேசுவதும் படிப்பதுமாக உள்ளவரிடம் மனவமைதியைக் காணமுடியாது.

619. பலவீனத்தால் அறுபட்ட கயிற்றை எத்தனை முறை முடிசேர்த்து வைத்துபயோகித்தாலும் முன்போல வேலை செய்யாது. ஞானியின் மனம் ஜகத்தில் எத்தனைமுறை பிறரால் பிரவிருத்திக்கப்படினும், அல்லது பிராரத்தம் இழுத்துச்செல்லுமாயினும் முன்போல் ஸ்திரமாக நின்று வேலை செய்யாது.

620. சிறுவரும் ஞானிகளும் வியவகாரங்களில் ஒன்று போன்றவர்கள். ஒன்றும் நியமமாக இராது. கர்த்தவ்ய மின்றி சந்தோஷமாக இருப்பர்.

621. சிறு குழந்தைகள் ரசம் நிறைந்த கனிகளை நன்ருக சுவைக்கத் தெரியாமல், கண்டபடி கீழும் மேலும் ஒழுக விடுவர். சிலரும் சிறுவர்போல அமைதியற்றும் பிரஹ்ம தியானத்தைச் செய்கின்றனர். இவர்கள் எப்படிப் பரமசுகம் பெறமுடியும்.

622. கல்வியற்றவனுனலும், கல்வியுடையவனுனலும் பொருள்தேடும் வகைதெரிந்து ஒழுகினல் அவர்களுக்கும் பொருள் கிடைக்கின்றது. ஞானமும் கல்வியுடையவர், அல்லாதார் இருபாலரும் ஆன்மநேயத்தியான விசாரங்களால் அவசியம் அடைகின்றனர்.

623. பாரமான சுமையைத் தூக்கிச்செல்பவன், அச்சுமை தனதல்லவென்று உணர்ந்தால், ஒருநொடிப்போதும் அதை சுமக்க மாட்டான். சுகதுக்க முதலிய அல்லல் சுமைகளை சுமப்பவன், அவ்வல்லல் யாருடையது? என்று தெரிந்து விட்டால், பின்னர் அவ்வல்லலோடு சேரமாட்டான்.

624. சுவானம் யாரைக்கண்டாலும் குலேக்கும். நல்லவர் கெட்டவர் தெரியாது. மனமும் எதிர்ப்பட்டதை யெல்லாம் நினேக்கும். இது நல்லது இது கெட்டதென அறியாது. ஆனல், நாய் தனது எஜமானனேக்கண்டபோது சத்தமெல்லாம் விட்டு உடல் குலுங்க உள்ளம் பூரிக்க சந்தோஷிக்கும். மனமும், உலகைத்துறந்து இறைவனே அடைந்தபோது மற்றெல்லா வாசனேயையும் விட்டுப் பரமானந்தத்தில் சாந்தமாக அமர்ந்து சுகம் பெறும்.

625. தத்துவக்கூட்டங்களுள் மனம் ஒன்று மாத்திரம் ஒழுங்குபட்டால் மற்றைவை யாவும் ஒழுங்காகும்.

626. மனம், நல்ல சக்தி வாய்ந்த போது எப்போதும் உற்சாக முண்டாகும். உற்சாகமுள்ளவனுக்குத் தியானம் பழகுதல் சுலபமாகும்.

627. பிறர்கூறும் பழிவார்த்தைகளேயும், துதி வார்த்தைகளேயும் சாதகன் காதுகொடுத்து கேட்கலாகாது. அதனல் சித்தம் அதிக சஞ்சலமடையும்.

628. உத்தம அதிகாரி மண், பொன் இரண்டையும் அடியோடு நீக்கிவைப்பன். அதனல்தான் மனம் சாந்தி அடையும்.

629. நல்ல எண்ணங்க (ஆத்மபாவனேக)ளே அடிக்கடி உண்டாக்கச் செய்வதால், மனத்தின் உயரியதன்மை சில சந்தர்ப்பங்களில் அப்பியாசிகளுக்கு வெளிப்படும். அதை யறிந்து அதோடு விட்டுவிடாமல் மீண்டும் மீண்டும் அப்பியாசம் செய்யவேண்டும்.

630. கருத்தா, காரணம், கிரியை, கருமம் ஆகிய அனைத்தும் இறைவனெனக் கண்டு நிற்றல் தான் சரியான ஈசுரார்ப்பணமாகும்.

631. மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கருவி மனம். ஆனதால், மனத்தை எம்முயற்சியாலும் சுத்தமாக இருக்கச் செய்தால், வாழ்க்கை வெகுசுகமாக இருக்கும்.

632. தியானம் செய்ய உட்காரும்போது முதலில் மனத்தை சஞ்சலமில்லாத வழியால் பழகிப், பின்னர் விவேக வாயிலாகத் தியானம் செய்ய வேண்டும்.

633. பசுப்போன்ற மிருகங்கள் கட்டின இடத்தில் சும்மா இருக்கும். மான்போன்றவைகள் சும்மாயிராது. குறங்கும் அப்படியே அதிகசஞ்சலப்படும். சிலர் பசுப்போல தியானத்தில் சாந்தியாக இருப்பார்கள். சிலர் மான்போல சஞ்சலமுடையவராவர். இன்னுஞ்சில தாழ்ந்தோர் குறங்கு போல அதிசஞ்சலராக இருப்பார்கள்.

634. உலகத்தைத் தன் கட்டளைக்குக் கீழ் அமைப்பதை விட, மனத்தை தன் கட்டளைக்குக் கீழ் அமைப்பவன் தான் அரசன்.

635. சில குதிரைகள் கண்ணுக்கு மாத்திரம் விபரீதமாகத் தோன்றினவைகளைக் கண்டால் மிரண்டு ஓடுகின்றது. இது போல சில மதவாதிகள், கண்களுக்குத் தங்கள் தேவதைகளின் சின்னங்களைக் காணுதவிடத்து, மிக்க பயமும் குரோதமும் உடையவராக இருக்கின்றனர்.

636. க்ஷேத்திரங்கள் யாவற்றினும் சிறந்தது சரீரமேயாகும். இதில் உள்ள கோசங்கள் 5ம் பிரகாரம். இவை

களின் மத்தியில் இவைகளுக்கு அதிஷ்டானமாக உள்ள சச்சிதானந்தஆத்மனே தேவதை. இதனது அனுபவ சாக்ஷாத்காரமே சுத்த சேவை.

637. ஒருவன் தேகப்பயிற்சியால் எவ்வளவு தூரம் சரீர வன்மையைப் பெறுகின்றானோ, அவ்வளவு ஆன்மதியானப் பயிற்சியால் மனத்தின் வன்மையைப் பெறலாம்.

638. தியானத்துக்குக் குணங்களும், அன்னியரது சேர்க்கைகளும் எவ்வளவு மிதமாக இருக்கவேண்டுமோ, அவ்வளவு, உணவும் வார்த்தையும் மிதமாக இருத்தல் வேண்டும்.

639. ஆன்மானந்த அனுபவம், நிராசையோடு உண்மையாக மனத்தைத் தண்டித்து அடக்குபவர்களுக்கு, சீக்கிரம் வெளியாகின்றது. மற்றையருக்கு அவ்வளவு சீக்கிரமாக சாத்யமாகின்றதில்லை.

640. மனத்தை சங்கடமில்லாத வழியில், மிருதுவாகவும், சமாதானமாகவும் திருப்பி, ஆன்மாகாரமாக்கவேண்டும்.

641. ஒருவன், பயிர்செய் நிலங்களை பக்குவமாக உழுது எருவிட்டு விதையிடாத குறையால், எத்தனை தடவை விதை விதைத்தாலும், அவைகளின் பயிர்கள் நல்ல பலனைத்தர மாட்டாது. ஒருவன், சாதன சாத்யங்களை நன்றாக விசாரியாமல் அவசரப்பட்டு, அவிவிசாரத்தால் எத்தனை குருவையடைந்து உபதேசம் கேட்டாலும், நல்ல பலனை அடைய மாட்டான்.

642. ஒருகாய், காலமின்றி இடையில் பழுத்திருந்தால் அதற்கு நிறமெல்லாம் நிலைகுலைந்திருக்கும். ஒருவன் அப்பி

யாசம், காலத்தில் பலன் தருவதன் முன்னே அவசரப்பட்டு கண்டபடி விபரீதமுறையில் செல்வானாயின், அவனிடத்தே அனுபவம் சுகந்தராதுபோவதோடு துக்கமும் தரும்.

643. கிழங்குவேர், செடியோடு உள்ளபோது மண்ணில் தான் இருந்தால் கெடாது. வேரை அருத்துவிட்டோமாயின் சில நாட்களில் அழுகிவிடும். மந்திரம் லக்ஷியத்தைப் பற்றி நின்று ஜபிப்பதாயின், அம்மந்திரம் சிலநாளில் பலன்தரும். லக்ஷியமின்றி தாறுமாறாக ஜபிப்பதால் சிலநாட்களில் விட்டுப்போம்.

644. தியானம் கடினமான விஷயம். ஏன்? மனங்கரைந்து பிரஹ்ம மயமாக நிலைக்கவேண்டியிருத்தலால். ஆனால், தியானஞ் செய்து பழகிவிட்டால், பின்னர் தியானத்தால் மனமடங்குவது ஓர் கனிந்த பழத்தைப் பிழிவது போன்று அவ்வளவு சுலபமாகும்.

645. நான் எவ்வளவோ பேருக்குத் தியானத்தின் மஹிமையையும் அதன் லாபத்தையும் எடுத்துக் கூறினேன். அவ்வனேகருள் சம்மதித்தவர் சிலரேயாகும். அச்சிலரிலும் உண்மையாகப் பழகுபவர்கள் 10க்குள்தான் இருக்கும்.

646. வேலியை ஒழுங்கு செய்துக்கொண்டு, விளைநிலங்களைக் கவனியாதவனுக்குக் காலத்தில் பயன் கிட்டாது. கர்மங்களையே காலமுள்ளளவும் செய்துக்கொண்டு, ஞான சாதனங்களைக் கைக்கொள்ளாதவனுக்கு மோக்ஷம் கிட்டாது.

647. சில கூட்டத்தார் **''நாங்கள், நல் யோகிகள், பாரம்பரி**

யத்தைச் சார்ந்தவர்கள், பாலும் பழமுந்தான், சாப்பிடுவோம்" என்று பெருமையாகக் கூறுகின்றனர். எவ்வளவு அபிமானம் பாபம்! இவர்கள் நன்மார்க்க வழியின்னது என்று இன்னும் தெரிந்துக்கொள்ளவில்லை.

648. பக்தன், யோகி, ஞானி, ஆகியவர்கள் அவரவர் தேச ஆசாரப்படி மது, மாமிசாதிகளை ஒழித்து அன்னம், பால் முதலிய சாத்துவீக ஆகாரங்களை கொஞ்சம் குறைவாகவும், உண்ட 4 மணிக்குள் ஜீரணமாகும்படிக்கும், பசியுண்டாகும்படிக்கும் உண்டால் போதும். இதுதான் சாத்வீக ஆகாரமும், நன்மார்க்கிகளுக்கு அசன யோகமுமாகும்.

649 "சகல யக்ஞங்களிலும் ஜப யக்ஞம் யான்" என்று பகவான் 10-ம் அத்தியாயத்தில் கூறுகின்றார். இதன் சிறந்த தன்மை யாது? எனின், ஜப யக்ஞத்தால் சிறிதும் பாபமில்லை; மற்றவைகளிலுண்டு பிரார்த்தனையும் ஜபமும் சித்தத்தை வெகு லகுவாக்கும். சீக்கிரமாகவும் தூய்மைப் படுத்துகின்றன.

650. பறக்கும் பருந்து ஜலத்தில் விழுந்தால் இறந்துவிடும். மீன்கொத்திப் பக்ஷி ஜலத்தில் விழுந்து அதிலுள்ள ஜந்துக்களை புசித்துத்தான் ஜீவிக்கவேண்டும். உத்தம அதிகாரியாகிய அப்பியாசி, விஷய நீரில் விழுந்தால் அடியோடு கெடுவான். பாமரனுக்கு விஷயசாகரமே ஜீவனமாக இருக்கின்றது.

651 புத்தி திருந்தப் பெற்றவன் எங்கு சென்றாலும் சுகந்தான். ஆனால், யாவும் தன்வடிவமாகக்கண்ட ஞானி ஒருவன்தான் பிறவியை விலக்கினவன்.

652. அன்னத்தை இலையில் படைத்துக் கடவுளாகக் கருதுகின்றனர், அல்லது கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றனர். அந்த அன்னமே மலமானபின், முன்னிருந்த எண்ணத்தினும் அதிக மாறுதலுடையராக எண்ணுகின்றனர். என்ன காரணம்? அம்மலத்தின் பாகத்தில் சீவர்களது அபிமானம் இல. மணக்கூறு சம்பந்தப்பட்டிருப்பதால்தான்.

653. பழுக்கக் காய்ச்சிய இரும்பின் ஒளி, சில நிமிஷங்களில் சாமானிய அக்கினியாக மறைவது போல, ஞானிகள் விதேக முத்தியில் பிரஹ்ம மயமாகின்றனர்.

654. அதிகாரிகள், அடிக்கடி நூல்களையும் மற்றையரையும் எதிர்பாராமல், தங்கள் செய்கையையும், மனத்தின் நிலைமையையும் நாடி விசாரித்துத் திருத்திக்கொள்வது மேலான வழி. இதனால் சீக்கிரம் முன்னேற்றமடையலாம்.

655. மனமடக்கமற்றவர் கடவுளை நேராகக் கண்டாலும் பெத்தரேயாவார்கள். மனமடக்கமுள்ளவர்கள் ஒரு துரும்பையும் கடவுளாகக் காண்கின்றார்களாதலின் அவர்களே முத்தராவர்.

656. பொது ஜனங்களுக்கு, எப்போதும் மத விஷயத்தில் ஒரே கொள்கையிருக்குமென்று கருதுவது கூடாதகாரியம். தேசபேதத்தாலும், ஆதார, ஆசாரபேதத்தாலும், மதமும் நானா பிரகாரமே இருந்து வந்துள்ளன. இனியும் அப்படியேயிருக்கும். ஆனால் நல்ல விவேகியர் மாத்திரம், எந்த தேசத்தவராயினும் ஒன்றுபடுவார்கள்.

657. அப்பியாசி, கேள்வியை நம்புவதைவிட தன் நடையை நம்ப வேண்டும். இதுதான் சரியான அஸ்திவாரம். தன் மனம் வெகுசீக்கிரமாக இதில் படிந்துவிடும்.

658. அஹிம்சை என்ற தத்துவம், ஒழுங்காகச் சென்று கடைசியில் முக்தியில் முடிகின்றது.

659. எல்லாங் கடவுளென்று சொல்லுவது ஜனங்களுக்கு சகஜமாக இருக்கின்றது. எப்படி எல்லாங்கடவுளென்று கொண்டீர்கள்? என்று கேட்டால் அதற்கு பதில் இல்லை. ஏனென்றால், சொன்னபடி இரண்டொரு பொருளிலாவது உள்ளபடி கடவுளைக் காணாததால்தான்.

660. சிறுகுழந்தை போன்ற சுபாவமுள்ளவருக்குத்தான் வேதாந்தம் நல்ல சாந்தியையும், அனுபவத்தையும் கொடுக்க வல்லதாகும். மற்றையருக்கு ஒரு நன்மையும் கொடுக்காது.

661. தியானம் செய்பவன், ஒருநாள் குறிப்பிட்ட காலத்தில் தியானஞ் செய்யாவிடின், அதனால் மனக்கிலேச பாரம் தோன்ற வேண்டும். அவன்தான் தியானப் பழக்கத்திற்குத் தக்கவனாகும்.

662. தியானஞ் செய்பவர் இடையிடையே மனம் சலிப்பதைக் கண்டு, பயமும், கிலேசமும் அடையாமல், எதிர்த்துச் செல்லும் மச்சங்கள் போல, விஷய சம்பந்தத்தால் தான் மனம் சலிக்கின்றதென்பதைக்கண்டு, அவ்விஷயங்களை மித்தையாக நிச்சயஞ்செய்து, அடிக்கடி ஆன்மாகாரமாகப் பழகினால் மனம் நின்றுவிடும்.

663. சுத்த விரக்தனுக்கு யோகம் வேண்டியதில்லை.

664 யாரிடத்திலும் அடக்கமாயிரு. இது ஒரு பெரிய தவமாகும். உன் வேலையாளன், அவனினும் தாழ்ந்த பையன்கள், பெண்கள், யாரிடத்தும் தாழ்ந்து நடந்துக்கொள்.

665. கூட்டமுள்ள இடங்களுக்கும், விஷயசம்பந்தத்தில் அதிகப்பற்றுள்ளவர்கள் இடங்களுக்கும், ஒருபோதும் அப்பியாசி செல்லக்கூடாது. அதனுல், பெருந்துன்பமும் மனத்தின் தளர்ச்சியுமுண்டாகும்.

666. தீயோடு தீ மோதினுல் நஷ்டமில்லே. முன்னினும் நன்ருக ஜொலிக்கும். ஆனுல், தீயோடு கையை மோதினுல் கைக்குத்தான் தீமையுண்டாகும். ஞானிகளோடு ஞானிகள், தங்கள் குற்றங்களேக்கண்டு தண்டித்துக்கொள்வார்கள், அதனுல் அவர்களது ஞானம் முன்னினும் பிரகாசிக்கும். ஆனுல், ஞானிகளே குற்றமுள்ளவராக, பாமரர் பாராட்டுவதால், அப்பாமரமக்களே துன்புறுவர்.

667. சிறுவர்கள் எதைக் கேட்டாலும், "ஆம், முடியும்" என்று சீக்கிரமாகக் கூறிவிடுவார்கள். காரியங்கள் ஒன்றும் செய்து முடித்துவிட முடியாது. அதுபோல, சில வேதாந்த பண்டிதர்கள் "நாங்கள் எல்லாம் விட்டு விட்டோம், எங்களுக்கு ஒரு பற்றுமில்லே" என்று படித்தபடி கூறிவிடுகிருர்கள். துக்கம் வரும்போது பாமரரைவிட அதிக திண்டாட்டமடைகின்றனர். இவர்கள் வாய்வேதாந்தம் அங்கு எள்ளவும் பிரயோஜனப்படுவதில்லே.

668. ஒரு சுமை புல், ஒரு மூட்டை பருத்திக் கொட்டை என்று எழுதிக் காட்டினும், வாயால் கூறினும், பசுக்கள் அதைப் பொருட்படுத்தா. ஆனுல், மனிதன் இன்றைக்கு ஒரு வேளே விருந்தென்று சொன்னுல், நாக்கைத்தடவி ருசி பார்க்க இப்போதே எண்ணுகின்ருன். எது மிருகம்? மனிதன் யார்?

669. விஷயசிந்தனை ஆரம்பத்தில் விளையாட்டாகவும், சுகம் போலவும் இருக்கும். பின்னர் பெருந்துன்பமாக முடியும். ஆதமீக தெய்வ சிந்தனை அத்தகையதல்ல.

670. சகலரும், தங்கள் தங்கள் வேதங்களையே சிறந்த தெனக் கொள்ளுகின்றனர். ஆனால், அவ்வெல்லா வேதங் களும், ஒரு தேவதையையே மூலமாக உடையதென அவர் களறிகின்றதில்லை. சில அறிஞர்கள்தான் அவ்வாறு உள்ளபடி அறிகின்றனர்.

671. ஒருவன் பலவகை ஆகாரங்களை அரைகுறையாகத் தின்று அஜீரணமடைவதைவிட, ஒரே ஆகாரத்தை நன்றாக மென்றுதின்பது தேக மனங்களுக்கு ஆரோக்யமாகும். ஒருவன் நானா வேதசாரங்களையும், நானா நூல்களையும், பார்த்துப் பிரமையடைந்து கெடுவதைப் பார்க்கினும், ஒரு குருமுகமாக ஒரு நூலை வாசித்து, அதன் முறைப்படியும், குருவின் வாக்கின்படியும், நடக்க இச்சிப்பது, அப்படியே நடப்பது, மிகச் சிரேஷ்டமாகும்.

672. தந்தையினிடம் பிள்ளைகள் பொருளை விரும்பி, சிரித்துக்கொண்டும், அழுதுக் கொண்டும், வாதாடி கேட்ட பொருளை அடைகின்றார்கள். சாதகனும், ஆன்மலாபத்தை விரும்பி, இறைவனைநோக்கி அழுது, அவனை இடைவிடாது அன்பால் ஆராதிக்கும்போது, நாம் கேட்டுக் கொள்ளும் ஆன்மலாப சம்பத்தை அவசியம் பெறலாம்.

673. துறவியின் வாழ்க்கையைக்கண்டு, சில அறிவுள்ள வர்கள் நாமும் அப்படியாகலாம் என்று நினைக்கின்றார்கள்! விவேகம் செய்து பார்ப்பதால், துறவைக் கைக்கொள்வது கூடாது. விவேகத்தோடு, விடாப்பிடியான தீரம் நமக்கு

உண்டா? என்பதை நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும். எவனுக்குத் தீரம் இருக்கிறதோ அவன் ஆசரிக்கலாம்.

674. தோட்ட வேலைக்காரன் தோட்டத்தை நன்ருகக் கவனிக்கின்ருன். அதற்கேற்ற சம்பளம் பெறுகின்ருன். ஆனதால், அவன் அத்தோட்டத்துப்பழங்களை அனுபவிக்க ஏதுவில்லை. கருமம் செய்கின்றவன் அக்கருமங்களால் பயனை விரும்பி, அதற்கேற்றவண்ணம் சுவல்ப பலனையும் அடைகின்ருன். ஆனல், கர்மபல தாதாவான பரமாநந்த இறைவனைச் சேர்ந்து, சுகமாக வாழ அவர்களுக்கு முடிகின்றதில்லை.

675. பாமர மக்களுக்கும், லாபம் கண்டால், உடல் வலியும் மனத்தில் ஆயாசமும் தோன்றுவதில்லை. தியானம் செய்பவனுக்கு சாந்தியால் ஆனந்தானுபவம் உண்டாயின், பின் மனத்தின் அடக்கமுடைமையின், ஆயாசமும் சரீர உபத்திரமும் அதிகமாகத் தோன்றுவதில்லை.

676. நினைவே ஜெகத்தும் பந்தமுமானதால், நினைவை, அடியோடு அப்பியாசத்தால் தள்ளவேண்டும். இதுதான் பூரண முத்தியாகும்.

677. அறிவில்லாதவர்களும் தெய்வ வழிபாடு செய்கின்ருர்கள். ஆனல், அது சிறுவர் கல்யாண சடங்கையொத்து நல்ல பலன் தருவதில்லை.

678. கீதா ஜெயந்தியும், வைகுண்ட ஏகாதசியும், இன்று அனைவர்களாலும் கொண்டாடப்படுகின்றது. ஆனல், அவைகளின் உண்மை தத்துவம் நன்ருக விளங்கிக் கொண்டாடுப

வர்கள் சிலரேயாகும். கல்விக்குறைவால் இவைகளின் உண்மை விளங்குவதில்லை.

679. ஒருவன், பிறருக்கு வாக்கால் செய்யும் உபதேசத்தை விட, நல்நடையால் செய்யும் உபதேசம் சிறந்தது.

680. மிகுந்த செல்வம் படைத்தவனுக்கு கலக்கமுண்டாதல் போல, மிகுந்த கல்வி படித்தவனுக்கும் அதிக கலக்கமுண்டாகும். ஆனல், அக்கல்விமான் தனியிடமும், தியானமும் கைப்பற்றும்போது சாந்தியடையலாம்.

681. அறிவீனர் சினேகம், எந்த வகையாலும் துன்பந்தருவதுபோல், தேகாபிமானம் எல்லாவகையாலும் துன்பமும், மீண்டும் மீண்டும் மலின வாசனையை நிரப்புவதுமாகும்.

682. பக்தன் ஒருவன் கடவுளிடம் செய்யும் அன்பு உண்மையுடையதாயின், அவனிடத்துக் கடவுளின் உயரிய காக்ஷியோ, அல்லது அவரின் உயரிய லீலையாகிய செய்கைகளோ, அவனுக்கு அவசியம் அனுபவமுண்டாகும்.

683. ஞான சாதகன், எப்போதும் பரிசுத்தமான எண்ணமும், செய்கையும் உடையவனயிருக்க வேண்டும், இல்லையேல் இவன் செய்யும் அப்பியாசமனைத்தும் பாழ்த்துப் போகும்.

684. காற்றுநின்ருல் மழையுண்டாகும். மனம் நின்ருல் பேரின்பம் அனுபவமாம்.

685. மனம் சுபாவமாக உயரிய பொருள். கவுரவம் வாய்ந்த சத்துவகுணமுடையது. ஆனல், மனிதன் புஷ்பத்தைக் கசக்கி முகரும் குரங்கைப் போன்று, அதை

உலகப் பொருள்களில் தோய்த்துக் கசக்கித் துன்பமய மாக்குகின்ருன்

686. பழத்தின் மணமும் ருசியும் மாறிவிடும். மலரின் மணம் மாறிவிடும். மிருகபலமும் குன்றிவிடும். மனிதனது யௌவனமும் அழகும் போய்விடும். உலகமும் பலவாருன மாறுதல்கள் அடையும். அதாவது காடு நாடாகும்; நாடு காடாகும். ஆனல், ஞானியின் ஆனந்த நிலை மாருது.

687. உலக சிருஷ்டியைப்போல சம்ஹாரமும் இறைவனது லீலை. ஆனதால் மரணத்தைக்கண்டு பயப்படாது அன்போடு ஏற்பவன்தான் ஞானி.

688. அடங்கிய மனமாகிய பெட்டியில் ஞானமாகிய செல்வம் நிறைந்திருக்கிறது என்பதை ஞானியும் கடவுளும் அறிகின்றனர். ஆனல் கடவுளுக்கு அதனல் லாபமொன்றுமில்லை. ஞானி மாத்திரம் அந்த ஞான செல்வத்தை அனுபவிக்க பாத்யதை யுடையவனுவான்.

689 கவிகள் அனேகமாயிரம் ஞான நூல்களை நன்ருகப் பாடுகின்றனர். ஆனல், அவர்களுக்கு அதிலுள்ள நுண்ணிய பொருள் நன்ருக விளங்காதவராகவே இருக்கின்றனர். ஏனென்ருல் அநுபவித்துப் பாடவில்லை. பாடம் படித்து நாவால் பாடத் தொடங்கிவிடுகின்றனர். மனமாற சிந்தித்து வந்து பாடவில்லை.

690. கண், தன் சமீபத்திலுள்ளவைகளை அறிகிறதில்லை. தூரத்திலுள்ளவைகளையே காண்கின்றது, அனேகர் தன் மனத்திலுள்ள மலினத்தை அறிகின்றதில்லை. பிறரது மனக்கோணலை அறிய விரும்புகின்றனர்.

691. பெண்ணையும் பொன்னையும் அருவருக்கத்தக்க உமிழ் நீர் குப்பைகளைப் போலவாவது. திரணம் போன்ருவது, வெறுத்தும் உபேக்ஷித்த சாந்த புருஷனுக்குத் தியானம் செய்யமுடியும்.

692. மனித சரீரம் போன்று, தினந்தோறும் ஸ்நானம் முதலியவைகள் செய்தும், துர்நாற்றமும் வியாதியுமுடைய சரீரம் வேறெதுவுமின்று. இவ்வளவு அசுத்த சரீரத்தை விவேகி யெப்படி தானென்று கருதுவான்?

693. மேய்ந்து கட்டுத்துறையில் தானுக நின்றுகொண்டிருக்கும் பசுவிற்கு கட்டவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. பிராரப்த அனுசாரம் கிடைத்ததைப்புசித்து, சதா சாந்த சீலனுக ஆன்மாவில் ரமித்துக்கொண்டிருக்கும் மனத்திற்குத் தியானம் வேண்டுவதில்லை.

694. வைராக்கியம் பூரணமாக உடையவன்தான், உலக விஷயத்தில் மயங்காமல் தியானம் செய்வதில் பலன் காண முடியும். மற்றையர்கள் எவ்வளவு காலம் தியானம் செய்தாலும் பயன் காண முடியாது.

695. இறைவனது திருவருளை என்னேரமும் நினைந்துருகு. குருபாதம் எப்போதும் துதிசெய். உயிர்களுக்கிதமான வார்த்தைகளைப்பேசு. சத்தியவாழ்க்கையைக் கடைப்பிடி.

696. ஞானிக்கு, ஒரு முமுக்ஷு மோக்ஷத்திற்காக அதிதீவிரப்படுவதைக் கண்டால், ஜலமில்லாத கற்பாறையில் ஊத்தைக்கண்டது போலத் தோற்றும்.

697. பொருளாலும், உடையாலும், உணவாலும், ஒருவனுக்கும் பூரண திருப்தியை உண்டுபண்ண முடியாது.

ஆத்மஞானம் பெற்ற ஞானி தன்னனுபூதி வாயிலாக தன்னை யடுத்த அந்தர்முக மனமுடையவர்களுக்குப் பரிபூரண திருப்தியை செய்து வைக்க முடியும்.

698. குப்பையின் மேலுள்ளவனுக்கும், குப்பையே இல்லாத இடத்தில் உள்ளவனுக்கும், துர்வாடையின் துன்பம் இராது. குப்பையைப் பிரித்துப் பார்ப்பவனுக்குத்தான் துர்வாடையின் துன்பம் உண்டாகும். தேகாபிமானியான அஞ்ஞானிக்கும், அபிமானமின்றிய ஞானிக்கும் துன்பமில்லை. மத்தியிலுள்ள ஜிஞ்ஞாசுக்குத்தான் துன்பமுண்டு.

699. காய்ச்சிய பாலில் சிறிது புளித்த தயிர்விடுவதால், அப்பாலெல்லாம் தன்மயமாக்கிக் கொள்ளுகின்றது. பரிபக்குவ மனதில், குரு உபதேசம் செய்ய, அவ்வுபதேசப் பொருள் வடிவமாக சீடன் விளங்குகின்றான்.

700. சந்நியாசி, ஒருவருடைய சம்பந்தமுமற்றிருப்பதே பேரானந்தம்.

701. கடவுட் காக்ஷியுடையவரும், காக்ஷியில் தீவிர சிரத்தையுடையவரும், ஒழுங்கான மாறுபாடற்ற நல்முறையை அனுசரிக்க வேண்டும். இதுதான் உயர்ந்த மார்க்கம். இவர்களால் உலக மக்களுக்கு ஒரு பெரிய படிப்பினை உண்டாக்குகின்றது. சித்தத்தூய்மையால் எங்கும் நிறைந்த பரமானந்த கடவுள் விளங்குகின்றார்.

702. அப்பியாசிகள் கூடுமான வரையில் கண்டிப்பான முறைகளைக் கையாள வேண்டும். அதனால் மனம் சீக்கிரம்

சமாதானமடையும். இல்லையேல் அதிக தொல்லைகளையும், எல்லை கடந்த ஆசைகளையும் புகுத்து மனம் சீரழியும்.

703 உலகிலுள்ள சகல லௌகீக காரியங்களும், செய்ததையே செய்துவருதால் நன்றாக இருப்பதில்லை. அடிக்கடி மாற்றியமைப்பதால் நன்றாயிருக்கும் என்கிறார்கள் அது உண்மைதான். ஆன்மீக வாழ்க்கை அப்படிக்கல்ல. செய்துவந்த தியான விசாரங்களையே இடைவிடாது செய்து வரவர ஆனந்த மிகுதிப்பாடு உண்டாவதால், இத்தியான விசாரங்களை மாற்றியமைப்பது கூடாததாகும். இதனால் லௌகீக காரியங்களுக்கும், வைதீக காரியங்களுக்கும், முரண்பாடு உண்டு.

704. தெய்வ வழிபாடு சாந்தமும் நிராசையுமுள்ளவனுக்கு நல்ல பலனைத்தரும். மற்றையோருக்குச் சித்தத்தின் பக்குவத்திற்கேற்ப பலன் தரும்.

705. மாணவன் பள்ளியில் தேருவதற்கு எவ்வளவு ஊக்கங்கொண்டு வாசிக்கின்றானோ, அவ்வளவு கடவுளிடம் அன்பு பூண்ட ஊக்கமிருக்குமாயின் வெகு சீக்கிரமாக ஞானமடைய முடியும்.

706. வளையலோடு போன்ற சில தாழ்ந்த லோகங்களால் செய்து, பொன் முலாம் பூசின நகைகளை தங்க நகை போன்று, பாமரமக்களை ஏமாற்றித் துன்பத்திற்காளாக்குகின்றனர். இவர்கள் லௌகீக விஷக்கிருமிகள். போலியாகக் கண்மூடி சாதனஞ் செய்பவர் போன்று காட்டிக் கொள்ளும் சில போலிகளை ஞானியெனச் சிலர் பிரசாரம் செய்துவருகின்றனர். ஆனால், அப்பொய் ஞானிகள்

பின்னால் செய்யும் துஷ்கிருத்தியங்களைக்கண்ட பிரசாரகரும் அவர்கள் உள்ளடங்கிய பாமர மக்களும் ஏமாற்றமடைந்து துன்பமடைகின்றனர். இவர்கள் வைதீக விஷக்கிருமிகள்.

707. நீ சாந்தனென்பதை வாக்கால் சொல்வதைவிட நடையால் நடந்துக்கொள். அதுதான் சரியான படிப் பாகும்.

708. பற்றற்றவர்களுக்கு துக்கமேயில்லை. பற்றுள்ளவர் களுக்குச் சுகமேயில்லை.

709 மலையில்வாழும் மிருகங்கள் கூடத் தற்காப்பின் நிமித்தம் வேண்டியவகையில் ஆயுதம் போன்ற அவயவங் களை உடையனவாக இருக்கின்றன. சந்நியாசிகளுக்கு தங்கள் பாதுகாப்பிற்கு இரு பெரிய கூர்மையான ஆயுதங் கள் வேண்டும். **சாந்தம், விவேகம்** இவ்விரண்டால் சகல சத்துருக்களையும் ஜெயிக்கலாம்.

710. ஞானம் ஒன்றுதான் பூரணச் செல்வம். மற்றைய செல்வம் நீங்கிவிடும். ஞானபலமான முத்தி சுகந்தான் பூரண இன்பம். மற்றைய இன்பம் க்ஷணத்தில் நாச மாகும்.

711. செடிகள் தம் பருவ காலங்களில் அவசியம் பூக் கின்றன. ஆனால், அவைகளின் காய், பழங்கள் செய்யப் படும் பக்குவத்திற்கேற்றவண்ணமுண்டாகும். ஒருவனுக்குப் புண்யவசத்தால் கடவுளைப்பற்றிய நினைவு உண்டாகின்றது. ஆனால், அந்த நினைவை மோக்ஷபரியந்தம் சேர்ப்பிப்பது புருஷனது முயற்சிவலிவில் இருக்கின்றது.

712. மன அமைதியுள்ளவர்களுக்கு இகத்திலும் பரத்தி லும் சுகமுண்டு.

713. மனத்தூய்மையில் கடவுள் வழிபாடு எவ்வளவு அவசியம் என்பதை, தூய்மையைக் கடைப்பிடித்த வருக்கும், முத்தி விருப்பமுடையாருக்கும்தான் விளங்கும். **தூய்மையானமனம்** எப்போதும் திருப்தியாக இருக்கும்.

714. பசுவின் சாணம் சாணமாக இருக்கும்போது தொடாதவர்கள் விபூதியாகும்போது தொடுகின்றார்கள். தீய்மையுடையவனைக் கண்டு அஞ்சுகின்றவர்கள் அவனே இறைவன் வழிபாட்டால் தூய்மையடையின் சகலரும் விரும்புகின்றனர்.

715. மழை ஒரே பிரகாரமாகத்தான் பெய்கிறது. நிலத் தின் பக்குவத்திற்கேற்றபடி பலனைத் தருகின்றது. அப் பலன் மழையினுடையதன்று. இறைவன் கருணை ஒரே பிரகாரமாகத்தான் இருக்கின்றது. சீவன்கள் மனப்பக்கு வத்திற்கேற்றவண்ணம், பலனடையப்படுகின்றது. அப் பலன் இறைவனது குற்றமல்ல.

716. அநுமான் சுக்ரீவனுக்கு மந்திரியாக இருந்தபோது அவனது கௌரவமான மகிமைகள் ஒன்றும் வெளிப்பட வில்லை. அவ்வநுமான், **இராமலக்ஷ்மணர்கள் சீதை** இப் பரமேஸ்வரரோடு சேர்ந்து சேவை செய்யும்போதுதான் அவனது உயர்ந்த தன்மைகள் யாவும் வெளிப்பட்டன. மனம் உலகானுபவ விவகாரங்களில் உள்ளபோது அதன் தன்மைகள் ஒன்றுந் தெரிவதில்லை. அகமுகத்தான் ஆன்மா வைப்பற்றிய தியானத்தால் ஏகாக்ரமடையும்போதுதான் அதன் உயரியதன்மைகள் வெளிப்படும்.

717. மனக்கிலேசம் மகாதுக்கமென்பது, சாதனம் செய்பவர்களுக்குத்தான் தெரியும்.

718. கருமமே பொருளாகக் கொண்ட சிலவாதிகளும், ஆன்மா சரீரத்தினும் அன்னியமென்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனல், சரீர அபிமானத்தை விடுவது அவர்களுக்கு இஷ்டமில்லை. அதனல் ஜனன மரண சங்கடமும் விடுபடுவதில்லை.

719. பல பாகங்களான சூரிய கிரணங்கள் ஒன்று கூடும்போது கண்ணாடிவாயிலாக திரணங்களை எரிக்கின்றது. அங்ஙனம் கூடாது பிரிந்து நிற்கும்போது எரிக்கும் சக்தி அக்கிரணங்களுக்கில்லை. நானாவிஷயங்களில் பரவி நிற்கும் மனோவிருத்தியை ஏகவிஷயத்தில் செலுத்தும்போது அது அக்ஞானத்தைக் கெடுக்கும் சக்தி உண்டாகின்றது. அங்ஙனமின்றி விரிந்து விஷயங்களில் செல்லும்போது சக்தியற்று பிரயோஜனம் அற்றதாகின்றது.

720. பழத்தின் குணம் அம்மரத்தின் இலைகளிலும் விளங்கும். ஞானத்தின் பக்குவம் அச்சரீர மனங்களிலும் விளங்கும்.

721. சித்தத்திற்குத் தியானம் உணவாகக்கண்ட புருஷன் பாகிய உணவை விட்டாலும் தியானத்தை விட்டிருக்க மாட்டான்.

722. ஒருபுத்தகத்தின் உயர்வு அதன் வெளிப்பார்வைக்குரிய கட்டடத்தில் இல்லை. அதன் உள்ளுள்ள வாசகத்தின் உயர் நோக்கங்களை யனுசரித்து அப்புத்தகத்திற்கு உயர்வு உண்டு. ஒருமனிதனது உயர்வு அவனது வெளிப்பார்வைக்

குரிய வடிவத்திலில்லை. அவனது உள்ளுறை மனத்தின் தூயஞான எண்ணங்களையும் பொருத்து அம்மனிதனது உயர்வு உள்ளது.

723. சரீரமெடுத்தவன் எவ்வுலகத்தும் எவ்வாழ்க்கையிலும் துன்பமேயடைகின்றான். ஆனால், பிரித்துப்பார்க்கும் விவேகி எவ்வுலகத்திலும் எவ்வாழ்க்கையிலும் சுகமாகவே வாழ்கின்றான்.

724. சகல லோகங்களிலுள்ள சகல பதார்த்தங்களிலும் அகங்காரத்தைப்போல தாழ்ந்த பதார்த்தம் வேறொன்றில்லை.

725. உறக்கமின்றியவர், மிக்க பிணியாளர், அதிகப் பசியுடையவர், அதிகமாக உணவு உட்கொண்டவர், அதிக ஆசை, கோபம், லோபம் உடையவர், பெண்ணாசையுடையவர், சரீர அழகை எண்ணுபவர், பாமர துர்ச்சன சேர்க்கையுடையவர், ஆகிய இத்தீய கூட்டுறவுடையவர்கள் எவ்வுளவுகாலம் தியானம் செய்தாலும் சாந்தி அடைய முடியாது.

726. மிதமான உறக்கம், மிதமான உணவு. நிராசை, பொறுமை, உபேக்ஷை, உடையவரும், பெண்ணாசையை அறவே விட்டவரும், சரீர சுத்திமாத்திரம் கொண்டு அழகை எண்ணாதவரும், சத்சங்கமுடையவருமாகிய முமுக்ஷுக்கள், தியானஞ் செய்வார்களாயின் சீக்கிரம் சாந்தி பெறுவர்.

727. கல்வியறிவில்லாதவர்களும், பரமேஸ்வரனை அன்பு உவந்து வழிபடும்போது, அவ்வழிபாடு சுருதி சம்மதமும் ஆன்றோர் கூறிய முறையும் ஆகிறது.

728. பிறப்பதும் இறப்பதும் இறைவனது லீலையாக இருக்க, இவைகளைத் தம்முடையதாகவும் தம்முடைய இஷ்டப்படி வாழமுடியுமென்றும் எண்ணி ஏமாந்து, இறைவன் தாண்டவ லீலையில் மரணமாகும் ரோதனம் செய்கின்றனர். இது எவ்வளவு அறியாமை! உண்மையையறிவது வெகு கடினமாகின்றது.

729. அனேக சமஸ்கார வாசனைகளால் மனம் சலிப்பதைக்கண்டு தியானம் செய்பவன் கலங்க வேண்டாம். தீயைக்கண்ட யானைக்கூட்டம் போல, அவ்வாசனைகள் யாவும் திடமான ஞானசம்பந்த பக்தி ஆவேசத்தால் அடியோடு எரிந்து சாம்பலாகும்.

730. கனவில் கண்ட ஐஸ்வரியம், நனவில் பயன்படாதது போல், ஞானநனவில விழித்தவனுக்கு நனவின் பொருள் பயன்படாது.

731. பக்தன் பிரமனது திவ்யநாம உருவபாவனையாலும், சரீரங்களைப் பரமனுக்கு அர்ப்பித்திருத்தலாலும், சரீர தாபமற்ற சுகியாகின்ருன். ஞானி, தான் அகண்டானந்தனென்பது பிரத்யக்ஷமாதலாலும், சரீரம் முன்னும் பின்னும் தானல்லாதபடியாலும், சரீர தாபத்தைத் தானடைந்ததாக அவனுக்கு அனுபவம் வருவதில்லை.

732. ஞானி, தாபத்தையும், சரீரத்தையும் தனக்கன்னியமாந்தன்மையால் பரமசாந்தமடைகின்ருன். ஆனல், பக்தன் சிறிது மனந்தடுமாறும்போது தான் தபிப்பதாகத் தோன்றும். அதனல் பக்தி நழுவாது. இவனும் ஞானத்தால்தான் பரமசாந்தி பெறவேண்டும்.

733. இரண்டு ஆடுகள் தலையை முட்டி இடிப்பதற்குமுன் பிரதமத்தில் பின்புறம் கொஞ்சம் சென்று பிறகுதான் வேகமாக வந்து தலையை இடித்துக்கொள்ளும். மனம் தியானம் செய்கிறவர்களுக்கு ஆரம்பத்திலேயே சமாதானமாக சாந்தமடையமாட்டாது. முதலில் மூடனினும் மூடனைக வெகு சஞ்சலமடைந்து கீழேவிழுந்து பிறகுதான் சீக்கிரம் முன்னேற்றமடைந்து நன்மையைப் பெறும். அதுவரையிலும் பொறுத்திருத்தல் வேண்டும்.

734. சாது சங்கமும் சாஸ்திர சமஸ்காரமும் மோக்ஷத்திற்கு ஒரு சாதனமென்ருலும், இவை உணவிற்குச் சககாரிகளான பருப்பு, உப்பு போன்றவையாகும். அன்னம் போல தியான விவேகமே நேரே சாதனமாகும்.

735. பிஞ்சு காய் நாளாகப் பழமாக மாறும். பழம் தன் முடிவில் நாற்றமுடைய அழுகலையே தோற்றுவிக்கும். நல்லவர்கள் தாங்கள் எவ்வளவு உயர்ந்த அனுபவமுடையராயினும், பிறரிடம் தான் பெரியானென்று கூறமாட்டார்கள். நான் சிறியவன், இன்னும் நன்மையைப் பெறவில்லை, பூரணமாகவில்லை யென்றே சொல்லுவர்; நினைப்பர். அதனுல் அவர்கள் ஒவ்வொரு நாளும் நலனில் முன்னேறிக் கொண்டேயிருப்பர். சில மதியீனர்கள் சிறிது பயனடைந்ததும் தாங்கள் மகான்கள் என்று கூறிக்கொண்டு வீணிலுழலுவர். அதனுலவர்களுக்கு நாள் பாழடைந்தவராய் மூடரினும் மூடராவர்.

736. பெண்ணுசை, பொன்னுசை யிரண்டையும் வைத்துக் கொண்டு மோக்ஷமடைய இச்சிப்பது, பூட்டிட்ட கதவைத்

திறவாது வேகமாக உள்ளே செல்ல இச்சிக்கும் அவிவேகியின் செய்கையைப் போன்றதாகும்.

737. பாம்பின் உறவு யாருக்கும் சுக ஏதுவாகாததுபோல பெண், பொன்னின் அபிமானமுடைய விவேகி, அவிவேகி யாவருக்கும் சுக ஏதுவாகாது. ஆனுல், பாம்பின் விஷம் ஒரு ஜென்மத்திலேயே முடிந்துவிடும். பெண், பொன் விஷய வாசனையாகிய விஷம் அனேக ஜன்மங்களைக் கொல்லும்.

738. வேம்பின் காற்றும், நிழலும் மனிதனுக்கு நல்ல சுகத்தைத் தரும். ஆனுல், அதனின் இலை முதலியவைகள் நேரே கசக்கி முகரவோ ருசிக்கவோ தகுதியாய் இராது. துக்கமாக இருக்கும். இறைவனின் சிருஷ்டியிலுள்ள இவ்வுலகில் அபிமானமற்று அவன் திருவருளை இவ்வுலகின் மூலமாகப் பெறும்போது பரம சௌக்கியமடையலாம். அவைகளில் அபிமானித்து முழுகும்போது பரம துக்கமாக முடியும்.

739. எட்டிப்பழத்தைப் போன்றவர் தாமதர். வேப்பம் பழம் போன்றவர் இராசதர். நெல்லிக்கனி போன்றவர் சாத்துவிகர்.

740. தரையில் முதலை மற்றைய ஜந்துக்களால் வெல்லப் பட்டு அதனுல் துன்பமடையும். நீரினுள் எவ்வித துஷ்டப் பிராணிகளையும் வென்றுதான் சௌக்கியமடையும். முமூக்ஷு உலக பாமரரோடு கூடிய காலத்து, அவர்களால் பல கிலேசமடைவன். பிரமானந்த சமுத்திரத்தில் மூழ்கி தானுக மிஞ்சியபோது சகலரையும் தன் வடிவமாகக்

கண்டு மயக்கமற்றவனுய் மூடாது கிலேசமொன்றும் தன்னைத்தாக்காத நிலையில் நிலைத்து சுகியாக வாழ்வன்.

741. கண்ணுக்குக் கண்ணிமையினும், சீவனுக்கு ஈஸ்வரன் அதிக அன்பான பாதுகாப்பாளர் என்பதை நல்ல பக்தன் உணருவான்.

742. வறுமை, சம்பத்து யாவும், பக்தனுக்கு மிகப்பிரிய மானவைகளாகத் தெரியும். ஞானிக்கு யாவும் ஆன்மா வாகவே தோன்றும்.

743. பாமரர்களுக்கு யாது சுகமோ, அது விரக்தனுக்கு துக்கமாகும். அது ஞானிக்கு உபேக்ஷைக்கு உரியதாகும்.

744. வாடின பயிர்களுக்கு மழை பெய்வதால் உண்டாகும் திருப்தி போன்று, நிராசையுடையவனுக்கு குருவின் உபதேசம் திருப்தியைத் தரும்.

745. சிறுகிணறு கலக்கின் சேருக முடியும். கடலை எவ்வளவு கலக்கினும் சேருகாது. அல்பமதியும் ஆசையுமுடையவர் சுவல்பதுக்கம் வந்தபோதும் அல்பசுகம் வந்தபோதும் கலங்குவர். அறிவுடைய சாந்த மகான்கள் எவ்வளவு லாபநஷ்டம் வந்தபோதும் கலங்கார்.

746. அகில்கட்டையை எவ்வளவு பெரிய தீயால் எரிக்கினும், தீயமணம் உண்டாகாது. நல்ல ஞானியருக்குப் பிறர் எவ்வளவு தீங்கியற்றினும் நன்மை செய்வாரன்றி அவர்களுக்குத் தீங்கை நினையார்.

747 ஜலத்தினுள் எவ்வளவுகாலம் இருப்பினும் பாசி வேர் கொண்டு பூமியில் ஊன்றி நிற்காது. அறிவீனர்களுக்கு

ஞானமார்க்கங்களைப் போதிப்பினும் நன்ருக மனத்தில் பதியாது. சிவக்கிருபையும் புண்யமும் உள்ளவருக்குத்தான் அது பலன்தரும்.

748 எந்ததேசத்துக் குயிலாஞலும் சத்தமிடும் இனிமை ஒரே பிரகாரந்தான். எந்ததேசத்து ஞானியாஞலும் ஞானனுபவம் ஒரே பிரகாரந்தான்.

749. சந்நியாசி, பொன், பெண் என்ற இரண்டையும் அடியோடுதள்ளி, அவைகளின் வாசனையையும் நாசம் செய்வதால், மிக்க சாந்தியும் அதனல் தடையின்றி பிரஹ்மானந்தானுபவமும் உண்டாகின்றது.

750. எத்தனை எத்தனை நீத்தாயகிலத்தைப் பரஞ்சுடராய் எரிக்குஞ்சோதி அத்தனை அத்தனைத் தோன்றுமென நூற்கருத்தை அதிகாரி அடிக்கடி சிந்திக்கவேண்டும்.

751. கருமிக்கு இவ்வுலகமும் விண்ணுலகமும், தனிவிரக்தனுக்கு விண்ணுலகமும், முமூக்ஷுவிற்கு ஞானமும், ஞானிக்கு மோக்ஷமும் பயனுகும்.

752. ஞானமும், வைராக்யமும் நிர்ப்பயமானவை. மற்றவையனைத்தும் பயத்தோடு கூடினவை.

753. உலகிலுள்ள சகல பொருள்களின் விசித்திர உருவமும் மனத்தின் பரிணுமமேயாகும். ஆனதால், **விவேகி,** வேருெரு பொருளைப் பொருளாகக் கொண்டு பார்க்கவோ ருசிக்கவோ திடசங்கல்பஞ் செய்யமாட்டான்.

754. சகல ஜக கற்பனைக்கும் தான் ஆதாரமென்றபோது வேறெதை மனம் நாடிச்செல்லும்?

755. நாட்டின் உயர்வு உண்மையான தியாக உணர்வுடைய மக்களிடம் உண்டு. ஞானத்தின் உயர்வு உண்மையான நிராசை, தியானம், விவேகம் உடையாரிடமுண்டு.

756. சிறுவர்கள் தங்கள் சரீரத்திற்கொவ்வாத உணவையும் விளையாட்டையும் இச்சிக்கின்றனர். அவர்கள் இச்சையின் வண்ணம் விடுவதால் சிறுவர்கள் கெடுவார்களல்லவா? மனமும் நன்மைக்கு எதிராக விஷய எண்ணங்களையும், தீய கூட்டுறவையும் நாடும். அதனிச்சைப்படி விடுவதால், **விவேகியர்** நல்ல பலமான மோக்ஷசாம்ராஜ்யம் அடையமுடியாது.

757. தீ விழுந்த இடத்தில் விறகுதூள் இல்லையானல், தீ தானே எரிந்து அணைந்துவிடும். ஞானியராய் பரம சாந்தராயுள்ள பெரியாரை பிறர் கோபிக்கின், கோபித்தவரே எரிந்து துன்பமடைய வேண்டுமே ஒழிய, ஞானிக்கு ஒரு துன்பமும் உண்டாகாது.

758. பசி உள்ளவன் அன்னத்தை விரும்புவது போலவும், வெய்யிலில் தபிப்பவன் நிழலை விரும்புவது போலும், சமுசார தாபமுடையவன் மோக்ஷானந்தமடைந்து சுகமாகும் பொருட்டு, தியானத்தையும் விவேகத்தையும் விரும்புகின்ருன்.

759 ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமகிருஷ்ணர் போன்ற மஹான்கள் காட்டிய ஞானவழியே முமூக்ஷுக்களால் கருதத்தக்கது. மற்றைய தந்திர மார்க்கங்களெல்லாம் ஒழுங்கீனமானவைகளாதலால் நேரே சாதனமாகாது, பரம்பரைச் சாதனமாகும்.

760. தியானத்தைச் செய்யும் அதிகாரிகள் உணவையும், வாக்கையும் அளவாக உபயோகிப்பதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

761. சுமங்கலிக்குள்ள உயரிய கற்பு முதலிய நற்குணங்கள் யாவும் நாயகனைச் சார்ந்தே உண்டு. நாயகனில்லாத அமங்கலிக்கிக் குணங்களில்லை. மாயைக்குரிய சர்வ சத்திகளும், பரமாத்மாவை ஆஸ்ரயித்தே உண்டு. பரமனை யன்றி மாயைக்கு ஒரு குணமுமில்லை.

762. மாயைக்குரிய விசித்திர குணங்கள் யாவும் கூடி ஸ்திரீ புருஷ சரீரமிரண்டிலும் உன்னத நிலைபெற்றிருக்கின்றது. மற்றவைகளில் இவர்களிடத்திலிருக்கும் சக்தியைப் பார்க்கிலும் குறைந்துள்ளனவேயாகும்.

763. மண்ணும் தண்ணீரும் புனிதமானவைகளே. ஆனால் அவைகள் ஒழுங்கின்றி கலக்கப்பட்டால் துர்நாற்ற சேராகி முடியும். அதுபோல ஆணும், பெண்ணும் நல்லவர்களே! இவர்கள் காம இச்சையால் சம்பந்தப்பட்ட போது மிகப்பாபிகளாகி கீழே தள்ளப்பட்டவராகின்றனர்.

764. சகல ஆடம்பரங்களோடு அயோத்தியில் இருந்த போதும், யாதுமின்றி ஆரணியத்தில் வதிந்தபோதும், இராமன் இராமனேயன்றி வேறல்ல. அக்ஞான சம்பந்த தேகாதிகளின் அபிமான காலத்தும், அவை நீங்கி தியாகியானபோதும், ஆன்மா ஆனந்த வடிவமேயன்றி வேறல்ல. எப்போதும் முத்தன்.

765. சிலர் தாங்கள் கற்ற கல்வியையும், அல்ப விவேகத்தையும் போற்றி வருகின்றனர், பிறரறிய டம்பமாகக் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் உள்ளவாறு ஆனந்த நிலையை அடையவில்லையென்பதை அவர்கள் மனத்தின் பிரதிநிதியான முகம் விளக்குகின்றது. சொல்லும் அப்படியே உள்ளது.

766 வாளறுப்பவன் நூல்வழி மனதை எவ்வளவு செலுத்துகின்ருனே, அம்பு எய்பவன் குறியின் வழி எவ்வளவு நுண்மையாக மனதை செலுத்துகின்ருனே, அவ்வளவே பரமாத்மாவின்கண் தியானநிலையில் மனதை ஒருவன் நிறுத்தினல் போதும்! அவன் பரமானந்த முக்தனேயாவன்.

767. பக்தியுடையவன் தியானம், சீக்கிரம் முன்னேற்ற மடைகின்றது. ஆனல் அவனும் மிக்க வருத்தப்பட்டு வாசனையைத் தள்ளவேண்டும்.

768. இன்று ஆதி ஆண்டவர் நக்ஷத்திர தினம். பரமமான மேலோர்கள் பரமேஸ்வரனைக் கொண்டாடும் தினம். ஆண்டவரின் சகுண நிர்குண விஷயமாகச் செய்துவரத், தியான விவேகங்கள் எவ்வளவு நாம் கவனத்திற்கொண்டு அனுஷ்டிக்கின்ருேமோ அவ்வளவு முன்னேற்றமடைய லாம்.

769. தியானம் செய்யும் நண்பர்கள், குடியானவன் விதைத்த விதைக்கு பக்குவஞ்செய்துகொண்டு காலம் பார்த்திருப்பதுபோல காத்திருக்கவேண்டும். இறைவன் திருவருளால் அவசியம் எண்ணிய முக்தி திண்ணமாய்க் கிட்டும்.

770. ஜகத் சொப்பனமென்று வாயால் வெட்கமில்லாமல் கூறிக்கொண்டிருக்கவேண்டாம். நடையில் அனுபவி. அப் படியே நடந்து பிரரிடம் தெளியச்செய்.

771. ஆறுநிறைய ஜலம் ஓடினலும், காகம் தனது அலகினல் சிறதளவேதான் ஜலம் குடிக்கும். உலகெலாம் சப்தாதி

விஷயமானுலும் தன்சம்பத்து அநந்தங்கோடியானுலும் தான் புசிப்பதும் உடுப்பதும் சிறிதளவுதான் இறைவன் ஆணை. இதையறியாத மாந்தர் கொள்ளும் மனக்கோட்டை அளவிடாதனவாகின்றன. அம்மனத்தால் துன்பமும் அள விறந்தன.

772. நெய்க்குடத்தில் எறும்புகள் சேர்ந்து நிற்றல்போல (மொய்த்தல்), ஞானியின்பால் குணமெல்லாம் நல்லனவாக வந்துசேரும்.

773. மாயைக்கடப்பது மனதைக்கடப்பதுதான். மனம் கடந்த தன்வடிவ ஆனந்தானுபவம் உண்டாயின் மனம் கடந்ததாம்.

774. செடிகள் உணவோடு மனிதரது அன்பையும் விரும்பு கின்றதுபோல, மனது, ஞானத்தின் பொருட்டு தியானம், விவேகம், கடவுள், குரு இவர்களது கிருபை, இவைக ளோடு வைராக்யம் என நிராசையையும் விரும்புகின்றது.

775 மூடனும், விஷயங்களை விட்டவரையில் சுகமுண் டென்று தெரிந்தோ தெரியாமலோ சொல்லுகின்றுனென்ருல், விவேகி எல்லாம் விடுவது, நல்லவற்றுளெல்லாம் நல்ல தாகும்.

776. **“வேண்டாமையன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை யாண்டும் அஃதொப்பதில்”**
— (குறள்)

ஒருபொருளையும் விரும்பாமைபோலச் சிறந்த செல்வம் இவ் வுலகத்தினுமில்லை, எவ்வுலகத்தினுமில்லை.

777. வேடன் கையிலகப்பட்ட பக்ஷி தீனிக்கலைவதுபோல் போகத்தின் வசமானவன் ஆரண நெறியில் செல்வதாகும்.

778. செல்வமுடையவனுக்குத் தரித்திரமில்லை. நல் மனைவி, நல்ல புத்திரருடையவருக்கு குடும்பக் கவலை யில்லை. சத்துருயின்றிய அரசனுக்கு சஞ்சலமில்லை. கல்வியில் தேர்ந்தவன் சபையைக் கண்டு அஞ்சுவதில்லை. இவர்களும், இவர்களொழிந்த ஏனைய துக்கிப்பிராணி களும், பிறப்பின் துன்பம், இறப்பின் துன்பம், ஜரையின் துன்பம், வயோதிகத்தின் சுபாவமான தளர்ச்சிமிகுதி யான துன்பம் ஒருக்காலும் விட்டு நீங்காது; அனுபவித்தே தீரவேண்டும். இதற்கு இவர்களிடம் ஒளஷதமில்லை.

779. மோக்ஷ காரியங்களில் ஒருவனுக்கு எவ்வளவு பிரதி பந்தங்களுண்டோ, அவ்வளவு பிரதிபந்தம் லெளகீக காரியங்களிலுமுண்டு. ஆனால், யாருக்கு எதில் அதிக பிரேமையிருக்கின்றதோ அதிலுண்டாகும் தடைகள் லேசாகத் தோற்றும்.

780. பாமரர்கள் நூல் கல்லாமலும், நல்லோர் கூட்டுற வில்லாமலும், தங்கள் நடையால் ஆசை அதிகத்தால் இச்சித்த பொருள் கிட்டுகிறதில்லையென்றும் கிட்டினாலும் அனுபவிக்கமுடிகிறதில்லையென்றும் கூறுகின்றார்கள்.

781. மரணத்தின் பின் இந்த ஜீவன் என்ன கதியடையு மென்று அனேகர் வினவுகின்றனர். இது அவ்வளவு நல்ல வினாவாகாது. தான் வாழ்ந்து வரும் இப்போது சுகமாக வாழ நடையுடையவராய் கற்றுக்கொள்வது சாலச் சிறந்ததாம்.

782. மணல்மேட்டில் நடப்பவன் படும் துன்பம் போன்றது உலக வாழ்க்கை. வெய்யிலில் தவிப்பவன்,

குளிர்ந்த தடாகமும் சோலையும் நிறைந்த இடத்தை நாடிச் செல்வதைப் போன்றது ஞான சாதன வாழ்க்கை.

783. கடவுள் சார்பற்ற குணமும், யோகமும், தியானமும், மணமற்ற மலர் போன்றது.

784. விஷயப்பற்றுடையவர் அரக்கர்; விஷயப்பற்றற்றவர் தேவர்.

785. நல்ல கருமங்களைப் பல பிறவிகளில் செய்துவந்தவனுக்குத்தான் தெய்வ சம்பந்தமான பக்தி திடப்படும். அவையில்லாமல் பக்தியில் திடமுண்டாகாது.

786. பசு, கறுப்பானாலும் பால் வெண்மைதான். மனிதன் தாழ்ந்தஜாதி யென்றாலும் அவன் உண்மை வடிவ ஆத்மா; பரமாத்மாதான். பேதம் குறைந்தால்தான் சுகம்.

787. "இனிது இனிது ஏகாந்தமினிது." (ஔவை)

788 நகரங்களுக்கு வெகு தூரத்திலுள்ள சிறிய கிராமங்களில் வாழும் ஏழைமக்களுக்கு, அதிகமாக உலக ஆடம்பரங்கள் தெரியாது. அதனால் அவர்கள் குறைந்த செலவில் தங்கள் குடும்பங்களை நடத்துகின்றனர். அதற்கேற்ற வண்ணம் மனவமைதியுமிருக்கிறது. தியானம் செய்கின்றோம்! வேதாந்த தத்துவ விசாரம் செய்கின்றோமென்றவர்கள் அவ்வேழை மக்களைப்போல, தாழ்ந்த நடையில் ஈடுபடுவார்களாயின் சீக்கிரம் மனவமைதி யடைவர்.

789. எட்டி மரம், சந்தன மரம் இரண்டும் மரமானாலும் எட்டியைத் தீயிலிடின் கசப்புண்டாம். சந்தனத்தைத் தீயிலிடின் வாசனையுண்டாம், நல்லோர் தீயோர் இரு

வரும் மனிதர்தான். ஆனால் இவ்விருவரில் நல்லோர் வாழ்க்கையில் நலம் பெற்று நற்குணம் பெறுவர். தீயோர்தம் வாழ்க்கையை திருந்தப்பெற செய்வோமென்று எண்ணி அவர்களுக்கு நன்மார்க்கம் கூறின், பிறழ்ந்த புத்தியால் தமக்கும், பிறருக்கும் தீமையே விளையும்படி செய்வர்

790. சராசரங்களில் காணும் சகல விசித்திரங்களும்; ஆன்மாவின் சத்தியின் அல்ப தேசத்தில் உண்டாகின்றன வென்பதை ஞானி அறிகின்றான். அதனால் அவன் கலங்குகின்றதில்லை.

791 மோக்ஷ மார்க்கங்கள் அனேகமென மனித சமூகமும் நூல் சமூகமும் உரைப்பதால், இவைகளில் எது நன் மார்க்கமென ஒரு அதிகாரி துணியவேண்டின், அது இறைவன திருவருளால்தான் சிறந்ததொன்று, அவனுக்கு நிச்சயமாகக் கிட்டும். ஆனதால் அதிகாரி இறைவனை இடையீடின்றி பிரார்த்தித்தல் வேண்டும்.

792. பேரின்ப நிலை யாதொரு பற்றுக்கோடுமின்றி இருத்தலால் அது என்றும் நித்தியமானது. மற்றவை யாவும் பற்றுக்கோடு உடையனவாகலின் அவை யாவும் அழியும் நீர்மையனவாம்.

793. மனம் உண்டானல் துன்பம்; மனம் நசித்தால் ஆனந்தம்.

794. கரையற்ற சமுத்திரம் அளவுக்குட்பட்டதாயின், எப்பொருள்தான் அகண்டமானதாகும். யாவும் பரிச்சின்னங்களே. பரிச்சின்னங்கள் அழியும். அழிவதும் துக்கம் ஆனதால், ஆன்மனையொழிந்து யாவும் துக்கம். ஐயோ பாவம்!

795. ஒருவன் பொன்னாசை அடைந்தபோது, கழுத்துக்குக் கயிறு கொண்டவனானான். பெண்ணாசை கொண்ட போது, கயிற்றை முடிந்தவனானான். மக்கள் வீடு முதலிய உலகவாசை கொண்டபோது, நன்றாக சுருக்கிட்ட உயிர்ப் பிணமானான்.

796. கோபத்தால் முதலில் ரத்தம் கெடுகின்றது. பின்னர் அஜீரணம் உண்டாகின்றது. பின்னர் ஏதாவதொரு வியாதி உண்டாகின்றது. இது தூலமான பயன். கோபத்தால் மனத்தில் ஒரு நல்ல **விவேகமுமற்று** பரபரப்பான சலனமும், சில மணி நேரம் மயக்கமுமுண்டாகி மனம் இராஜஸமே வடிவமாகின்றது.

797. சாத்துவிகந்தான் **மனத்தின் திண்மை.** இதை சம்பாதிப்பது சாதகனுக்குச் சிரமந்தான். என்றாலும் உறுதியான வரன்முறை கொண்டவர்களுக்குக் கஷ்டமில்லை.

798. தியானத்தின் மிகுதியால் மனம் இறைவனது **திருவருளைப்** பெறுகின்றது. அதனால் பெண்ணாசை, பொன்னாசையை விடுவது சுலபமாகின்றது.

799 ஆகாயத்தைப் பிசைவதால் பலனொன்றுமில்லை. அதனோடு கைக்கு வலி மிகுவதுமாகும். அநித்ய உடல் வாழ்க்கையை சதமென்று அதன்வசம் சார்ந்து வாழ்பவனுக்கு, நற்பலனொன்றுமில்லை. அதனோடு மனத்திற்கு நீங்கா கவலையே மிகும்.

800 உலகமெங்கும் நிறைந்து மறைந்துள்ள இறைவனது **அருட்சத்தி** தியானமும், ஏகாந்தமுமாகிய இவைகள் எப்போதும் சேவிப்பவர்களுக்குத்தான் விளங்கும்.

801. கடவுளின் திருவருள் நோக்கத்திற்குப் பாத்திரனான பிறகே, ஞான வழியில் பலன் தரும். எங்கும் பரந்து நின்ற இறைவன் மஹா பக்தனுக்கு அப்போது எல்லா இந்திரியங்களுக்கும் விளங்குகின்றார்.

802. சிறு குழந்தையின் முன் தான் யாதொரு தின்பண்டமுமில்லாமல் அன்பு சுரந்த முகத்தோடு கையை நீட்டினால் போதும்; குழந்தை சீக்கிரம் வந்து தாயைக் கட்டிக் கொள்ளும். ஆனால், அன்பற்றவர் எவ்வளவு தின்பண்டம் வைத்துக்கொண்டு அறைகூவி அழைத்தாலும் வராது ஓடி விடும். இறைவனும் அன்புள்ள பக்தனொருவன் அவிழ்ந்த அன்போடு பணிந்து மனமாற அழைக்கின், இருதயத் திருந்த வண்ணம், பக்தன் விரும்பிய வண்ணம், ஆவிர்ப் பவித்து பரமமான சுகந்தருவன். அன்பற்றவர் எத்தனை ஆடம்பர பூசை செய்தாலும் அணுகவேமாட்டான்.

803. "ஸ்ரீ பூஜ்யபாதாள் ஜயந்தி" இன்றைய தினம். அவரது திருவருளால் அவர் காட்டிய ஞானநெறி, பத்தி நெறி, கரும நெறி யாவை என்பதைக் கைக்கொண்டு வாழ் பவருக்கு எவ்வகையிலும் முக்தி உண்டு என்று கூறப்படும்.

804. ஒரு பாம்புப் பிடாரன் வீட்டில் எலி ஒன்று வளர்ந்து வந்தது. அந்த எலி வளர வளர, பல் முதிர்ந்தபின் பாம்பு பெட்டியை துளைசெய்து உள்ளே நுழைந்து உணவுப் பொருள்களைத் தேட ஆரம்பித்தது. மாறாக அங்குள்ள சர்ப்பத்தின் வாய்க்கு இரையாகி இறந்தது. குமார பருவம் முதல் வளர்ந்து யவ்வனபருவம் வந்தபின் விஷயப் பாம்பை சுகமாகக் கருதி அதைத்தேடி அலைந்து அதனை அடைந்து அதன் வயமாகி மாய்கின்றனர்.

யாரோ ஒரு உத்தமன் விஷயப்பாம்பின் வழி அடைகின்றதில்லை.

805. கடவுள் நிலையில் மனமாற நிறைந்து அனுபவித்த ஆனந்த மனம், வேறொன்றை நினையாததோடு வாக்கும் அதையே பேசும். இந்த நிலையை எப்போது மற்றையர் எய்துவர்!

806. ஜீவனைப் பரநிலையில் சேர்ப்பதுவே சரியான ஜீவ காருண்யமாகும். மற்றவை தாழ்ந்தவையும் சரியான ஜீவ காருண்யமாகாது.

807. என்னிடத்தில் உலகில்லை, சரீரமில்லை, யாவும் மித்தை, சொப்பனம், நானே சுயஞ்ஜோதி, சுத்தானந்த அகண்டப் பொருள், எனத் துணிந்த தீரன் அவசியம் ஒழிந்தானந்தமடைகின்றான்.

808. இனி அடுத்த க்ஷணத்திலும் நமக்காக வேண்டிய காரியமில்லை, ஒரு பொருளும் வேண்டியதில்லை, என்று எப்போது உண்டாகின்றதோ அப்போது மனம் அடங்கி விடும், அதுவே சமாதியாகும்.

809. உழைத்தவன் உடல் உறுதி பெறுகின்றது. மனத்தில் நின்று வருத்தி வாசனையை விட்டவன், புத்தி திடமாக ஆனந்தத்தில் அழுந்துகின்றது.

810. ஜீவர்கள் அகண்ட பொருளானதால் அவரவர்கள் அஞ்ஞான திசையிலும் ஓர் அகண்டமான இடம், பொருள் ஏதேனும் ஒன்றைக் கண்டால், வெகு சந்தோஷம் கொள்ளுகின்றனர். இதனால் இயற்கையிலேயே அகண்டம் ஆனந்தம் தனது நிஜ சொரூபமாகின்றது அல்லவா?

இன்று ஆண்டவர் குருபூஜை தினம். ஆண்டவரது வைராக்யமும், ஞானப் பயிற்சியின் திடத்துவமும், உறுதியாக நிற்றலும் அப்பெரியாரது நாட்கொண்டாட்டத்தால் நாமும் கொண்டு முன்னேற்றமடைவோமாக.

811. தினந்தோறும் கண்ட காக்ஷியும், உண்ட போகமும், எக்காலமும் அருவருப்பின்றி, அனுபவித்துவரும் ஜீவர்களுக்கு, சித்தம் தூய்மையடையின், அவ்வளவும் மாற்றமடைகின்றன.

812. பலவகை காரியங்களில் ஈடுபடாமலும், ஒன்றிலே நின்று நன்ருக வேலே செய்வதாலும் மனம் நல்ல பயிற்சி பெறுகின்றது. ஆனல், லக்ஷியத்திற்கேற்றபடி பயிற்சியும் பலன் தருகின்றது.

813. பூரண திருப்தி, ஆன்மாவில் ஒழிந்து மற்றையதில் உண்டாகாது.

814. காலங்களுக்கேற்ப மனம் பல விகாரமடைகின்றது. ஆனல் ஆகாரங்களை ஒழுங்காகவும், லேசாகவும் புசித்து வந்தோமானல் சத்வ ஆகாரங்களால் எல்லாக் காலமும் நல்ல பயிற்சிக்குறியதாகும்.

815. மரங்களின் வேர்கள் எவ்வளவு நீளமும் ஆழமுமாகச் செல்லுகின்றனவோ, அவ்வளவு செழுமை மரத்திற்குண்டு. தியானத்தில், மனம் எவ்வளவு தூரம் நுண்மையாக பரவத்துவில் சென்று நிற்குமோ, அவ்வளவு ஞான சக்தியால் பேரின்பம் விளையும்.

816. பாமரர்களுக்கு விஷயபோகங்களில் பிரியம், பண்டிதர்களுக்கு விசித்திர கவிகளில் பிரியம், பக்தர்களுக்குப்

பகவானது கல்யாண குணங்களில் பிரியம், ஞானிகளுக்கு ஒன்றிலும் பிரியமில்லை.

817. தலை குனிந்து வணங்கல், கை குவித்து வணங்கல், கீழ்விழுந்து வணங்கல், முதலிய எல்லாவற்றினும் மனமாரப் போற்றி, மிக்க பிரமையோடு தந்தையாகிற அருட்பெரும் வள்ளலென்று அவிழ்ந்த அன்பு கொண்டவருக்கு இறைவன் சீக்கிரம் அருள் புரிகின்றூர்.

818. மனத்தளர்ச்சியுள்ளவர்களுக்கு ஒரு நன்மையும் கிட்டாது.

819. தினந்தோறும் ஏதேனும் ஒரு வேளையில் 2 மணி நேரம் பேசாமல் மௌனமாயிருப்பது மிக்க நலன்தரும்.

820. மனத்தின் நிவிருத்தியே மாயையின் நாசம். மனத்தின் பிரவிருத்தியே மாயையின் இருப்பாகும்.

821. பாலில் நெய்யுண்டு நெய்யுண்டு என்று கூறிக்கொண்டிருத்தலால் நெய்கிடைக்காது. பாலைக் காய்ச்சி தயிர்செய்து கடைந்து வெண்ணெயை எடுத்து காய்ச்சின பின் அல்லவா நெய் கிட்டும்? நான் பிரஹ்மம் நான் பிரஹ்மம் என்று வாயால் சொல்லிக்கொண்டு ஏட்டை மாற்றி மாற்றிப் படிப்பதால் பிரஹ்மமாக முடியாது. மூவேடணையையும் அநித்யம், அனன்மா என்றபிமானம் விட்டு, குருவை யடைந்து சிரவணம், மனனம், நிதித்யாசனஞ் செய்து, வாசனாத்திரயங்கள் நசித்தபோது நாம் பிரஹ்மமென்பது பலத்தோடு கூடியதாகும்.

822. தூக்கங்கெட்டவன் சோம்பலால் மயங்குவதுபோல, விஷயசுகத்தில் புத்திகெட்டவன் அதாவது ஞானதிருஷ்டி

யில் நிலைபெற்றவன் ஞான போதையால் ஓர் ஓர் கால் உலக விவகாரத்தில் மயங்குவன்.

823. எண்ணெயற்ற தீபம்போல ஞானியின் விஷயவாசனை நசிக்கின்றது.

824. வளர்ந்த பணைகள் நன்றாக வளர்ந்து நிற்கவில்லையானால் கூட்டத்தில் வளைத்து கட்டிவைப்பதுபோல, அதிகாரியால் அடக்கிய மனம் நன்றாக அடங்கவில்லையானால், பரமேஸ்வரனது திருவடியாகிய கூட்டத்தில் அம்மனத்தைக்கட்டி மிக பணியவைக்கின் அடங்கும்.

825 பௌத்தபகவான் உயர்ந்த ஞானியும் விரக்த புருஷனுந்தான். அவரது மரபினர் பின்னாளில் அனாவசியமான புரட்சியைக்கிளப்பி உண்மையை கெடுத்துவிட்டனர்.

826. மரங்களின் பலபாகங்களிலும் பழங்கள் எவ்வளவு குறைந்தபாகமோ அதுபோல உலகத்தவரில் ஞானவழி செல்பவர் குறைந்த அளவே ஆகும்.

827. புலிகளில் நல்லபுலி கெட்டபுலி என்பதான பாகுபாடு கிடையாது. யாவும் துஷ்டப்புலிகள்தான். விஷய ஆசையுடையவர் நல்லவர் தீயவரென்பதில்லை. ஆசையுடையவராக இருக்கும் பரியந்தம் துஷ்டர்தான்.

828. அசுர சுபாவத்தால் சிலர் விரக்தர்போலவும், ஞானிகள்போலவும், காணப்படுகின்றனர். ஆனால், அவர்களது அந்தியபலன் சாம்பலில் உள்ள நெருப்பின் உஷ்ணம்போல் கெடுகின்றது.

829. ஞானி ஒருவன் வியாதி, மரணம் இவைகளை அன்பன் எனக் காண்கின்றான்.

830. பெண்ணுசையும் பொன்னுசையும் எமனது கைகள்.

831. ஞானியின் சகவாசம், கனிநிறைந்த மரங்களும், நற்சுவை ஜலம் நிறைந்த தடாகமும், பசும்புல் நிறைந்த பூமியும், குளிர்ந்த காற்று வீசும் நந்தவனத்திற்கு ஒப்பாகும்.

832. கண்ணுடியின் அழுக்கு, பிரிதிவிம்பத்தைபெருது. மனமும் விஷய இச்சையுடையதாய் இருக்கும்போது ஆன்மானந்தத்தை பெருது. விஷய ஆசை விட்டபோது அதாவது இச்சித்தவிஷயம் கிடைத்தபின் அதன் ஆசைநீங்க சுத்த கண்ணுடியில் பிரிதிவிம்பம்போல ஆன்மானந்தம் மனதில் பிரிதிவிம்பிக்கும்.

833. அசுத்தமனம் கள்வர் குடிகொண்ட கிராமம் போன்றது. சுத்தமனம் அநுசூயையின் கிரகம் போன்றது.

834. அன்னத்தின் பக்குவம் பாகம் செய்பவன் புத்தி செய்கையை யனுசரித்தது. மனதின்பக்குவம் அதிகாரியின் முயற்சியும் குணங்களையும் அனுசரித்துள்ளது.

835. சமாதியில் பரிபக்குவம் அடைந்த மனந்தான் பூரண அஹிம்சையுடைதாகும்.

836. காலையில் பிரார்த்தனை, பின்னர் தியானம், பின்னர் காலைக்கடன், பிறகு ஜபம், பிறகு தியானம், பிறகு ஆகாரம், பிறகு அன்போடு கடவுளைப்பாடுதல், பிறகு தியானம், பிறகு நூல்படித்தல், பிறகு ஆகாரம், பிறகு சிரமபரிகாரம், பிறகு 1 மணிநேரம் சும்மா இருத்தல், பிறகு சத்சங்கசகவாசம் பிறகு மாலைக்கடன், பிறகு தியானம், பிறகு உணவு, பிறகு 1 மணி நேரம் நல்லெண்ண நினைவோடு இருத்தல், பிறகு நித்திரை. இம்முறைகள் ஆத்மசாதகர் அனுஷ்டிக்க வேண்டும்.

837. ஆசையுள்ளவனுக்கு, எல்லாம் மயக்கவுணர்வாகவே இருக்கும். ஆசை நீங்கினவனுக்கு யாண்டும் தெளிந்த தரிசனமேயாம்.

838. ஞானியின் சத்துவமனம், மணற்கேணி ஜலம் போன்றது. மூடனது ஆகந்துக சத்துவமனம், மண்நிறைந்த கேணியின் தெளிந்தஜலம் போன்றது.

839 பயிரின் வளப்பத்திற்கேற்ப பலனுண்டு. மனிதனது மனத்தின் குணத்திற்கேற்ப வாழ்க்கையில் பலனுண்டாகும். ஆனதால் மனிதன் சத்தியத்தை நாடுவது உண்மைவழி.

840. நங்கூரம் போடப்பட்ட படகு, எவ்வளவு தள்ளினும், அசையுமேதவிர குறித்தமார்க்கம் செல்லாது. ஆசையில் அழுந்திய மனம் ஞானவழியில் எவ்வளவு முயிற்சிக்கப் பட்டாலும் குறித்த பேரின்ப வாழ்க்கையை அடைய நன் மார்க்கமாகிய சமாதி முதலிய வழியை பின்பற்ருது.

841. நற்சீலரான மஹான்களுக்கு எங்கும் எப்போதும் பரமானந்தம்.

842. திறந்தவெளியில் வைத்த தீபம்போல் சதா விஷய பரிணமமுடைய மனம் ஆன்மாவில் நிலைக்காது.

843 சிறுவர்கள் எங்கு என்ன விளையாட்டை ஆடினாலும், அவர்கள் வீட்டின் தாயின் அன்பையும் உணவையும் மறப்ப தில்லை. தியானத்தில் சுகம் கண்டமனம், என்னகாரியம் செய்தாலும் தனியிடத்தையும் ஆன்ம திருஷ்டியையும் மறப்ப தில்லை.

844. உலகச்சுவையாகிய சுமையை இச்சித்தவனுக்கு,

பேரின்பச்சுவை கிட்டாது. பேரின்பச்சுவை அடைந்தவனுக்கு உலகச்சுவை வேண்டியதில்லை.

845. அந்தக்கரணத்தூய்மை, பேரின்பம் விளையுமட்டும் வேண்டும். கரணத்தூய்மை இறைவனது தியானம், ஜபம், பிரார்த்தனை இவைகளால் அவசியம் உண்டாகும்.

846. ஜபம் செய்கின்றவர்கள், ஜபமணியை நாமத்தோடும் நாமத்தின் லக்ஷியத்தோடும் ஜபிக்கவேண்டும். மனம் மாறினல் ஜபத்தை நிறுத்தவேண்டும். இதில் ஞாபகமாக இருந்தால் சீக்கிரம் நன்மைதரும்.

847. தூலமான எந்த புஷ்பவாசனையும் நற்கந்த இனிமையுடையதல்ல. சுத்தசத்துவ சின்மாத்திரவாசனை பரம சுகமானது: என்று என்னைச் சுற்றிய நண்பர்களுக்கும் உண்மையாகக் கூறுகின்றேன்.

848. மனவழுக்கு வெறும் மௌனத்தால் போகாது. இடைவிடாமல் தியானத்தைச் செய்தால் போகும்.

849. இப்போது யுத்தம் என்று கேட்டு திடுக்கிடுகின்றவர்கள், சரீரம் நான் என்று அபிமானத்தால் அல்லவா அலறுகின்றூர்கள்? பாவம் என்ன செய்வார்கள்!

850. தெய்வச் செயலை உள்ளபடி தன்கண்ணும் பிரவற்றின் கண்ணும் காணும் புருஷன் மஹாத்மா ஆகின்றுன்.

851. பெண் காதல் மிகக்கொடியதென, நூல்களும், பெரியோர்களும் நிறைய கூறுகின்ற வழியை நன்கு கண்டவன், ஞான வழியில் செல்லும் பிரம்மசாரி ஒருவன்தான். மற்றையரெல்லாம் பேச்சளவிலேயே பேசி முடிப்பார்.

852 நான் என்ருல் அவன், இவன் உண்டு. இப்படி விகல்பம் வரும்போது அடியோடு ஆன்மபாவனை போய் விடும். நான் என்ற எண்ணத்தையே அடியோடு விட வேண்டும்.

853. மரணமும், பிறப்பும், நோயும், வாட்டமும், பூரிப்பும், வளர்ந்தாலும் குறைந்தாலும் சரீரத்தின் இயற்கை தரும மென்று உணர்ந்தால், பின் இதனுள் சுகமேது? எல்லாம் துன்பமயமே ஆகும்.

854. உலகத்தோடு ஒத்துழைக்கும் அன்பன் நாட்செல நாட்செல தெய்வத்தோடு ஏகனுகின்ருன். உலகம் என்பது உயர்ந்தோர்!

855. அகங்காரமாகிய பெரிய யானை, சமாதியாகிய பெரிய குழியிலன்றி, வேறு உபாயத்தால் அடங்காது.

856. நடுப்பகலில் மணற்பூமியில் செல்லும் புருஷனுக்கு குளிர்ந்த சோலை கிடைப்பின் எவ்வளவு இன்பம் உண்டாகுமோ, அதுபோல் சமுசார துக்கத்தில் தாங்க முடியாத கவலையுற்ற அதிகாரிக்கு, ஒரு ஞான குரவர் கிடைத்துவிட்டால், பரம சந்தோஷம் உண்டாகும்.

857. இன்று நடராஜப் பெருமான் திருநடனகாக்ஷி. ஆனல், என்றும் நடிக்கும் அவன் கோலம், ஆனந்தமென தமது இருதயசபைக்கண் காணுத மனிதரை என்னென்று உரைப்பது?

858. பூரண சுதந்தரம் உடையவன் பரமான்மா என்பதை, உள்ளபடி ஜீவன் உணர்ந்துவிட்டால், எப்போதும்தான்

அகந்தையற்று பேரின்பப்பேற்றையே கைக்கொள்ளுவான்.

859. கார் இருள், இரவிலும், தான் சுயம் பிரகாசமாக விளங்கியும் அதனை அறியாது மயங்கும் அவிவேகிகளை என்னென்பது?

860 ஜலமே இல்லாவிட்டாலும், அதிக ஜலம்விட்டாலும் பயிர்கள் நாசமடைகின்றன. மனிதன் உணவு இல்லா விட்டாலும், அதிக உணவு உட்கொண்டாலும் நாசம் அடைகின்றான். ஆனதால் இதமும் மிதமுமான ஆகாரத்தை உட்கொண்டால், சரீர நலம், மன நலம் இரண்டும் நன்றாய் இருக்கும். அதனால் அப்பியாசம் செய்ய நலமாகும்.

861. மலர் மணம் மாறும்போது துர்வாசனை வீசும். மனம் நற்குணங்களை விட்டபோது தீயகுணங்களை கைக் கொள்ளப் பார்க்கும். ஆனால், நல்லோர் நற்குணங்களை விடவேமாட்டார். விட்டாலும், தீய குணங்களை எள்ளவும் கொள்ளமாட்டார். பிள்ளைப் பூச்சியைப்போல இருப்பார்.

862. கற்கண்டு எத்தனை வகையாக மாற்றப்பட்டாலும் தன் தீஞ்சுவையை விடாது. ஞானிகள், எவ்வளவு பிறரால் துன்புறுத்தப்பட்டாலும், அவர்கள் எல்லா வகை யாலும் பிரஹ்மானந்த களிப்புடையரே ஆவார்.

863 சகம் தன்வடிவமென்றும், மற்றைய மனமுதலியவை களில் பிரதிபிம்பித்துக் காணப்படுகின்றது என்று தெரிந் தால், பின் மனம் பூரண நிராசையைப் பெறும் இன்பம் மிகும்.

864. நலனெல்லாம் ஒன்றுகூடிய பிறவி **மனிதப்பிறவி** ஒன்றுதான்.

865. தூல உடல், சூக்கும உடல் இரண்டும் பந்த ஏதுவானாலும், தூல உடல் **அபிமானமே** மகா துக்கம். தூல உடல், அபிமானம் நீங்குமாயின் நட்டு எடுக்கப்பட்ட போல்ட் ஆணியைப்போல் அகந்தை முதலிய சூக்கும தத்துவங்கள் தானே நின்றுவிடும்.

866. பெண், பொன் இரண்டபிமானத்தின் துக்கம் மகா கொடியது இவ்விரண்டிற்கும் சமானமான கொடிய பொருள் வேறொன்றின்று. இவைகளை விட்டவனுக்குண்டாகும் பேரின்பத்திற்குச் சமானமான சுகமும் வேறொன்றின்று.

867. மனத்தில் சர்வத்திலும் போதுமென்று உண்டாகும் உபசாந்தியே மஹா செல்வம்.

868. ஆகாயம் காணுதற்கு பொருட்டு மலை உச்சிக்கு போக வேண்டியதில்லை. பரமாத்மனைக் காண்பதற்கு எங்கும் போகவேண்டாம். **உபசாந்த மனமே** வேண்டும்.

869. பாமர மக்கள் பணத்தை செல்வம் என்பர். பண்டிதர்கள் கல்வியை செல்வம் என்பர். கருமிகள் நற்கருமமே செல்வம் என்பர். பக்தர்கள் இறைவன் அருளே செல்வம் என்பர். ஞானிகள் பிரமக்ஞானமே செல்வம் என்பர்.

870. புத்தியின் தெளிவுக்கும் அகநோக்கத்திற்கும் ஏற்ற வண்ணம் புறத்தும் இருக்கும்.

871. யாவும் சின்மயம் தன் வடிவமென அனுபவிப்பவனுக்கு ராகத்துவேஷம் உண்டாகாது.

872. கர்வம்கொண்ட காளையும், தனக்குப் பிரிய யஜமானனைக் கண்டால் அடங்கிவிடும். மகாதுஷ்ட மனமும் தனக்கதிஷ்டான பரமனை நாடும்போது தானே சாந்தியடையும்.

873. உடலில், உலகில் என்ன மாறுதலுண்டானாலும், நீ என்றும் ஒரு தன்மையனானவன் நான் என்று பாறையைப் போல் திடமாயிரு. இறைவன் எல்லாம் தனது திருவுள்ளப் பாங்கின்படி நடத்துவான்.

874. மனதை ஆன்மா அல்லது பரமேஸ்வரன் இவ்விரண்டில் யாதேனும் உன் பக்குவத்திற்கேற்ற ஒன்றில் நிலைக்கச் செய். இதுவே தானம். இதுவே தவம். இதுவே சுகம்.

875. ஞானிக்கு மாத்திரம் ஆயுள் புல்லின் நுனியிலுள்ள பனித்துளியொத்த தெரியும்.

876. சன்மார்க்க சபை என்பது அழகான கட்டிடமும் அலங்கார புத்தக ஆலயமும் ஜனக்கூட்டமும் உடையது அல்ல. இரண்டொருவரானாலும் மனத்தகத்து சுத்தமாய் இருப்பதுவே சன்மார்க்க சபையாகும்.

877. மனிதன், சர்வசக்தியும் வாய்ந்த ஒரு பொக்கிஷமானவன். ஆனால், அவ்வளவு சக்தியையும் பெண், பொன் என்ற இரண்டில் திணித்து நிலை குலைகின்றான்.

878. சகலமும் மாயாமயம் எனத்தேர்ந்த மனதுக்கு எப்போதும் ஆனந்தந்தான்.

879. ஜலத்தில் கற்பூரம் போன்ற சுத்தபதார்த்தங்கள் சேர்ந்தால், புழுக்கள் கெடும். சாணம் போன்ற மலினப் பொருள் விழுந்தால், அசுத்த புழுக்கள் உண்டாகும். மனதில் ஆன்மவாசனை உண்டாகிவிடின், அசுத்தவாசனை மாண்டுவிடும். ஸ்திரி, தனவாசை உண்டாகிவிடின் அசுத்த அந்தக்கரணமாகி மகா துக்காலயமாகிவிடும்.

880. ஒருவகை ஏழைமக்கள் பசியின் கொடுமையாலும், வியாதியின் மிகுதியாலும், சாரமற்ற ஒருவகை மண்ணைத் தின்று உடலை அடியோடு வியாதி மயமாக்குகின்றார்கள். பணம் படைத்தவர்களில், சிலபேர் பணவாசையின் மிகுதியால் சாரமற்ற தூர்த்தரை சினேகராக்கிக்கொண்டு அவர்கள் கொண்ட போகங்களையும் சுகமெனக்கருதி மயங்கி, அதனால் சகல புருஷார்த்தமும் இழந்து, தங்கள் அருமைத்தோழனை பணத்தோடு மடிகின்றனர். பாவம்! இவர்கள் எப்போது துக்கத்தினின்று வெளியேறமுடியும்?

881. முள் மரத்தின் நிழல் நிழலாகி குளிர்ச்சி தந்தாலும், அங்குநின்று செல்பவர் கால்களில் முள் தைக்காமலிருக்காது. செல்வம் சுகம் போன்றதாயினும், செல்வம் சுகம் அன்று எனச்சொல்பவருக்கும், அல்லது கருமம் முடிய செல்வம் விட்டவருக்கும், மனத்தின் கவலையைப் பெறுக்கும்.

882. பசித்த நற்காலத்தில் உண்ட நல் உணவு உடலில் நல்ரசமாதல் போல, மோக்ஷ தாகமுடைய நல்ல உத்தம முமுக்ஷுவின் மனத்தில் நல்ல ஆசாரியர் செய்த உபதேசம் அவசியம் ஞானம் உதயமாகி மோக்ஷானந்தம் பிராப்தமாகும்.

883. எல்லையற்ற ஆகாசமும் நக்ஷத்திரங்களும் தன்கண் ஏகதேசமெனக்கண்டவனுக்கு யாதும் விசித்திரமல்ல.

884. கற்பகத்தருவும் காமதேனும் காமிகளுக்கு மிக சிரேஷ்டமானது என்கின்றனர். ஆனால், அதனால் அடையப்பட்ட சுகம் இந்திரனுக்கும் சாசுவதமாக இல்லை யென்று சுருதிகளால் அறிகின்றோம். ஆதலால், இவ் வுலகப் பொருள் பெண்ணினும் விசேஷமொன்றும் காண வில்லை. இவ்வுலக விஷயம் துக்கமாக முடிவதுபோல அவ்வுலக விஷயமும் துக்கமாகத்தான் முடிகின்றன. இவ்வேதுவால் விவேகிகள் யாண்டும் எவ்விடத்தும் விஷய போக இச்சை கொள்ளார்கள். நிராசையை விரும்பு வார்கள்.

885. மதுரப்பொருள் எல்லாம் ஆன்மலாபம் பெற்ற வனுக்கு மதுரமாக இருப்பதில்லை.

886. பொற்பாண்டம் உடைந்தால் பொன்னாகும். மண் பாண்டம் உடைந்தால் என்ன ஆகும்? ஞானிகள் செல்வ வளம் கெட்டாலும் ஞானிகளேயாவர். அஞ்ஞானிகள் செல்வவளம் கெட்டால் என்ன ஆகும்?

887. மண் சுவரை எவ்வளவு ஜலம் விட்டலம்பினும் மண் மண்ணாகவேதான் இருக்கும். வேறு பளிங்காகாது. மூடனான அஞ்ஞானிக்கு எத்தனை ஞானோபதேசம் செய் தாலும் அவனது மடமையும் இராகமும் விலகாது.

888. உள்ளதை உள்ளபடி அறிவது ஞானத்தின் இயல்பு பிறழ்ந்து உணருவது அஞ்ஞானத்தின் இயல்பு.

889. மனிதருக்கு அழகு, ஞான நூல் அறிவு பெறல். கற்றதன் அழகு, ஒழுக்கமுடையவனுதல். ஒழுக்கமுடையவனுக்கு அழகு, தனித்திருத்தல். தனித்திருப்பவனுக்கு அழகு, மனத்தை என்னேரமும் ஆன்வாவில் நிலே பெறச் செய்வது. நிரந்தர தியானிக்கு அழகு, பரமானந்த பரமசீதள தன் வடிவாக ஆதலாகும்.

890. மழை மிகுதியால், மழை வெள்ளம் திரண்டுவிட்டால் சகல சருகு குப்பை கூளம், அழுக்கு எல்லாம் ஒரே திரளாகத் திரண்டு ஓடி விடும். பின்னர் நதி வெகு சுத்த நிர்மலமாகிவிடும். பரிபக்குவ மனதில் இறைவன் திருவருள் வெள்ளப்பிரவாகம் பொழிந்தோட ஆரம்பித்துவிட்டால் முன்னுள்ளனவும் தற்போது உள்ளனவுமான சகல துர்வாசனேகளேயும் நீக்கி பரம சுத்தமடைந்து பரமானந்த பிராப்தியுண்டாகும்.

891. யமனேவிட பெண்ணுசை, பொன்னுசை மகா கொடியது.

892. கனிந்த பழம் எவ்வளவு பாதுகாக்கப்பட்டாலும் மரத்தில் நிற்காது விலகிவிடும். பரமான்மாவில் கனிந்து ஐக்கிய ரசமுண்ட மனம் உலகில் எவ்வளவு திருப்பி இழுக்கப் பிரயத்தனஞ் செய்தாலும் உலகியல்பை பற்ருது உடனே விட்டுவிடும்.

893. மனவழுக்குள்ளவர் செய்யும் பாக்கிய ஆந்தர பூசைகளே கடவுள் ஏற்கார். மனவழுக்கற்றவர் அவ்விறைவனது உயரிய திருநாமங்களே இரண்டொரு தடவை அன்போடு ஓதினுல் போதும். இது பரமேஸ்வரனுக்குப் பரம திருப்தியைச் செய்யும்.

894 மனிதர் தாமதம் நிறைந்தபோது, கிருமிகீட சுபாவமடைகின்றனர். இராசதம் நிறைந்தபோது, மிருக சுபாவமடைகின்றனர். சாத்துவிகம் நிறைந்தபோது, தெய்வ சுபாவமடைகின்றனர்.

895. ஒரு சத்திய புருஷன் தான் மாத்திரம் அநுஷ்டிப்பதில் தடையின்றி சத்தியவான் ஆகலாம். சத்தியத்தை உலகுக்கு புகட்ட வேண்டுமென்று எண்ணிச் செய்வானாகில், நாளடைவில் அசத்தியவானய் விடுவான். தான் மாத்திரம் அநுஷ்டிக்கும் போது ஒழுங்காக விரதமும் முடியும். இதன் சக்தியால், அநேகர் கடைப்பிடித்து ஒழுகவும் முடியும். இவனைக பிரசாரம் செய்வது அடாது.

896. பூமியின் கீழிருக்கும் சொர்ண அணுக்கள் தம்மை யாருக்கும் பிரசாரம் செய்வதில்லை. அடங்கிய குண சாதுவானவன் தன் ஞானத்தை பிரசாரம் செய்யவேண்டியதில்லை.

897. மிருதுவான பஞ்சணையிற் படுத்துறங்குபவர், கடினமான இலௌகீக விஷயங்களை மனத்திற்கொண்டு அல்லல் படுகின்றனர். கடினமான மண் கல்லுகளில் படுத்துறங்குபவர் அலௌகீக பரமானந்த ஆன்ம நிலையில் என்றும் மனதை நிலைபெறச் செய்துள்ளவர் எப்போதும் சுக வாழ்க்கை யுடையவராவார்கள்.

898. பெண்ணுசையை விட்டவன் பேரின்பம் அடைகின்ருன். பொன்னுசையை விட்டவன் புதிய மனிதனுகின்ருன். ஒரு ஆசையும் இல்லாது விட்டவன், ஒப்பற்ற புருஷனும் உவமையற்ற சுகசொரூபனு மாகின்ருன்.

899. சாலிவாகனன், ஆதிஷேசனது அம்சமாகப் பிராமணப் பெண்வயிற்றில் பிறந்தவனுய் குலாலன் வீட்டில் வளர்ந்தவனுனுலும், அவனது உயரிய இராஜ கெம்பீரம் போகவில்லே. அங்குள்ள குலால மக்களோடு சிறு வயதிலேயே விளையாடும்போதும் ராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து விளையாட்டே வினையாக முடிந்து, பெரிய அரசனுனுன் என்ருல், மனிதனுல் ஆகாதது ஒன்றுமில்லே. சர்வ வல்லமையும் மனத்திலுள்ளது.

900. அப்பியாசி என்பவன் முடியவில்லே என்றும், முடியாது என்றும் கனவிலும் எண்ணக்கூடாது. உலக காரியங்கள் வேண்டுமானுல் முடியாது போகலாம்! மோக்ஷ காரியம் ஒருக்காலும் முடியாததல்ல.

901. உடலில் அதிக உணவும் திமிருமுடைய நெஞ்சத்தினர்க்கே காம இச்சை மாதர் மேலுண்டாகும். மாதருக்கு ஆடவர்மேல் உண்டாகும். ஆகாரக் குறைவும் அகங்காரக் குறைவும் உண்டாகும்போது தானே காம இச்சை விலகும். ஆனுல் பேரின்பச்சுவை யுண்டவருக்கே காம இச்சை அடியோடு போகும்.

902. தீய நெறி நரகம். தூய நெறி சொர்க்கம். சும்மா இருத்தல் சுகம்.

903. பாமரர்களுக்கு சும்மா இருப்பது துன்பம். பண்டிதருக்கு பேசாதிருப்பது துன்பம். பெரியோர்களுக்கும், ஞானிகளுக்கும் பேசாதிருப்பதும் சும்மா இருப்பதும் சுகம்.

904. கல்வியினும் உயர்வு ஒழுக்கம். ஒழுக்கம் உடையவன், உண்மையை அவசியம் தேடுவான். உண்மை புத்தியுடையவன் அவசியம் மோக்ஷமடைவான்.

905. பெண் மயக்கம் ஒழிந்தவர்கள், பொன்மய மன முடையராவர். அவர்கள் உள்ளந்தான் எப்போதும் சாந்த சுகம் பெறும். தியானமென்னும் உயரிய சாதனம் அவர்களுக்கு நல்ல பலனைத் தரும்.

906. செல்வர்களுக்கு செல்வம்போல் தியானிகளுக்கு மனத்தின் தூய்மையே பரம செல்வம்.

907. சிவன், விஷ்ணு, பிரம்மா, சத்தி, கணேசன், முருகன், சூரியன் என்பன யாவும் ஒரே இறைவனது நாமங்களேயாகும். ஒன்றென அறிபவர் உய்வர். பலவென அறிபவர் பொய்யர்.

908. ஆத்மாவிற்கு ஆனந்தம் சுபாவம். உலகத்திற்குத் துக்கம் சுபாவம். மனம் எதை பற்றுகிறதோ அந்த நிலையைப் பெறும்.

909. **ஞானியின பிராரத்தம்** :- மரங்களின் வளர்ச்சிக்கு வேர், ஜலம், ஆக இரண்டும் காரணம். வேர் அறுபட்டவுடன் ஒரு காரணம் கெட்டது. ஜலம் உள்ள பரியந்தம் பச்சென்று இருக்கும். சில காலம் இருந்து, தானே உலர்ந்துவிடும். ஞானியின் சரீரபோக பிராரத்த விருக்ஷத்திற்கு, அஞ்ஞானமும் கருமமும் காரணம். ஞானத்தால் அஞ்ஞானம் கெட்டுவிட்ட பிறகும், பிராரத்தம் இருக்கின்ற வரையில் சரீர போகம் கூடும். பிராரத்த கருமம் நசித்தவுடன் சரீரத்தோடு போகமும் நசிக்கும்.

910. மலரணையின் படுக்கையும் மேல்உப்பரிகையில் வாசமும் செல்வத்தோடு இருந்து களிப்பெய்தவும், மனைவிமக்களோடு உண்டு களித்துவாழ்வதும், ஆகிய இவை அனைத்தும்

பாமரருக்கு உண்டென்ருல், இவைகளால் உண்டாகும் சுகம் சுகமாவது எப்படி? இவையனைத்தும் ஞானிக்கு, நாய் அருந்தி விட்ட உச்சிஷ்டமேயாக விளங்குகின்றன.

911. கோபத்தால் உடல் கெடும், மனம் தபித்து நிதானம் கெடும், ஈஸ்வர பாவனை கெடும், ஆன்ம பாவனை கெடும், தவம் கெடும், ஆனதால் மனமே! எல்லாவகையிலும் கோபம் மஹாசத்துரு.

912. ஏழைகள் பொன்னிற்கு வசப்படுவர். பிரபுக்கள் போகத்திற்கு வசப்படுவர். பண்டிதர் புகழிற்கு வசப் படுவர். பக்தர்கள், பரமனடிக்கு வசப்படுவர். ஞானிகள், ஒன்றிற்கும் வசப்படாது மனம் இந்திரியம் யாவையும் தன்வசமாக்கி வைத்திருப்பர்.

913. சாந்தம் உடல்நலம்தரும்; மனமகழ்ச்சியுறும். ஈஸ்வரபாவனை, ஆன்மபாவனை அதிகரிக்கும்; தவம் மிகுதிப்பெறும் சர்வதா நல்விவேகம் பிறக்கும். அதனுல், நல்ல ஏகாக்கிற முண்டாகி, சமாதியும், பிரம்மானந்தமும் லபிக்கும். சாந்தம், முமுக்ஷுக்களுக்கு அதிக அவசியம் ஆகும்.

914. ஒரேநாமத்தை, இடைவிடாமல் சிரத்தையோடு ஜபிப்பவருக்குத்தான், நாமஜப பலன் தெரியும்.

915. பிணியாளன் தன் தேகத்திலுள்ள நோய் விலகக் காண்பானுயின், எவ்வளவு சந்துஷ்டி உண்டாகுமோ, அதை விட ஞானி பதின்மடங்கு தன்தேகம் நீங்குவதைக்கண்டு சந்தோஷிக்கின்ருன். தேகம் இருக்கும்போதே இந்த நிலையை ஞானி அனேகதடவைகளில் அனுபவித்து வருகின்ருன் என்பது அவனுக்கே விஷயம்.

916. பகைமையும், சினேகமும் பேத திருஷ்டியில்தான் உண்டு. யாவும் இறைவன் என்ற சமநோக்கில், சகல பேதமும் போய் பரமானந்தம் விளையும்.

917. ஞானநிலையில், யாதும் பொருளல்லாதனவாயும் தான் ஒன்றே சச்சிதானந்தமாக உள்ளதாகவும் விளங்கும். ஆனால், யாவும் தானான தன்மயநிலையே பரம சுகமாகும். இதில் இராகத்துவேஷமே இல்லை. பரமானந்தம்தான் இதன் பலன்.

918. மாமரம் எல்லாம், ஜாதி ஒன்றானாலும் புளிப்புள்ள மரம், தீஞ்சுவை பழங்களை உண்டாக்காது. தீஞ்சுவையுள்ள மரம் புளிப்புள்ள பழங்களை உண்டாக்காது. மனிதர் எல்லாம் ஒன்று என்றாலும், ஒருவரது சுபாவகுணங்கள் மற்றையருக்கு பொருத்தமுடையதாகிறதில்லை. இதனால்தான், ஞானிகளின் குணங்களும் வேறுபாடுடையதாகின்றன.

919. விறகை, சிறு தீயில் இட்டால் தீயை அணைத்துத் தானும் துர்வாசனை உடையதாகும். அதே விறகை, பெரும் தீயிலிட்டால் பஸ்மமாகும். மனதை, விஷய சமூகத்தில் சேர்த்தால் விஷய இயல்பும் கெடும்; மனமும், அவைகளின் சங்கத்தால் மலினவாசனையைப் பெறும். அதேமனம் பிரஹ்மத்தில் நிலைத்தால் பிரஹ்ம சொருபமாகிப் பேரின்ப நிலைமையைப்பெறும்.

920. தியானிப்பவர், ஒரு நாளைக்கு ஒரு வேளையிலாவது தியானத்தை நழுவவிட்டால் அது பெருங்கேட்டை விளைவிக்கும். மீண்டும் தியானம் செய்ய மனமறுக்கும். அதோடு விடாது அந்த வேளையில் ஏதாவது பயனற்ற காரியங்களைச் செய்ய, பேச ஆரம்பிக்கும். இந்த வீண்விவகாரம் பசுமரத்

தாணிபோல் பதிந்து மஹா ஆயாசத்தையும் துன்பமும் தரும்.

921. தன்னையறியும் நெறியே அறம். சச்சிதானந்த வஸ்துவே பொருள். தன்னில் மகிழ்வதே இன்பம். தேகாதிகளில் அபிமானமற்று இருப்பதுவே வீடு.

922. ஆன்மாவை, ஒழிந்த எப்பொருளும் மனத்திற்கு இசைந்த சுக வஸ்துவல்ல. எல்லாம் அநித்தியமும் துக்கமும் அசுத்தமும் வாய்ந்தவையேயாம். இவ்வுண்மை எப்புண்ணிய மனத்திற்கு விளங்குமோ அம்மனம், வெகு விரைவில் ஆன்மாவில் நிலைக்கும். அப்போது பரமசாந்தியும் பயமற்ற நிலையையும் பரமானந்தமும் பெறும்.

923. அதிகஆசை, அதிக கவலை முதலிய துற்குணங்களும் தீயைப்பற்றிய குப்பைபோல், சற்சங்கமுடையாருக்கு ஒழிந்துபோம்.

924. உலகவிவகாரங்களில், செல்லவிடாதே மனம் மனித சரீரமான பாத்திரத்தைப் பெற எவ்வளவு தவம் செய்துள்ளது என்பது தெரியுமா? இவ்வளவு உயர்ந்த பிறவி எங்குமில்லை. ஆனல், எத்தனை துன்பங்களை அடைய நேரிட்டாலும், நித்திய சொரூபத்தில் நிலைக்கச் செய்வதும், அநித்திய பதார்த்தத்தினின்றும் விலக்கும் திருஷ்டியே உனக்கு எப்போதும் இருக்கட்டும்.

925. பரமானந்தமான நிருவிகல்ப நிலையில் மனம் பற்றிவிட்டால், எவ்வளவு உன்னதமென்றாலும் உலகிலுள்ள ஆடம்பரங்களை மனம் பற்றாது. அன்றியும் மனம் என்னேரமும் ஆன்மாவில் நிலைப்பதும் ஆன்மாவைப்பற்றி விசாரிப்ப

தும் ஆன்மாவைப் பாடுவதுமாக மூழ்கி பரம சௌக்கியம் பெறும்.

926. யாவும் ஊழ்வினை என்றுகூறி சோம்பலடையாதே? சோம்பல், மனத்தின் திண்மையை கெடுக்கும். எப்போதும் முயற்சி செய்; நன்முயற்சி செய். தீயவைகளை அறவே விடு; தீய நினைவு செய்கையாகி விடும். நீ, எப்போதும் சுகமாக இருக்க நல்ல கருமங்களைச் செய்.

927. மனத்தூய்மை இல்லாதவன் பேரின்பம் வேண்டுவது நபும்சகன் புத்திரனை இச்சித்தது போலாகும்.

928. மரத்தின் வேர் அழுகினல் பிறகு மெல்ல மெல்ல நாளடைவில் மரத்தின்மேலுள்ள இலை காய் முதலியவைகள் காய்ந்து உதிர்ந்துவிடும். ஞானிக்கு ஞானத்தால் அஞ்ஞானம் கெட்டுவிடும். பிறகு நாட்செல்லச் செல்லபிராரத்தம் புசித்துத் தீர்ந்துக்கொண்டே வந்து, ஜனன ஏதுவான கருமங்கள் (ஆகாமிய கருமம்) அடியோடு நாசமடையும்.

929. சுகம் உனக்கு எவ்வளவு பிரியமோ, அவ்வளவு துக்கமும் பிரியமாயிருக்கட்டும். அதனுல், இவ்விரண்டிற்கும் அப்பாற்பட்ட **பரமசுகம்** தடையில்லாமல் எப்போதும் அனுபவமாகும்.

930 முடவனைவிட, நொண்டி பாதகமில்லை என்றது போல, பாமரரைவிட பண்டிதர்கள் பாதகமில்லை. ஆனுல், நொண்டியைவிட பண்டிதர் அதிக மானிகளாக் காணப்படுவதுதான் மிகப்பரிதாபம். அதனுல், மிகுந்த கிலேசம்அடைகின்றனர்.

931. ஏற்கனவே இயல்பாகப் பரிசுத்த இருதயத்தில்தான் ஆன்மா **ஆனந்தமயமாக** விளங்குகின்றது. ஆனுல், அவி

விவேகிகள் ஏராளமான அபிமான குப்பைகளைக் கொண்டு குவித்துத்தான் தடுமாற்ற மடைகின்றனர்.

932. அன்பில்லாதவன் எவ்வளவு அன்னமூட்டி வளர்த்தாலும், குழந்தை அரோக திடகாத்திரனுக இருக்கமாட்டாது. அகங்காரமுள்ளவன் எவ்வளவு ஞானுப்பியாசங்கள் செய்தாலும் அபரோக்ஷ பிரஹ்மக்ஞானம் பிரதிபந்தமின்றி உண்டாகாது.

933. சன்மார்க்கத்தில் நன்ருக ஒழுகி வந்தவர்கள் உலக ஆடம்பரங்களை அடியோடு விட்டவராவார்கள். அவர்கள் மனம், பரமசாந்திக்கு இடந்தரும். அச்சாந்தியால் பரமானந்த தன்வடிவத்தில் எப்போதும் நிலைபெறும். தன்னை உள்ளபடி உணர்ந்த அந்த மனம் துக்க சுகங்களில் மூழ்காது பரம சௌக்கியமடையும்.

934. ஆ! மனமே! நீ என்ன புண்ணியங்களை எத்தனை ஜென்மங்களாகச் செய்துவந்தனையோ! இந்த அரிய பிரமச்சரியத்தில் நிலைத்து நிற்கவும், இதன் உண்மையை நினைத்தும், இதில் நழுவினவர்கள் கெடுவதைக் கண்டும், கேட்டும், உபேக்ஷிக்கவும் இதன் வழியால் யாரையும் பொருட்படுத்தாது, இறைவன் சன்னிதியே உன் உடலாகப் பெறவும் எந்நேரமும் விடுபட்ட சுகமும், ஏகாந்த சுகமும், பேரின்ப வடிவதான நிலையும் ஏகமாகக்கொண்டின்புற்ற நீ, அன்ருே கிருதார்த்தன்; ஆனல், நீ இன்னும் மிக்க அமைதியை அடை; மிக்க வைராக்கியம்பெறு; மிக்க ஆடம்பரங்களை அடியோடு விடு; என்னேரமும் என்னையேபற்றி நில்; இது பரமசுகவாழ்க்கையன்ருே! ஆம்என, நீயும் கூறுகின்ருய்! இதுதான் நல்வழி.

935. எல்லாம் தன்மயமானவை என்று அறிந்தபோது தான், சகல துர்வாசனைகளும் போகும். ஆனதால், விவேகம் செய்து யாவும் தான் என்னும் அனுபவம் வரப் பழகுதல் அவசியமாம். சுகதுக்கங்களுக்கு இருப்பிடம் சரீர அபிமானமே ஆகும்.

936. உலக விஷயங்களான மனைவி, மக்கள், பொருள், காணி, நண்பன், தேசம், வீடு முதலியவைகளில் வைக்கும் அன்பு சத்துருவின் சிநேகத்தை விட மிகக்கொடியது. சுகவடிவான தான் சகலத்தினும் மேலான ஆதர்சனுதலின் அதிகமாக மற்றவைகளில் அன்பொழித்து தன்னிடத்தன்பு வைத்தல் வேண்டும்.

937. புரக்கரணத் தூய்மை யில்லாதவன் எத்தனை தியானம் செய்தாலும் பூரண சாந்தி யடைய முடியாது. களரு சேற்றுப்பாதை மேல் காய்ந்திருப்பதைக் கண்டு அதன்மேல் நடப்பவன் படும் துன்பம் போலாகும்.

938. ஆகாரத்தின் கோளாறுகளால் மனம் அவசியம் பிழைபட்ட வாசனையை நினைக்கின்றது. அப்படி நினைப்பதின் காரணத்தை அதிகாரி அறிந்து அதன் ஏதுக்களை களைய வேண்டும். இல்லையாயின் நாளடைவில் கெடுவான்.

939. நல்வாசனை மலரில் உண்டாகின்றது. அம்மலரே, கெட்டால் துர்வாசனை உண்டாகின்றது. ஆனல், அவ்விரண்டையும் விட்டு மலர் இருக்கமுடியாது. உலகமும் சுகம் துக்கம் என்ற இரண்டின் வடிவான குணங்கள் உடையது. இவ்விரண்டில் ஒன்றையோ அல்லது அவை

கள் இல்லாமலோ உலகம் இருக்க முடியாது. ஆதலால், நல்லோர் இரண்டையும் கடந்து நிற்கின்றனர்.

940. சிறுவர்கள், வயதாகும் காலத்து பெரும்பாலும் கலியாணம் வேண்டுமா? செய்யலாமல்லவா? என்றால், வேண்டாம் என்று சொல்வதோடு புன்முறுவலாக கோபிக்கின்றனர். ஆனால், அவர்களில் உள்ளபடி வேண்டாம் என்று இருப்பவன் 10 கோடி சிறுவரில் ஒருவன் இருந்தால் இருக்கலாம்.

941. கடவுளைப்பற்றி பக்தியோடு தியானம் செய்பவருள்ளும் யாரை வினவினாலும் ஜெனனம் வேண்டாம்; வெகு துக்கமென்று சொல்லுகின்றார்கள்; ஆனால், இவர்களில் எத்தனை கோடி பேர்களில் ஒருவர் உள்ளபடி பிறவி வேண்டாமென்று இருப்பவர் இருக்கமுடியும்? யூகியுங்கள்!

942. தன்னடக்கம் உள்ளபடி இருந்தால் பரமசுகத்திற்கு அது மூலசாதனமாகும். இதனை நூல்களில், சமதமங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. அகங்காரம் எழுச்சியுண்டாகாதிருத்தல் தன்னடக்கம்; இந்திரியம் போனவழி போகாதடக்கல் தன்னடக்கம்; சரீரம் போனவழி போகாதது தன்னடக்கம்.

943. இன்று சரஸ்வதிபூஜை செய்கின்றார்கள். ஆனால், சரஸ்வதி ஸ்தானமான வாக்கை மாத்திரம் உபயோகிக்கும் முறை அறிகின்றார்களில்லை. நல்ல சத்தியமுறையில் வாக்கியத்தை உபயோகிப்பதே சிறந்த சரஸ்வதிபூஜை.

944. நிராசையே பரம சொர்க்கம். ஆசையே பரம நரகம். நிராசை உள்ளவன்தான் தூயகாரியங்களில் தடையின்றி செல்லமுடியும். அதனால், சீக்கிரம் மோக்ஷம் பிராப்தியாகும்.

945. பாரமான மரங்களும் ஜலத்தில் மிதக்கும்; உள்ளே செல்லாது. எவ்வளவு சங்கடமான துன்பசுகங்கள் வந்தடைந்தாலும் ஞானியின் பிரம்மானந்த சாகரத்தில் நுழையாது. அதனால், அநுபவ சமஸ்கார விருத்தியில் வாசனையாக இவைகள் செல்லாவாம்.

946. செல்வர்களுக்கு பொருளில் பிரியமிருப்பது போலும், ஏழைகளுக்கு ருசியான அன்னம் பிரியமாய் இருப்பது போலும், வாடின பயிர்களுக்கு மழை அதிகப்பிரியமாய் இருப்பதுபோலும், அப்பியாசிகளுக்கு மந்திர வாக்கிய அர்த்தானுசந்தானம் அதிகப் பிரியமாய் இருக்கும்.

947. மலையிலுள்ள மரங்கள் தாமே தீயை உண்டாக்கிக் கொண்டு தாமே வேகின்றன. அறிவிலிகள் தாங்களே ஆசையை உண்டாக்கிக்கொண்டு தாமே அதனால் துன்பமடைகின்றனர்.

948. அபரோக்ஷ ஞானம் பெற்ற மகான் தனது அநுபவ நிலையை சுபாவ பிரயத்தனத்தால் நிலைக்கச் செய்கின்றான். அப்பியாசி அவ்வபரோக்ஷ சாதன ஆன்மாகார விருத்தியை வருத்தத்தால் முயன்று சம்பாதிக்கின்றான். ஆனால் அந்த ஞானியின் விருத்தி சுபாவமாகச் செல்லும். அப்பியாசியின் விருத்தி பாரங்கொண்டவன்போல ஏங்கிச் செல்லும்.

949. ஆன்மாவைப்போல் மனமும் களங்கமற்று நின்றால் ஒழிய அபரோக்ஷ ஞானம் உண்டாகாது. ஆனால், மனத்தின் களங்கமும் ஆன்ம தியானத்தாலேயே போகும்.

950. ஆசாரிய அநுக்கிரகமில்லாதவன் செய்யும் தியான சாதனங்கள் தாயில்லாக் குழந்தையின் தேகவளர்ச்சியைப் போல் நல்ல பலனைத்தராது.

951. சுத்த ஆபாசர்களும், நல்லவர் முன் பொய்யுரைக்கப் பயப்படுகின்றனர். ஆனதால், முமூக்ஷு தனக்கன்னிய மான தேகங்களைத் தானென்பது எவ்வளவு பெரிய அசத்தியப் பொய்யாகும். ஆன்ம சன்னிதியில் பொய்யுரைப் பவன், நினைப்பவன் மீளாத துன்பமடைவன். ஆனதால், முமூக்ஷு ஒரு போதும் தேகம் நான் எனல் ஆகாது.

952. **வைராக்கியம்** இன்றியவன், செய்யும் சாதனை கள், ஒன்றும் பலனைத்தராது. வைராக்கியமே மோக்ஷ ஏது. வைராக்யமே பல சாதனங்களிலும் மிகச் சிறந்தது.

953. ஒரே மந்திரத்தை அர்த்தத்தோடு ஜபம் செய்து வருதல் வேண்டும். அதனையும் வெகுநேரம்; இப்படிவெகு நாள் செய்து வந்தால், அதன் பலன் தெரியும். இதனல் தான் **வைராக்கியம், விவேகம், தியானம்** இவைகள் கை கூடும்.

954. மனதை ஆத்ம தியானத்தால் பரிபக்குவமாக்கிவிட் டால் அது ஆன்ம நோக்கத்தால் சத்துரு, மித்துரு இரு வரையும் உபேக்ஷித்து அசலத் தன்மையை அடைகின்றது. அதனல், தடையற்ற சுகம் மனத்திற்கு லபிக்கும். இதனல் அப்பியாசிகள் அகண்டான்ம தியானத்தால் அபரோக்ஷ பரியந்தம் **மனத்தை** அகமுகமாக்கல் வேண்டும்.

955. சூரிய வெளிச்சத்தின்முன் பேய்கள்போல பரமான்ம ஞானத்தின்முன் பேய்களாகிற பேதங்கள் இல்லை. பேதம் ஒழிந்ததும் பேரின்பம் தடையற்றதாகின்றது.

956. செல்வத்தின் பெருமை **அகங்காரம்** உள்ளமட்டும் தான். அகங்காரம் நீங்கின பின் அவனுக்கே செல்வம் சாம்பலாகவே தோன்றும்.

957. நன்மார்க்கமென்பது, தீயமார்க்கங்களினின்றும் விலகியிருப்பதல்ல; அதனோடு நல்ல குண சம்பன்னனாய் நற்கருமமுடையவனானால்தான் நன்மார்க்கமுடையவனாகலாம்.

958. எந்தப் பிறவியிலும் கவலையுண்டு; ஆனால், கவலைக்கிடமான சரீரப்பற்று நீங்கினால் துக்கமில்லை.

959. கம்பளத்தின் கறுப்பை நீக்குவதைவிட, கம்பளியை எறிந்துவிடுவது நலம். பெண்ணையும், பொன்னையும் வைத்துக் காப்பாற்றுவதைவிட அவைகளை அடியோடு விடுவது நலம்.

960. தியானத்திற்குச் சமானமான பரிசுத்தமில்லை. ஞானத்திற்குச் சமானப் பிரகாசமில்லை. முத்திக்குச் சமான சுகமில்லை. பொறுமைக்குக் சமான குணமில்லை. அஹிம்சைக்குக் சமான தருமமில்லை.

961. ஒருவனுக்கு துக்கம் வந்ததென்றால், அது தான் செய்த பாவம் என்றறியவேண்டும். அத்துக்கம் எவர் முன்னிலையில் உண்டானது ஆனாலும் அதைத்தரும் சக்தி அவருக்கில்லை. அது இறைவனால் நாம் செய்ததைப் பக்குவப்படுத்தி அவரால் கொடுக்கப்பட்டதென்றறிந்து, அவரிடம் துவேஷிப்பதைவிட்டு இனி பாவம் செய்யாதிருக்க வேண்டி தயாராக வேண்டும்.

962. உபவாசமிருப்பதால் நல்ல எண்ணங்களும், அதனால் தவமும், அதனால் நன்முயற்சியும், அதனால் ஞானவழி அனைத்தும் ஒழுங்காக நடைபெறும். அவைகளால் பரம சாந்தியுண்டாகும்.

963. மனச்சந்தோஷமுடையவனுக்கு வியாதி, பசி அல்பமாகின்றன. பரமானந்தானுபவிக்கு, மாயாப் பிரபஞ்ச ஆடம்பரங்கள் மிக்க அல்பமான சொர்ப்பனமாகின்றன.

964. பரம்பொருளின் அகண்டத்தன்மையை உள்ளபடி அறிந்தவர் ஞானிகள் என்கிறோம். ஆனால், அவர்கள் உலகில் வியவகாரம் செய்யும்போது பிறரைப்போலவே பரிச்சின்ன புத்தியுள்ளவர் போல காணப்படுகின்றதே எனில், புருஷருக்கு புருஷத்துவ அனுபவமும் பாகிய விவகாரமும் கூடியிருப்பதுபோல், ஞானிக்கு அகண்டானுபவமும் விவகாரமும் அமுக்கியமாக இருக்கலாம்.

965. சௌச முதலியவைகளால் தேகத்தின் பாகிய சுத்தியுள்ளவர்களுக்கு பிராண சுத்தியும், அதனால் இந்திரிய மனங்களின் சுத்தியும், அதனால் ஜீவ ஒழுக்கமும், அதனால் சாதுசங்க சேர்க்கையும், அதனால் சிரவணாதிகளும் அவைகளால் மோக்ஷ ஏதுவுமாகும்.

966. பிரஜைகளுக்கு தந்தையும் உலகஅதிஷ்டானனுமான பரமாத்மா யாருக்கும் எப்போதும் துவேஷ முடையவனாக ஆகிறதில்லை. ஆதலால், அதிகாரி அதை அறிந்து பரமேஸ்வரனிடத்தில், இடைவிடாத அன்புடையவனாக இருத்தல் வேண்டும்.

967. லௌகீகமாகட்டும், அலௌகீகமாகட்டும், முயற்சி உள்ளவனுக்கு அது ஒரு முடிவை வெளிப்படுத்துகின்றது. ஆனதால், புருஷர்கள் எவ்வகையாலும் நன் முயற்சியை விடாது செய்துவரல் வேண்டும். அதனால் மனம் வெகு விரைவில் சுத்தியடையும்.

968. பக்தியில் ஈடுபட்டவர்களுக்கு எல்லாம் பரமேஸ்வரனாகின்றன. யாவும் அவனது லீலைகள். திவ்ய மானபரமானந்த சுபாவமே யாவுமெனக்கண்டு களிப்புறுகின்றனர். பக்தியால் மனமும், அகங்காரமும் அடியோடு வீழ்ச்சியடைகின்றன. ஆனால், ஞானத்தால்தான் யாவும் பஸ்மமாகும்.

969. சுகம், துக்கம் இரண்டும் மனத்தின் பரிணாமம். நீ, இப்பரிணாம மனத்தின் அன்னியமாய் ஆனந்த நித்தியனாயுள்ளாய் என்பதை அறிந்து, இம்மனத்தின் பரிணாமங்களை விட்டு நில். அது இன்னும் எவ்வளவு பரிணாமங்களை அடைந்தாலும் அடையட்டும், அதனால் உனக்கான லாபமில்லை.

970. நல்ல நிராசை வடிவமான வைராக்கியம் பூரணமாக உடையவன்தான், சர்வலோகங்களிலும் சிரேஷ்டமான பிரபுவாவான்.

971. கிடைத்ததைக்கொண்டு திருப்தியை அடைபவன் பரமசுகம் உடையவன். அவன் மனது எப்போதும் சலனமற்றிருக்கும்.

972. அஞ்ஞானம் பரிணாமமடைந்து தூலமாகி கடைசியாக பெண்ணென்றும், பொன்னென்றும் இருவடிவம் அடைந்துள்ளது. இதில் விழுந்தவன் ஒருக்காலும் சுகமடையான்.

973. பாமரர்கள் கடவுளை ஒருவாறு நியமமின்றி தொழுகின்றனர். பண்டிதர்கள் கல்வியால் கடவுளை வாழ்த்தி துதிக்கின்றனர். அப்பியாசிகள் கடவுளை இடைவிடா தியானத்தால் அன்புகூர்ந்து சேர எண்ணுகின்றனர். ஞானிகள், கடவுளின் உண்மைவடிவ நிர்க்குண சொரூபமாகவே நிலைத்துள்ளனர்.

974. அதிகப்பேச்சு பேசுகின்றவர்கள் எந்த காரியங்களையும் ஒழுங்காக செய்து முடிக்க முடியாது என்றால், கடவுளின் விஷயமாக அவர்கள் எப்படி தியானம் ஒழுங்காக செய்யமுடியும்?

975. லௌகீக காரியங்கள் எவ்வளவு திருத்தப்பட்டாலும் அது அத்தனையும் கோணலாகவே உள்ளது. என்ன காரணம்? அதன் சொரூபமே அவ்வளவுதான் அதைவிடுவதே சுகம்.

976. பிரம சரியத்தில் அநேகர் பயப்படுகின்றனர். அதற்கு அவர்கள் காம உணர்ச்சியே காரணம். கடவுள் உணர்ச்சி மேம்பட்டவர்கள்தான் காம உணர்ச்சியை கெடுக்க முடியும். அவர்கள்தான், பிரமசரியத்தை காப்பாற்றவும், அதன் பலனை நன்கு அனுபவிக்கவும் முடியும்.

977. அப்பியாசி ஆரம்பத்தில் மனம் அடங்கவில்லையே என்று பயப்பட வேண்டாம். முதலில் நல்ல எண்ணங்களை பழக வேண்டும். அதனோடு தீய எண்ணங்களையும் எண்ணங்களுக்குரிய பொருள்களையும் மனம் நாடாதபடி தடைசெய்ய வேண்டும். இவ்வப்பியாசத்தால் கொஞ்சம் வெற்றி பெற்றால், பிறகு மனம் அடங்குவதைக் காணலாம். அப்பியாசம் அப்போது பலன் தரும்.

978. அறிவுள்ளவர்கள், மனத்தைப் பண்படுத்துவதில் அதிக சிரத்தையுடையவராக இருக்கின்றனர். அதனால், அவர்கள் உலகரில் சிறந்தவராகின்றனர். இவர்கள்தான் ஸ்ரீ ராமர் கிருஷ்ண பகவான், ஸ்ரீ புத்த பகவான், ஸ்ரீ சங்கரர் போன்றவராவார்.

979. கடமென்று பார்ப்பது பொய், மண்ணென்று பார்ப்பது மெய். உலகமென்று பார்ப்பது பொய், யாவும் தானன சின்மயமாகப் பார்ப்பது மெய்.

980. ஒரு சங்கியாசி பிறருக்கு செல்வ முதலியவைகளால் இதஞ்செய்ய முயற்சித்தல் கூடாது. அதனுல், அனேக அனர்த்தங்கள் அவனுக்கும் பிறருக்கும் உண்டாகும்.

981. துறவு, விகிதமான யதேச்சை உடையவனு யிருத்தல் வேண்டும். அதனுல், நல்ல துறவு உண்டாகும். அதனுல், மனம் பரம சுகமடையும்.

982. துறவிக்கு, தியானமும், விசாரமும், நூல்பழக்கமும், தனியிடமும் பிரதானச் செல்வம்.

983. துறவி, சிலநாள் பிக்ஷை கிடைக்காமல் துன்பப்படலாம். அது துன்பமல்ல; செல்வம் சேமித்து வைப்பதுதான் துன்பம். பட்டினிகிடத்தல்; பிராரத்தானுசாரமாகும். அதுவும் தபசாகும்.

984. செல்வம், துக்கமென்பது மிகப்பிரசித்தம். இதனை, வைராக்கியமின்றிய மனிதன் உண்மையாக அறியாததால் அதனையே மீண்டுமீண்டும் செல்வம் இதுதான் என்று நாடுகின்றனர். நெருப்பினும் மிகக்கொடியது செல்வம்.

985. கொதிக்கும் ஜலத்தில், தங்கமாத்திரை எத்தனை அலைக்கப்பட்டாலும், அது தன் நிலையில் மாருது. சலித்து அலைக்கப்படும் உலககாரியங்களில், மனிதன் எத்தனை கவலைக்கிடமான சலனங்களை அடைந்தாலும், ஞானியின் பிரஹ்மாகார மனம் ஒருவகையிலும் தான் தன் நிலையை விடாது. எங்கு அலைக்கப்படினும் சுகமாகவே இருக்கும்.

986. ஆ செல்வமே! நீ எவ்வளவு துஷ்டன். உன்னைப் போல் எமன் யாருமே இல்லை. ஆனாலும் உன்னையே பொருளாகக்கருதி மனிதன் உன் ஆபத்தே வடிவமாக மாய்கின்றான் அல்லவா? பாவம்! பாவம்!! பாவம்!!! நீ, துலைந்தால் உலகம் வெகு சுகமாகும்.

987. பெரியமலைகளையும், ஆறுகளையும், சமுத்திரங்களையும், பயங்கரமான பாலைவனங்களையும் கடக்கும் மனிதன், எள்ளளவும் தூல வடிவமற்றதும், விசாரிக்க இல்லாமையே சொரூபமுமான மனத்தின் காமத்தைக் கடக்க முடியவில்லை. இது என்ன வெட்கம்! என்ன அறியாமை! இவனை எப்படி புருஷனென்னலாம்?

988. தெய்வபக்தியுடைய ஒரு பெரியார் சேர்க்கை கிடைப்பது மிகதுர்லபம். இதுதான் பரமானந்த சாதனங்கள் யாவற்றிற்கும் முதல் துவாரமாயிருப்பது. பெரியாரின் சம்பந்தத்திற்குச் சமானமாக எப்பொருளின் சம்பந்தமும் அவைகளின் பலனுமில்லை.

989. உறமில்லாத நிலத்தில் பட்டஉழைப்பும் இட்ட விதையும் பயனற்றதேயாகும். அறிவில்லாத மந்தருக்கு கூறிய விவேகமும், அவருக்கு உதவிய உபதேசமும் பயனற்றதாகும்.

990. உனக்கு யாது நேரினும், எல்லாம் தெய்வச்செயலென்றும் முன்வினை என்றும் அன்போடு ஏற்றுக்கொள். அதனால், அசைவற்ற திட்பம் உனக்குண்டாகும். அதனால் உன்நிலை உயர்ந்து சதா ஆனந்த வாழ்க்கையை உடையவனாவாய்.

991. விஷய பாவனையால் சித்த சஞ்சலமுண்டு. அதனுல் சித்தம் தூலமாம். அதனுல் ஆன்மவாசனை கெடும். அதனுல் சர்வானர்த்தங்களும் உண்டாகும். சகலமும் மித்தை அல்லது சகலமும் தான் என்ற பாவனையால் சித்தசஞ்சலம் போம். அதனுல் மனம் எகாக்கிரமாகும். அதனுல் ஆன்மாவைப்பற்றிய சமாதி உண்டாகும். அதனுல் சகல அனர்த்தங்களும் போம்.

992. செல்வம், பெறும்வழி தெரிந்த புத்திமான் அதன் வழியை உலகத்தவர் பேசும்போது கேட்டமாத்திரத்தில் உடனே தேட ஆரம்பிப்பான். பக்தியில், ஈடுபடும் புண்ணியம் முன்னுள்ளவனும் அதில் ஒழுக பிரியமுள்ளவனுமான ஒருவன், பக்தியையுடைய நூல்களைப் படிக்கும்போதும், அதை பக்தர் பேசும்போதும் மனம் குழைந்து பகவானிடம் பிரேமை செய்வான்.

993. மரம் அறுக்கும் வாள் இரும்பை அறுக்காது. இரும்பை அறுக்கும் வாள் மரம்அறுக்க உதவாது. ஞானத்தில், ஈடுபட்ட மனம் உலகநடையில் பிரயோஜனமாகாது. உலக நடையுடைய மனம் ஞானவழியில் செல்லாது.

994. மனம், சாந்தி யடைந்தால் சகலமும் சுகமாகவே அனுபவமாகும். ஆனுல், அணுவினும் அணுவான பரமான்ம அநுபவம் வேண்டின், தூலமான மனமும சூக்குமத்தினும் சூக்குமமாக வேண்டுமல்லவா? ஆகையால்தான், வேத உபநிடதங்கள் மனத்தின் பரிபக்கும் அவசியம் ஞானத்திற்கு வேண்டுமென்று முறையிடுகின்றன.

995. கோபத்திற்குச் சமானமான கெடுதல் வேறொன்றுமில்லை. இது முதலில் தன் சரீரத்தைக் கெடுத்து, பின்னர்

தவத்தையும் கெடுத்து, சரீர வியாதியையும் உண்டாக்கி, பரமசாந்திக்கு இடமில்லாமல் செய்கின்றது.

996. கரையற்ற அதிகச்செல்வம்படைத்தாலும், அவ்வளவும் துன்பமுண்டு. அதை அடியோடு விட்டால் பரமசுகமுண்டு.

997. கெட்டவர், நல்லவர், யாவரும் தானென ஆன்மா என்று பார்த்தால், கோபதாபங்களுக்கு இடமில்லை; பிறப்புமில்லை; தடையற்ற **ஆனந்தமாம்.**

998. கருணைக்கடலான இறைவன் திருவருள் நிறைந்துள்ள சாது, என்றும் நன்மதிப்புடையவனாகவும், பரமானந்தனாகவும் இருப்பான். அச்சாது, இடைவிடாத கடவுள் பிரேமையால் திருவருளைப் பெற்றவனுமாவான்.

999. சூரியப்பிரகாசத்திற்கு, எங்கும் தடையில்லை. ஆனால், ஒருவன் கூரைமேய்ந்த வீட்டினுள் கூரையின் தடையால் அப்பிரகாசம் நேரே விழுவதில்லை. இறைவன் திருவருள் எங்குமுள்ளது. அத்திருவருளுக்குத் தடையில்லை. ஆனால், நான் மனிதன், நான்குடும்பி என்ற **அபிமான முடைய** தடையில் நேரே திருவருள் சிறந்து வெளிப்படுவதில்லை.

1000. நன்மை, தீமை, சுகம், துக்கம் முதலிய யாவும் அவனதே என்று நாம் நன்ருகப்பார்க்கும்போதுதான், நாம் தடையே அற்ற அநுபூதி பெறவழியாகும்.

1001. மனத்தின் நிரோதத்தால் உண்டாகும் பரமானந்த நிலை, முன்னும் உள்ளதேனும் மாசுள்ள நெஞ்சில் விளங்குவதில்லை. மீண்டும் மீண்டும் செய்யும் அப்பியாசத்தால் அது இன்னும் அதிகமாக விளங்கும்.

1002. செல்வவானும், பண்டிதனும் உலகின் தூல சூக்கும விஷயங்களை ஆராய்ந்து அறிபவராவார். வைராக்கியசீலன் உலகை அடியோடு விட்டவனாவான்.

1003. ஆன்மாவிற்கு, அகம் புறம் என்பதில்லை. உடலைப் பற்றியே அகம் புறம் என்பதெல்லாம். ஆதலால், நான் எங்கும் பரந்த வெளிவடிவினன், என தன்னை அநுபவிக்கும்போது அபிமான மெல்லாம் அடியோடு தானே நாசமாகும்.

1004. மாயா காரியங்களில் சுத்தமென்றாவது அசுத்த மென்றாவது ஒன்றுமில்லை. இப்படி பிரித்துப் பார்ப்பதும் குறைந்த மனம்தான். எல்லாம் ஒரே அசுத்தமென்று அவை களை விட்டிருத்தலே பரம சுத்தம்.

1005. ஜலம் நிறைந்த பாத்திரங்கள் பலவற்றுள்ளும், துவாரமில்லாதவற்றில் நிறைந்திருக்கும். சிறிது, பெரிது மான துவாரமுள்ளவைகள் முன்பின்னாக ஜலம் ஒழிகிவிடும். வைராக்கியம், உதாரம், அடக்கம் முதலாகிய நற்குணங்கள் நிறைந்த மனமுள்ளவர்கள், நல்ல பிரதிபந்தமின்றிய ஞான சுகம் பெற்றிருப்பர். குணங்கள் சேமித்து வைக்கப்பட்டும் அவைகளைக் காப்பாற்றாமல், அவைகளில் ஒன்றிரண்டை அலக்ஷியமாக எண்ணி விட்டுவிட்டால், முன்பின்னாக குணங்கள் எல்லாம் நழுவிவிடும். பிறகு மிருகம் போன்ற வராகவே இருப்பர்.

1006. மனிதன், தன் ஆயுளில் பெறவேண்டியது எது? என்பதை நல்ல ஞானியின் இடம் தான் தெரிந்துக்கொள்ள முடியும். அவரும் பக்குவமுள்ளவருக்குத்தான் உண்மையை போதிக்க முடியும்.

1007. அழுக்கில், அழுக்கில்லா திருக்கமுடியாததுபோல, கருமங்களில் குற்றமில்லாதிருக்க முடியாது. ஆதலின், நீ, அசங்கனுக இருந்துக்கொள். இது தான் அழுக்கற்ற ஸ்தானம்.

1008. ஆசையே காலன், ஆசையே நரகம், ஆசையே விஷம், ஆதலால் ஆசையேதுக்கம். ஆசையை விட்ட இடமே அமரம். ஆசையை விடுவதே சொர்க்கம். ஆசையை நசித்தலே அமிர்தம். ஆதலால், ஏ மானவா! நீ ஆசையை விடு! ஆசையை விடு! இந் நிராசையே பரமானந்தம்.

1009. ஆசாரிய சிரேஷ்டரான பூஜ்யபாத ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகளின் உண்மை சரிதம் பக்குவர்களுக்கு அவசியம். அவர்கள் எங்கு எக்காலத்தில் தியானம் செய்து நிஷ்டை கூடினர், என்பதை நன்கு தெரிந்தவர்கள், தியான நிஷ்டையில் சோம்பல் கொள்ளார்கள்.

1010. நூலை வாசிக்கின்றவர் எவ்வளவு சிரத்தை வைத்து வாசிக்கின்றனரோ, அவ்வளவில் நூல் பொருள் விளங்கும். குருவிடம், எவ்வளவு சிரத்தைவைத்து உபதேசம் பெறுகின்றனரோ, எவ்வளவு சிரத்தையோடு அநுஷ்டானம் செய்கின்றனரோ, அவ்வளவு சீக்கிரம் உறுதியான பயன் பெறுகின்றனர்.

1011. மனு முதலிய அக்காலத்திய பெரியோர்கள் கூறிய நீதிகள் இக்காலத்திற்கு யாவும் ஒவ்வாது. அவைகளில் சில தள்ளிவிடவேண்டி வரும் இதுபோல், சகல அனுன்ம தருமங்களும், எக்காலத்திற்கும் எவ்விடத்தும் பொருந்தாது. ஆனுல் அவர்கள் கூறும் பிரஹ்மஞ்ஞானம் மாத்திரம் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் பொருந்தும்.

1012. மனிதன், தன்மனம் இந்திரியங்கள் இவைகளைத் தூய்மை செய்யும் வழியான கர்மங்களைச் செய்வதுதான் நல்ல தருமமாகும். அதுதான் சட்டமாகும். மற்ற நூல் சட்டமெல்லாம் ஒருவாறுதான் பொருந்தும்.

1013. தன்னைத் திருத்திக் கொண்டவன், சமூகங்களைத் திருத்த முடியும். ஆனதால், இறைவனை நாடிச்செல்லும் அதிகாரி வெகுதிருத்தமாகத் தன்னை பரிசுத்தம் செய்ய வேண்டும்.

1014 வைராக்கியம், சுகம் என்று அனேகருக்குத் தெரியும். ஆனால், அதை அநுஷ்டிப்பவர் கோடியில் ஒருவர் என்பது அருமையாகும்.

1015. ஒருவன் ஞானவழியில் பயிலும்போது தினந்தோறும் அப்பியாசம் செய்து வந்தாலும், நூல், குரு இவர்கள் முறைப்படி ஒருநாள் முழுவதும் முன்னர் நடக்கவேண்டும். 5 நாளாவது அவ்வழியைப்பின்பற்றி அவ்வாறே என்றும் ஆக்கிக்கொண்டால் பெரும்பயன் கிடைக்கும்.

1016. குருடனும், மார்க்கம் தெரிந்து கேட்டு நடக்கிறான் என்றால், கற்றவன் ஞானவாழ்க்கையில் முன்னேற்றமடையாதது முயற்சியின்மையால் அல்லவா?

1017. கறுப்புச்சட்டையும் வெள்ளைத் தலைப்பாகையையும் அணிந்துக்கொண்டால், உலகம் பெரியவனென்று உன்னை நம்பிவிடாது! மனம் தூய்மையாயிருத்தலும், இறைவனிடம் ஈடுபட்ட முயற்சியுமிருந்தால்தான் நீ, நல்லவனாக உலகம் கொள்ளும்.

1018. மாறாத ஆனந்தம் வேண்டினுல், ஓயாது ஆன்மாவில் நிலைத்திரு.

1019 கிரகங்கள் ஒன்பதில் சூரியன், சந்திரன், இரண்டும் வக்கிரம் அடைவதில்லை. மற்றவை வக்கிரம் அடையும். உலகிலுள்ள பிரஜைகள் செய்யும் காரியங்களில், முயற்சியுள்ள ஞானியும் பக்தனும் பின்னடைவதில்லை. மற்றையர் எல்லாம் முன்னும் பின்னுமாகவே செல்லுவர்.

1020. பெரியார்களின் நோக்கங்கள் யாவும் உலகுக்கு உபயோகமாகும் என்றதல்ல. ஆனுல், அந்நோக்கங்களின் பயன் முன்னதாக அவர்களின் மனக்குழப்பங்கள் நீங்கி சாந்தியடையச் செய்வது தான். பின்னர், உலகபக்குவத்திற்கேற்க அந்நோக்கங்கள் தேசகாலங்களுக்கேற்றவாறு பயன் படுகின்றன.

1021. தியானத்தில் உதிக்கும் வாசனைக்குப் பயப்பட வேண்டாம். அவைகளின் சொரூபத்தைப் பார். இல்லாதனவென்று உனக்கு விளங்கும். உனக்கே அதன் மித்தையைக் கண்டு நகைப்புண்டாகும். மிக சுத்தமான மனம் என்று ஒன்றுமில்லை. எல்லாம் பாழ்! இவைகளை எல்லாம் தள்ளி நில்! நின்றவிடம் நீ! நீயே நித்தியானந்தன்.

1022. சந்நியாசிக்கு நிராசை அழகு. குடும்பிக்கு தோஷமற்ற செல்வம், கருமம் அழகு. ஆனுல், ஆனந்தம் வேண்டில் யாவரும் மனவடக்கம் சம்பாதிக்கவேண்டும்.

1023. இழிதொழில் செய்யும் உயர்ந்தவனை விட, இழிதொழில் செய்பவனே நல்லவனுவான். தியானம், நிராசை

யிழந்த சந்நியாசியைவிட, லௌகீகமும், ஆசையும் நிறைந்த குடும்பியே சிறந்தவன்.

1024. புலியின்பால் புலிக்குட்டிக்குத்தான் உதவும். பசுவின்பால் அதன் கன்றுக்கும் மனிதருக்கும் உதவும். பொருட்செல்வம் இவ்வுலகில் சிலருக்குத்தான் உதவும். அருட்செல்வம் எல்லா உலகங்களுக்கும் உதவும்.

1025. தீனதயாளுவான இறைவன்கருணை எப்பொழுதும் சுரந்தவண்ணமாக இருக்கின்றது. நிழலை அடைந்தவர்களும் கங்கையில் மூழ்கினவர்களும் போல அவ்விறைவனை இடையறாது நாடினவர்கள் அவரருளைப் பெறுகின்றனர். ஆன்மானந்தம் ருசித்த மனதிற்கு மற்றய விஷய சுகங்கள் ருசிப்பதில்லை.

ஓம் தத் ஸத்.

பிழை திருத்தம்

பக்கம்.	பாரா.	பிழை	திருத்தம்
4	13	தீயாழுக்கமே	தீயொழுக்கமே
6	23	லீணே	வீணே
7	26	பத்தியமிருந்தல்	பத்தியமிருத்தல்
7	29	ஜலக்தால்	ஜலத்தால்
9	37	கருப்பானுலும்	கறுப்பானுலும்

பிழை: 9-வது பக்கத்தில் 38வது பாரா சரியாக இல்லாததால் திருத்தத்தில் உள்ளபடி வாசித்துக்கொள்ளவும்.

திருத்தம்: தசரதன் ஸ்ரீராமனுக்குப் பட்டங்கட்டவேண்டுமென்றும், கைகேயி பரதனுக்குப் பட்டங்கட்டவேண்டுமென்றும் மிக்க ஆசை கொண்டனர். அவ்வாசையான தோஷத்தால் இருவரில் ஒருவருக்காவது பட்டாபிஷேகம் செய்யமுடியவில்லை. பாதுகைக்குத்தான் கிடைத்தது. **நிராசையால்** ராமன், பரதன் இருவரும் சுகமடைந்தனர்.

பக்கம்.	பாரா.	பிழை	திருத்தம்
11	45	திண்பண்டங்களை	தின்பண்டங்களை
13	54	குறங்கு	குரங்கு
13	54	குறங்கின்	குரங்கின்
13	54	குறங்கை	குரங்கை
14	60	மோர்வார்தசத்து	மார்வார்தேசத்து

14ம் பக்கம் 58 வது பாரா வரிசை தவறி கீழே அச்சிடப்பட்டிருப்பதால், அதை வரிசைக் கிரமத்தில் வைத்து வாசிக்கவும்.

பக்கம்.	பாரா.	பிழை	திருத்தம்
15	64	எய்துகிருனை	எய்துகிருன்
15	65	எரிந்தாள்	எறிந்தாள்
17	75	சுகல	சகல

பக்கம்.	பாரா.	பிழை	திருத்தம்
26	116	பரமமேஸ்வர	பரமேஸ்வர
31	140	அவவிஷய	அவ்விஷய
31	143	ஞான்முண்டென்பது	ஞானமுண்டென்பது
31	143	வருத்த	வறுத்த
32	143	வருத்த	வறுத்த
32	148	அவினிஷ்டப்படி	அவனிஷ்டப்படி
37	179	எண்ணுகின்றனே	எண்ணுகின்ருனே
40	192	அவிவிவேக	அவிவேக
41	201	அணுளவு	அணுவளவு
42	207	நீங்கனபின்	நீங்கினபின்
42	207	அஞஞானமும்	அஞ்ஞானமும்
43	214	தின்பதற்குக்தான்	தின்பதற்குத்தான்
46	226	படிததுப்	படித்துப்
46	229	கடிஞமாஞலும்	கடினமாஞலும்
46	230	பிடித்துகொண்டு தான்	பிடித்துக்கொண்டு தான்
48	237	கடந்துவிடுகிரேன்	கடந்துவிடுகிருன்
50	248	யுக்தியுால்	யுக்தியால்
55	278	இதனுண்யையைத்	இதனுண்மையைத்
58	295	மயர்க்கூச்சல்	மயிர்க்கூச்சல்
61	306	ஒழிந்தார்சள்	ஒழிந்தார்கள்
63	319	ஆனன்ம	அனன்ம
64	326	மாரிவிடும்	மாறிவிடும்
64	326	ஆன்மாவாவே	ஆன்மாவாகவே
65	337	யாதொன்றைவும்	யாதொன்றையும்
67	348	இருவக்கும்	இருவருக்கும்
68	356	ஆடையைணிதல்	ஆடையையணிதல்
69	357	வேண்டுமென் றென்னுகின்றனர்	வேண்டுமென் றெண்ணுகின்றனர்
71	373	முலம்	மூலம்

ம்.	பாரா.	பிழை	திருத்தம்
	391	ஒரு முனையை	ஒரு முனையை
	3[illegible]	நிச்சிலமாக	நிச்சலமாக
	397	கையலிருக்கிறது.	கையிலிருக்கிறது.
	472	ஞானக்கினி	ஞானாக்கினி
	515	முன்றேற்ற	முன்னேற்ற
	516	வேறுபட்டால்	வேறுபாட்டால்
	590	அதிசுப்	அதிகப்
	602	செய்யும்போது	செய்யும்போது
	609	கலவிச்	கல்விச்
	633	குறங்கும்	குரங்கும்
	,,	குறங்கு	குரங்கு
	641	அவிவிசாரத்தால்	அவிசாரத்தால்
	643	அருத்து விட்டோமாயின்	அறுத்து விட்டோமாயின்
	648	பசியுண்டாகும படிக்கும்	பசியுண்டாகும் படிக்கும்
	656	ஆதார	ஆகார
	667	எள்ளவும்	எள்ளளவும்
	669	ஆதமீக	ஆத்மீக
	675	உபத்திரமும்	உபத்திரவமும்
	703	செய்துவருதால்	செய்துவருவதால்
	730	ஞான நனவில	ஞான நனவில்
	770	பிரரிடம்	பிறரிடம்
	771	சிறதளவே	சிறிதளவே
	778	வயேதிகத்தின்	வயோதிகத்தின்
	802	ஆவிர்ப்பவீத்து	ஆவிர்ப்பவித்து
	835	அஹிம்சை யுடைதாகும்	அஹிம்சையை யுடையதாகும்
	861	எள்ளவும்	எள்ளளவும்
	868	காணுதற்கு	காணுதற்

பக்கம்.	பாரா.	பிழை	திருத்தம்
153	881	பெறுக்கும்	பெ[illegible]
153	881	செுல்வம்	செ[illegible]
158	909	ஞானியின	ஞானியின்
168	960	அஹிம்சைக்குக்	அஹிம்சைக்குச்
170	968	திவ்ய மானபரமானந்த	திவ்யமான [பரமானந்
173	989	மந்தருக்கு	மாந்தருக்கு
177	1010	அவ்வளவு	எவ்வளவு
177	1010	எவ்வளவு	அவ்வளவு